உ
சிவமயம்

# வைத்தீஸ்வரா

## பழைய மாணவர் சங்க
## பொன் விழா மலர் – 2003




60.035

# VAIDYESHWARA

J/Vaideshwara College - Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/12061

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

# பழைய மாணவர் மன்றம்

# Old Students' Association

# பொன்விழா மலர்

# GOLDEN JUBILEE

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

*J/ Vaidyeshwara College*

*Jaffna.*

**2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

- நடராஜர்
- இராமகிருஷ்ணர்
- கல்லூரிக் கீதம்
- நிறுவுநர் நாகமுத்து
- பழைய மாணவர் மன்றம்
- லண்டன் பழைய மாணவர் சங்கம்
- ஆசிரியர் ஆளணியினர்
- இதழாசிரியர் இதயத்திலிருந்து i - ii
- ஆசிரியுரைகள், வாழ்த்துரைகள், பாராட்டுக்கள் iii - xix


**மலருள் சொட்டும் தேன் துளிகள்..........**


| | | |
|---|---|---|
| 01. | புண்ணியங்கோடி தேடிய புண்ணியர் நாகமுத்து | 1 - 3 |
| 02. | Glimpses of our Alma Mater | 4 |
| 03. | வித்தியாலயத்தைப் பற்றிய சில நினைவுகள்.... | 5 - 6 |
| 04. | Swami Vipulananda Some Reminiscences. | 7 - 9 |
| 05. | வண்ணைத் தமிழ்ப் பண்ணைக்கு காந்தி அடிகளின் விஜயம். | 10 -11 |
| 06. | We are proud of our Alma mater | 12 |
| 07. | மும்மூர்த்திகள் | 13 - 15 |
| 08. | மும்மூர்த்திகளில் ஒருவர் | 16 |
| 09. | பெரு விழாக்கள் கண்ட வைத்தீஸ்வரா | 17 |
| 10. | யாழ். முஸ்லிம்களின் வரப்பிரசாதம் வைத்தீஸ்வரா | 18 - 19 |
| 11. | ஆரம்பப் பள்ளி அந்தநாள் ஞாபகம்...... | 20 -22 |
| 12. | பள்ளி வளர்ச்சியில் பழையவரின் பங்கு | 23 -24 |
| 13. | பாடசாலையும் கல்வியும். | 25 - 27 |
| 14. | வித்தியாலயத்தின் தனிப்பெரும் பாரம்பரியம் | 28 -29 |
| 15. | அறிவுப்பசி தீர்த்த எங்கள் கல்லூரித்தாய் | 30 |
| 16. | கடல் கடந்து நீளும் உதவிக்கரங்கள். | 31 - 32 |
| 17. | எமது வளர்ச்சிப் பாதையில் ..... | 33 - 36 |
| 18. | இவர்களைச் சந்தித்த வேளையில்..... | 37 - 39 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும்
சிவகாமி அம்பாள் உடனுறை சிதம்பரேஸ்வரப் பெருமான்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்



சுவாமி விவேகானந்தர்



ஸ்ரீ சாரதாதேவி

இலட்சிய புருஷர்களாகக் கொள்ளப்பட்டவர்கள். அவர்களின் திருவுருவப்படங்கள் கல்லூரி விவேகானந்த மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வீறுகொண்ட விவேகானந்த வேதஞானக் களஞ்சியத்தைப்
பேறுகொண்ட இராமகிருஷ்ண பேரருட்செல்வத் துடனே
சாறுகொண்டு பார்முழுதுந்தானஞ் செய்து வேறுளகைம்
மாறுகொள்ளா வைத்தீஸ்வராக் கல்லூரி வாழியவே!

சாதிமத பேதமற்ற சமரசசன் மார்க்க நெறி
மேதினியிற் கால்கொளவே மெச்சு காவி பச்சை நீலம்
நீதிவளர் மூவணர்நீள் கொடியுங் குண்டலியென்
றாதியுள இலாஞ்சனையும் அடிகளாகும் வாழியவே

நன்னெறியோர் ஏத்துகின்ற நாகமுத்து செய்தவமும்
தன்னடிசேர் சர்வானந்தா விபுலானந்த இதய பூர்வப்
பொன்னருளும் கல்லூரி பொலிவெய்த முதல்வருடன்
இன்றருளும் வைத்தீஸ்வரன் இருங்கருணை வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்




**இருப்பவர்கள்**

**இடமிருந்து வலம்** – திருமதி. பா. சுப்பிரமணியம், திரு. வை. ஜெயலிங்கநாதன், திரு. சி. சிவகுமாரன் (பொருளாளர்), திரு. செ. சுப்பிரமணியம், திரு. நா. வன்னியசிங்கம் (போஷகர்), திரு. மு. சிவலோகநாதன் (தலைவர்), திரு. ப. காண்டீபன் (செயலாளர்), திரு. சி. நடராசா, திருமதி. செ. பொன்னுச்சாமி.

**நிற்பவர்கள்**

**இடமிருந்து வலம்**–செல்வி.க.சுப்பிரமணியம், திரு.பு.ஜெகதீசன், திரு. இ. கிருஷ்ணகுமார், திரு. வி. தயாபரன், திரு. து. ஜெகந்நாதன், திரு. மா. சுரேந்திரா, திருமதி. கு. ஷண்முடாஸ், திருமதி. ப. இராஜேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் கிளை நிர்வாக சபை உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்** – திருமதி. வா. ரஜீந்திரன், செல்வி. ச. சின்னத்துரை, திரு. ச. பொன்னம்பலம், திரு. பொ. ஆறுமுகம், திரு. மு. தனபாலசிங்கம் (உப அதிபர்), திரு. நா. வன்னியசிங்கம் (அதிபர்), திரு. சி. பத்மராஜா, திரு. பா. ஷண்முகநாதன், செல்வி. க. சுப்பிரமணியம், செல்வி. த. சிவப்பிரகாசம்

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்** – செல்வி. S. ரோகிணி, திருமதி. கௌ. பாலகிருஷ்ணன், திருமதி. இ. உருத்திரன், திருமதி. யோ. திரவியநாதன், திருமதி. மே. ரோ. ஜெயராஜா, திருமதி. கு. நாமநாதன், திருமதி. ச. கருணாகரன், திருமதி. கு. இராஜேந்திரன், செல்வி. நா. வினோதா, செல்வி. செ. சசிகலா, திருமதி. வ. கதிரேசபிள்ளை, செல்வி. யோ. சண்முகநாதன்

**2ம் வரிசை இடமிருந்து வலம்** – திரு. S. ஜெயந்தன், திரு. சோ. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. வி. ஜெயபால், திரு. இ. ஜெயரட்ணசிங்கம், திரு. இ. தேவகுமாரன், திரு. ய. மி. முகம்மது, திரு. சு. சதீஸ்குமார், திரு. ச. நிமலநேசன்

**வருகை தராதோர்** – திரு.தெ. பிரபாகரன், திருமதி. சி. குணரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் இதயத்திலிருந்து......



பேரன்பர்களே! பணிவன்பான வணக்கங்கள்:

வைத்தீஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் தனது ஐம்பதாவது அகவை நிறைவையொட்டி வெளியிடும் இப்பொன்விழா மலர் பற்றி உங்களிடம் பேசுவதில் பேரானந்தம் அடைகிறேன். ஆன்மிகத் தலைவர்களின் ஆசியாலும் அறிஞர்கள் பலரின் பேராதரவாலும் இப்பொன்மலர் மணம் வீசும் மலராக உங்கள் முன் மலர்ந்துள்ளது. இம்மலர் நன்றாக அமைய வைத்தீஸ்வரப் பெருமான் அருள்பாலிப்பார் என்ற நம்பிக்கையோடு தொடங்கிய இப்பணிக்கு முன்னின்று எம்பெருமான் காட்டிய வழி திண்ணிய மனதைத் தந்து எண்ணிய இலக்கை அடைய வைத்தது.

இம்மலரை மனநிறைவோடு ஆசியுரை வழங்கி நிறைவூட்டிச் சிறப்பித்த கொழும்பு இராம கிருஷ்ணமடத் தலைவர் அவர்கட்கும், நல்லை ஆதீன முதல்வர் அவர்கட்கும், மற்றும் வாழ்த்துரை, பாராட்டுரை வழங்கிப் பொலிவூட்டிய பெரியோர்கள், பழைய மாணவர்களுக்கும் நாம் கேட்டுக் கொண்ட போது மனமகிழ்வோடு இப்பொன்மலரை நாற்றம் பெறச் செய்ய ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும், இம்மலராக்கத்துக்குப் பலவழிகளில் மறைமுகமாக நின்று உசாத்துணை நல்கிய அன்புள்ளங்களுக்கும் இம்மலராக்கப் பணியை ஏற்றுக் கொண்ட யான் என்றும் நன்றியுடையேன். இவர்கள் யாவருக்கும் வைத்தீஸ்வரப் பெருமான் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்திக்கிறேன்.

எங்கள் லண்டன் கிளைச் செயலர் ஜீவரட்ணம் அவர்கள் தங்கள் கிளைச் சங்கத்தின் சார்பில் தாய்ச்சங்கம் வெளியிடும் இம்மலர் மலர தங்கள் கிளையின் சார்பில் வழங்கியுள்ள வாழ்த்துக்கும், பண உதவிக்கும் நன்றி கூறுகிறேன்.

மலராக்கம் சிறப்புறத் தன்னாலான உதவிகளைச் செய்த கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் அவர்கட்கு நன்றி செலுத்த வேண்டிய கடப்பாடுடையேன்.

பொன்மலர் பொலிவெய்த நான் உதவி கேட்டு நின்ற வேளைகளிலும், தானாக முன்வந்தும் மலராக்கத்துக்கான பலதரப்பட்ட உதவிகளையும் சிறிதும் சலிப்புறாது உவந்தளித்த பழைய மாணவர் சங்கச் செயலர் ப. காண்டீபன் அவர்களுக்கு சிறப்பாக நன்றி தெரிவிக்க வேண்டும். இன்று ப.மா.சங்கத்தைத் தன் அயராத உழைப்பினால் உயிரோட்டமாக வைத்திருக்கிறார் என்றால் மிகையாகாது. இச்சந்தர்ப்பத்தில் அவருக்கும் அவரோடு இணைந்து மலர் மலரச் செயற்பட்ட கிருஷ்ணகுமார் அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி தெரிவிக்காவிடில் நன்றி கொன்ற பாவத்துக்குள்ளாவேன்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் கவர்ச்சியாகவும் அழகாகவும் மனவிருப்போடு இம்மலரை அச்சிட்டு உதவிய தயா அச்சக உரிமையாளர் எங்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர் வி.தயாபரன் அவர்கட்கும் அவரது அச்சக ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" – என்று கூறும் திருமூலர் திருமந்திரத்தை என் சிந்தையில் தெய்வவாக்காகக் கொண்டு வைத்தீஸ்வரப் பெருமான் அருளாட்சியில் அவன் பெயரை முன்னோட்டாகக் கொண்டு அவன் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் வடக்கு வீதியில் வளர்ந்தோங்கி நிற்கும் அறிவாலயமாம் வித்தியாலயத்தின் ப.மா.ச ஐம்பதாவது நிறைவையொட்டி வெளிவரும் இப்பொன்மலரை அவன் பாதார விந்தங்களுக்குக் காணிக்கையாக்கி அறிவுத்தானம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவிழையும் எல்லோர்க்கும் இம்மலர் இனிது பயன்பட வேண்டும் என விரும்பி அவன் பாதம் பணிந்து நிற்கின்றேன்.

திருமதி. கு. ஷண்முகடாஸ் B.A Dip. in. Ed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஆத்மகனானந்தாஜி அருளாசி

தலைவர், இராமகிருஷ்ண மடம்,
கொழும்புக்கிளை.

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தின் 50வது ஆண்டு நிறைவினை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

1897 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் இந்நாட்டிற்கு வருகை தந்து, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணப் பகுதிகளுக்குச் சென்று உரையாற்றி, மக்களது உள்ளங்களுக்கு ஆன்மிக ஏற்றத்தைத் தந்தார். அதன் விளைவாக, இந்நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கின் பல பகுதிகளில் ராமகிருஷ்ணமிஷன் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் முதன்மையாகத் தொடங்கப் பட்டதே யா/வைத்தீஸ்வராக் கல்லூரியாகும்.

வெறும் விடயங்களை மூளையில் திணிப்பது கல்வியின் நோக்கமன்று. கல்வி மாணவனது உள்ளத்தில் தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும் வளர்க்க உதவ வேண்டும் என்பதே விவேகானந்தரது கல்விச் சிந்தனையாகும். இச்சிந்தனையின் அடிப்படையில்தான் ராமகிருஷ்ண மிஷன் பள்ளிகள், உலகியல் கல்வியோடு ஆன்மிகக் கல்வியை மாணவர்களுக்குப் புகட்டி வந்தன. தங்களது நேர்மையாலும், நிர்வாகத் திறமையாலும், அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி மக்களது நன்மதிப்பைப் பெற்ற இப்பள்ளியின் பழைய மாணவர்கள் இன்றும் இப்பள்ளிக்குச் சிறப்பைத் தேடித் தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்றும் இப்பள்ளியில் மாணவர்கள் அதே பழைய மரபுகளின் அடிப்படையில் வழி நடத்தப்படுகிறார்கள் என அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். இப்பணியில், இப்பள்ளியின் பழைய மாணவர் சங்கமும் தங்கள் பங்களிப்பை நிறைவாக வழங்குகின்றனர் என்று நினைக்கிறோம். இவர்களது பணி மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

**************************************************************

## முதல் தர குரு

வைத்தியர்கள் முதல் தரத்தினர், இரண்டாம் தரத்தினர், மூன்றாம் தரத்தினர் என மூவகைப்படுவர். மூன்றாம் தர வைத்தியர் நோயாளியின் நாடியைச் சோதித்துப் பார்த்து ஏதோ ஒரு குறிப்பிட்ட மருந்தை உட்கொள்ளும்படி கூறிச் சென்று விடுகிறார். அம் மருந்தை நோயாளி உட்கொண்டானா இல்லையா என்பதைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. இரண்டாந்தர வைத்தியர் அம்மருந்தை உட்கொள்வதால் நோய் தீரும், என்று நோயாளியின் மனத்தில் படும்படி சொல்லி, மேலும் அவன் மருந்தை ஏற்க விரும்பாவிடினும் சாந்தமாய் அவனைத் தூண்டி அவன் மருந்தை எப்படியாவது உட்கொள்ளும் உபாயத்தைக் கையாளுகின்றார். ஆனால் முதல் தரமான வைத்தியரோ மருந்தை உட்கொள்ள மாட்டேன் எனப் பிடிவாதம் பிடிக்கும் நோயாளியின் மார்பில் தம் கையை ஊன்றியும், கஷ்டப்படுத்தியும் அவரது தொண்டையிற் செலுத்துகிறார். இங்ஙனமே தம் சீடனுக்கு உபதேசம் மாத்திரம் செய்துவிட்டுப் பின் அவனைக் கவனியாதவர் குருமாரில் மூன்றாம் தரத்தினர் ஆவர். சீடன் உள்ளத்தில் நன்கு பதியும்வரை பல தடவைகள் உபதேசம் செய்து அவனது ஆத்ம நலத்தில் தனக்கு அக்கறை இருப்பதை அவன் உணரும்படியும் செய்யும் குரு இரண்டாவது தரத்தினர் ஆவர். தான் சொல்வதை கேட்காமலும், உபதேசங்களை மேற்கொள்ளாமலும் இருக்கும் சீடனை வற்புறுத்தித் தமக்குப் பணிய வைத்துப் போதிக்கும் குருவே முதல் தரத்தினர்.

- ஒரு ஞானி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பழைய மாணவர் பணி மகத்தானது"

### வாழ்த்தி ஆசி அருளுகிறார் நல்லை ஆதீன முதல்வர்





நல்லை ஆதீன
ஆதி முதல்வர்

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் மன்றம் இவ்வாண்டு பொன்விழா காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ். நகரின் மத்தியில் நின்று கல்விப்பணியற்றி வருகின்ற வைத்தீஸ்வராக் கல்லூரியினது பணி தனித்துவம் வாய்ந்தது.

இக்கல்லூரியின் படைப்புக்களாய் வெளிவந்த அறிஞர்கள், கல்வியியலாளர்கள், பல்துறைசார் விற்பன்னர்கள், பலர் நவீன உலகினை எதிர்கொள்ளும் வண்ணம் மாணவர்களைச் சிறந்த முறையில் தயார்ப்படுத்தும் அதேவேளை தமிழுக்கும் சமயத்திற்கும் பெரும்பங்காற்றிவரும் இக்கல்லூரியின் நட்சத்திரங்களாக ஒளிவீசிக்கொண்டிருக்கின்ற பழைய மாணவர்களின் பணி மகத்தானது.

பாடசாலைக்கல்வி நிறைவடைந்தாலும் தம்மை வளர்த்துவிட்ட கல்லூரியின் வளர்ச்சிக்காக மன்றமமைத்து சேவையாற்றும் பழைய மாணவர் சங்கம், தமது ஐம்பது வருடகால சேவையில் சாதித்தவை பல. இவ்வாறான ஒரு பாடசாலையின் பழைய மாணவர்களில் ஆதீனத்தின் ஸ்தாபகர் குருமகா சந்நிதானம் ஆதி முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகளும் ஒருவர் என்றவகையில் நாம் பெருமையடைகின்றோம்.

இன்றைய பொன்விழா சிறப்பாக நடைபெற இறைவன் ஆசீர்வதிப்பானாக. இவ்விழாவினை நாடாத்துகின்ற பழைய மாணவர் சங்கப் போசகர், தலைவர், செயலாளர், மற்றும் சகல பழைய மாணவர்களையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் இவர்களுடைய பணி மேலும் சிறப்பாகத் தொடரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

### கலியுக தவம்

எப்போதும் உண்மை பேசுபவன் கடவுளின் மடியிலேயே இருக்கிறான். காரியாலயங்களில் குமாஸ்தா வேலை செய்பவராக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும் அவர்களும் கூட உண்மை பேசுவதிலிருந்து தவறுதலாகாது. உண்மையையே பேசுவது கலியுகத்துக்கான தவமாகும்.

மனிதன் சத்தியம் பேசுவதில் தவறக்கூடாது. அந்த விஷயத்தில் மிகவும் யாக்ரதையாக இருக்க வேண்டும். எப்போதும் உண்மையே பேசி வந்தால் கடவுள் சாடசாத்காரத்தைப் பெறலாம்.

- பகவான் இராமகிருஷ்ணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதுமெருகுடன் விளங்கும் கல்லூரி மாணவர் தேவையை நிறைவு செய்யட்டும்"

**திருமதி. செ. மகாலிங்கம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

வைத்தீஸ்வராக் கல்லூரி தனது நூற்றாண்டை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகும் வேளையிலே கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் தனது பொன்விழாவையொட்டி வெளியிடப்படவிருக்கின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மன மகிழ்ச்சி அடைகின்றேன். பழைய மாணவர் மன்றம் ஐம்பது ஆண்டுகள் கல்லூரித்தாய்க்கு சேவையாற்றி உள்ளது. இக் கல்லூரி யாழ்ப்பாணத்திலே தனக்கென ஒரு பாரம்பரியத்தை அமைத்து அதன் வழி கல்விப்பணியை ஆற்றிவருகிறது. யாழ் நகரிலே பிரபல்யம்மிக்க பாடசாலையாக விளங்குகின்றது. இதற்கு காரணம் அப்பாடசாலையின் முகாமைத்துவபீடம், அதன் சமுகத்துடன் கொண்டிருக்கும் சிறந்த இணைப்பும் தொடர்பாடலுமேயாகும். வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களையும் மீத்திறன் குறைந்த மாணவர்களையும் அனுமதித்து அவர்களின் கல்விப்பசியை தீர்த்துப் பொதுப் பரீட்சைகளில் சித்தியடையச் செய்யும் மகத்தான பணியை ஆற்றிவருகிறது.

வைத்தீஸ்வராக் கல்லூரி உயர்தர வகுப்பில் விஞ்ஞான பிரிவைக் கொண்ட பாடசாலையாக இருந்து வருகின்றது. இடையறாத இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட இக்கல்லூரி அன்னை இன்று புனர் நிர்மாணம் செய்யப்பட்டுப் புதுமெருகுடன் காட்சி தருகின்றாள். இதற்கு இக்கல்லூரியில் சேவையாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையே காரணமாக அமைகின்றது. இக்கல்லூரி மேன்மேலும் தழைத்தோங்கி மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் கல்லூரியாக அமைய, எனது நல்வாழ்த்துக்கள்!



**ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு மூன்று விடயங்கள் அவசியம்.**

1. **நன்மை தரக்கூடிய சக்திகளில் உறுதியான நம்பிக்கை.**
2. **பொறாமையும் சந்தேகமும் இல்லாமலிருத்தல்.**
3. **நல்லவர்களாக இருக்கவும் நன்மையைச் செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவி புரிதல்.**

**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறிவியல் நுரைக்குள் கல்லூரியை நுழைத்துச் செல்ல மன்றம் உதவிட வாழ்த்துகிறேன்"



**திரு. ப. விக்னேஸ்வரன்**
யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர்.

மரபிலும், தொன்மையிலும் கல்விச் சூரியனின் பார்வையில் வளர்ந்து, நிமிர்ந்த யா/வைத்தீஸ்வராக் கல்லூரி நகரத்தின் கனவுகளை, கிராமத்தின் கனவுகளை நிதானமாக்கி உலகப் பந்தில் தன் மாணவர்கள் உள்ளத்தில் உண்மை ஒளியுடன் புகழ் குவித்திட நிறைந்த பணிகளை ஆற்றியுள்ளது. புகழ்பூத்த அதிபர்களின் ஆளுமையினால், விழுதுவிட்டு, கிளைபரப்பிய பழைய மாணவர்கள் பழைய மாணவர் சங்கம், பொன் விழாவை முன்னிட்டு மலர் வெளியிடும் நிலை கண்டு மகிழ்கின்றேன்.

"மணற்றி" என்ற தொல் பெயருள் வாழும் யாழ்ப்பாண குடாநாடு யுகத்தீயில் குளித்தாலும், கல்விக் கூடங்களின் சத்திய வாழ்வினால் முழு உலகினும் மறைக்க முடியாத நிலவாகிப் புகழ் குவிக்கின்றது. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பாடசாலையும், உணர்வோடு ஒன்றிய பழைய மாணவர்களால் உயர்ந்த நிலைக்கு ஏற்றப்படுகின்றது.

அந்த வகையில் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி மானியங்களையும், மகுடங்களையும் உள்வாங்காமல் சக்தி மிக்க எழுச்சியில் பொன்விழாக் காண்கின்றது. அன்பில், அறிவில், கொடையில் சூரியனாய் பிரகாசிக்கும் பழைய மாணவர்கள், விலை மதிக்க முடியாத பொன்விழா நாளில், அறிவியல் நுரைக்குள் தமது கல்லூரியை நுழைத்துச் செல்ல சகல வழிகளிலும் ஒத்துழைத்து, உதவிட ஆசிச் செய்திகளை அன்புடன் வழங்குகின்றேன்.

நாகரீகங்கள் தொட்டிலிடும் யாழ்ப்பாண பூமி உலக தொடர்பாடலுடன் இணைந்து தனது இருப்புகளை பிரகடனப்படுத்தி, அணுவைப் பிளக்கவல்ல அறிவியல் மாணவர்களை உருவாக்க, உயர்த்த யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின்பழைய மாணவர் சங்க பொன்விழா - வெற்றிகளைத் தொடரும் என வாழ்த்துகின்றேன்.

> **எப்போதும் இறைவனது திருப்பெயரையும் புகழையும் பாட வேண்டும். அதற்குப் போதிய நேரம் கிடைக்காவிட்டால் காலையிலும், மாலையிலும் கைகளைத் தாளமிட்டவாறே முழு மனத்துடன் பஜனையில் ஈடுபடுவது நல்லது.**
>
> **— பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டு விழா காண வீறு நடை போடுக!

திரு. நா. வன்னியசிங்கம் B.Sc.Dip. in Ed
- கல்லூரி அதிபர் -

கல்லூரிப் பழைய மாணவர் மன்றத்தினர் தமது மன்ற பொன்விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்குக் கல்லூரியின் தற்போதைய அதிபர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 90 வருடங்களில் பழைய மாணவர் மன்றமானது 50 வருட தனது சேவையைக் கல்லூரிக்கு வழங்கியுள்ளமை பெருமைக்குரிய அம்சமாகும்.

கல்லூரியிலே கல்வி கற்று தற்போது உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழுகின்ற பழைய மாணவர்கள் தமக்குக் கல்வி வழங்கி அறிவுக் கண்ணைத் திறந்து தம்மை உயர் நிலையில் வைத்துள்ள கல்லூரித் தாயை நினைவுகூராமல் இருக்கமுடியாது. ஒவ்வொரு மனிதனது வாழ்வினில் பள்ளிக்காலம் என்பது எத்தனையோ பசுமையான நினைவுகளை நெஞ்சினிலே வளர்த்துவிட்ட ஒரு பொற்காலமாகும். இத்தகைய சிறப்புக்களும் பொருந்திய கல்லூரித் தாயின் மைந்தர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கல்லூரிக்கென சங்கம் அமைத்துக் கல்லூரியின் வளர்ச்சியிலே தம்மை ஈடுபடுத்த முனைந்து கொண்டிருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்.

போர் சூழலினால், பல இடர்பாடுகளின் தாக்கத்தினால் இடைக்காலத்தில் நலிவுற்று இருந்த கல்லூரி இன்றைய சமாதான சூழலினால் படிப்படியாகத் தனது பழைய நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலே பழைய மாணவர்கள் ஒன்றாக அணிதிரண்டு கல்லூரி நலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படும்போது கல்லூரித்தாய் பூரிப்படைவாள், வளர்வாள், உயர்வாள் என்பதில் சந்தேகமில்லை. எனவே பழைய மாணவர் மன்றம் தனது சேவையை விரிவாக்கம் செய்து நூற்றாண்டு விழாவை நோக்கி வீறுநடை போட வேண்டும் என்று வைத்தீஸ்வரனை வணங்குகின்றேன்.

நன்றி



**கல்வியின் சாரம்**

**கல்வியின் சாரம் மன ஒருமைப்பாட்டிலேயே உள்ளது**
**வெறுமனே பல விஷயங்களைப் படிப்பதில் அல்ல.**

— **சுவாமி விவேகானந்தர்** —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வரலாறு சாற்றும் ஒரு மைல்கல்



திரு. மு.சிவலோகநாதன்
ப.மா மன்றத் தலைவர்,
கட்டட, சோதிட ஆலோசகர், ஆங்கில ஆசிரியர்.

யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரி 1913ம் ஆண்டு பெரியார் த.நாகமுத்து அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இராமகிருஷ்ண மடத்தினரால் பரிபாலிக்கப்பட்டு அதிபர் ச.அம்பிகைபாகன் காலத்தில் அவராலும் அவரது சகபாடிகளாலும் பழைய மாணவர்களாலும் வளர்க்கப்பட்டது. இக்கால கட்டத்தில் அதிபரின் அனுசரணையுடன் 1952ல் பழைய மாணவர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இம்மன்றம் இன்று ஐம்பது ஆண்டுகள் நிறைவைக்கொண்டாட வளர்ந்து வந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்கு உழைத்த சகல பழைய மாணவர்களும் பாராட்டுக்குரியவர்கள். மன்ற வளர்ச்சியுடன் பாடசாலையும் வளர்ந்திருக்கின்றது என்பது கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் எம் கல்லூரியில் காலூன்றி வளர்ந்து வரும் எம் மன்ற செயற்பாடுகளுக்குத் தற்போது லண்டன், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அங்குரார்ப்பணமாகி வரும் கிளைச் சங்கங்களின் உதவியும் ஊக்குவிப்புக்களும் வரவேற்கத்தக்கவை, மகிழ்ச்சிக்குரியவை. அவர்கள் நீட்டும் உதவிக் கரங்களைப் பற்றிக்கொண்டு தாய்ச்சங்கத்தவர்களாகிய நாம் எம் பங்களிப்போடு கல்லூரித்தாயின் அபிவிருத்திக்கு ஆவனசெய்ய வைத்தீஸ்வரன் அருள்புரிவாராக.

ஐம்பது வருடகாலத்தில் இதன் வளர்ச்சியில் ஈடுபட்ட தலைவர்கள், செயலர்கள், பொருளாளர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், மற்றும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவர்க்கும் மன்றம் மிக்க நன்றியுடையதாவுள்ளது.

இன்று மன்றம் பொன்விழாக் கொண்டாடி பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு மனமகிழ்கிறோம். இம்மலர் கல்லூரிச் சரித்திரத்திற்கு ஒரு மைல் கல்லாக அமையும் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பொன்விழாக்காணும் எம்மன்றம் எதிர்வரும் காலத்தில் கல்லூரி அபிவிருத்திக்கு செயற்கரிய செயல்கள் பல செய்து வைர, பவள, நூற்றாண்டு விழாக்களைக் காணவேண்டும் என எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கிறேன்.

நன்றி.

**ஒருவன் ஆயிரம் தடவை முயலலாம். இறைவனுடைய அருளின்றி எதனையும் அடைய முடியாது. இறைவனின் கருணை இன்றி அவன் கடவுளை உணரமுடியாது.**

**- ஸ்ரீ ராமகிருஷ்ணர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பழைய மாணவரின் குன்றா ஆர்வமும் குறையா உறுதியும் உவகையும் உற்சாகமும் தந்தன"



**திரு. சி. சிவசரவணபவன் M.A**
மூத்த எழுத்தாளர், முன்னாள் அதிபர்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கல்லூரிகளுள் ஒன்றாகத் திகழும் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தினர் வெளியிட வுள்ள பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றோர், பழைய மாணவர் முதலிய வர்களைக் கொண்ட கல்லூரிச் சமூகமொன்றிலே, பழைய மாணவர்களின் "இடம் தனித்தன்மை யும் சிறப்பும் வாய்ந்தது. ஏனையவர்களின் "இடம்" மாறும் தன்மையது; ஆனால் ஒரு கல்லூரியின் "பழைய மாணவர்கள்" என்ற நிலைக்கு உயர்ந்தவர்கள், என்றும் அக்கல்லூரியின் பழைய மாணவர்களே. ஆகவேதான், தம்மை வளர்த்தெடுத்து ஆளாக்கிய கல்லூரித் தாயின் மேல் அவர்கள் வைத்துள்ள பற்றும் பாசமும் ஆழமானவையாக, அசைக்க முடியாதவையாக அப்பழுக் கற்றவையாக இருக்கின்றன.

அமரர் அம்பிகைபாகன் அவர்களுக்குப் பின்னர் வைத்தீஸ்வராவின் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களுள் நீண்ட காலம் 1983ம் ஆண்டு அக்டோபர் தொடக்கம் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி இறுதி வரை அதிபராகவும் பழைய மாணவர் மன்றத்தின் பதவி வழித் தலைவராக பணி புரிந்தவன் என்ற வகையில், வைத்தீஸ்வராவின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும், பழைய மாணவர்கள் பலர் காட்டிய குன்றா ஆர்வத்தையும் குலையா உறுதியையும் கண்டு நான் உவகையும் உற்சாகமும் செயலூக்கமும் பெற்றதுண்டு.

வைத்தீஸ்வராவை நிறுவிய அமரர் நாகமுத்து இடைக்காடர் அவர்களின் இலட்சியத்தை முன்னெடுக்கும் நோக்கிலும், மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்காகவும், திறமை நிறைந்த ஆனால் வசதி குறைந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல், முன்னர் ஒரு தடவை மட்டும் நடைபெற்று, பின்னர் "பொய்யாய், பழங்கதையாய், கனவாய்" ஆகிவிட்டிருந்த பரிசளிப்பு விழாவை ஆண்டு தோறும் நடத்துதல்; அதிபர் அம்பிகைபாகன் அவர்களின் கல்வி, கலை, கலாச்சாரப் பணிகளைக் கௌரவிக்கும் வகையில், கல்லூரியின் திறந்தவெளி அரங்கைப் புனரமைத்து, அம்பிகைபாகன் அரங்கு எனப் பெயர் சூட்டுதல்; துணை அதிபராகப் பெரும்பணி ஆற்றிய திரு. வைரமுத்து அவர்களின் பெயரை, அம்பிகைபாகன் அரங்கிற்கு எதிரேயுள்ள கட்டடத் தொகுதிக்குச் சூட்டுதல், கல்லூரியின் பிரதான மண்டபத்தைத் திருத்திப் புதுப்பொலிவு பெறச் செய்தல்; பகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸர், அன்னை சாரதாதேவி, வீரத்துறவி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்குப் புது மெருகூட்டுதல் போன்ற திட்டங்கள் வெற்றியடைந்த தற்கு அக்காலகட்டத்துப் பழைய மாணவர் மன்றத்தினர் வழங்கிய உதவியும் ஒத்துழைப்பும் பெருமளவிற் துணை நின்றன. இவற்றுட் சில, கல்லூரி நிர்வாகத்தினால் முன்மொழியப்பட்டவை; ஏனையவை பழைய மாணவர் மன்றத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்து மீண்டதன் பின்னர் கல்லூரி நிர்வாகம் எதிர்கொண்ட பல்வேறு விதமான சவால்களைச் சமாளிப்பதற்குப் பழைய மாணவர் மன்றத்தினர் கைகொடுத்து வருவதறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். முன்னர், யாழ்ப்பாணத்தில் மட்டும் செயற்பட்ட பழைய மாணவர் மன்றம் இப்போது லண்டன், கனடா ஆகிய இடங்களிற் கிளை பரப்பி வருவதுடன், திரைகடலோடித் தேடிய திரவியம், வைத்தீஸ்வராவின் வளர்ச்சிக்காக வரையறையின்றி வழங்கப் படுவதும் மகிழ்ச்சிக்குரியன.

செயற்றிறன் மிக்க இப்போதைய அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் அவர்களைக் காப்பாளராகக் கொண்டுள்ள பழைய மாணவர் மன்றம் பொன்விழா மலரை வெளியிட முன்வந்ததை வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன்.

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் மட்டுமல்லாமல், கலை, கலாச்சார வரலாற்றிலும் வைத்தீஸ்வராக் கல்லூரிக்குத் தனி இடம் உண்டு. பழைய மாணவர் சங்கங்களுள் வைத்தீஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் மன்றத்திற்குச் சிறப்பிடமுண்டு. பொன்விழா மலர், இவற்றை நிரூபிக்கும் ஆவணமாகத் திகழும் என நம்புகின்றேன்.

பொன்விழா மலர், பல்லாற்றானும் சிறப்புற, கல்லூரியிற் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் சிவகாமி அம்பாள் உடனுறை சிதம்பரேஸ்வரப் பெருமானையும் கல்லூரிக்குத் தன் பெயரை ஈந்தருளிய வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானையும் இறைஞ்சுகின்றேன்.

## மனிதரில் இத்தனை வகைகளா?

**மரம் தன்னையும் அறிந்து கொள்ளாது, தன்னையுடைய தலைவனையும் அறிந்து கொள்ளாது. அதுபோல், தன்னையும் தனது தலைவனையும் அறியாமல் "கடவுள் இல்லை, முக்தி இல்லை, மறுமை இல்லை" என்று பிதற்றித் திரிபவர்கள் மனித மரங்கள்.**

**"மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" – குறள். இன்னும் மனிதருக்குள் நாய்கள், பேய்கள், எருமைகள், தேள்கள், நட்டுவக்காலிகள், பூனைகள் முதலிய பலப்பல வகையுண்டு. அனுபவத்தில் "அவன் எருமையாச்சே?" "அவன் நாய், பூனை" என்றெல்லாம் பேசுவது கண்கூடு.**

**அயலவன் உடைமைக்குப் பேயாய்ப் பறப்பவன் பேய்.**
**பிச்சைக்காரன் மேல் விழுந்து அதட்டிக்குலைப்பவன் நாய்.**
**பிறர் இரகசியம் பேசும்போது ஒட்டுக்கேட்பவன் சுவர்கோழி.**
**பிறர் துன்பம் தெரியாதவன் தேள்.**
**நல்ல விடியத்தில் பதுங்கிப் பின் வாங்குபவன் பூனை**
**உறுதி இல்லாமல் இன்று ஒரு கொள்கை நாளை ஒரு கொள்கையாக மாறுபவன் பச்சோந்தி.**
**சமயம் பார்த்து மாறுபவன் ஆடு**

**இப்படிப் பலவகையுண்டு. விரிவஞ்சி விடுகிறேன். அன்பர்கள் அவரவர்களைப் பார்க்கும்போது இவர் எந்த வகையைச் சேர்ந்தவர் என்று ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.**

**- திருமுருக கிருபானந்தவாரியார் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வரா வளாகமாக மாறவேண்டும்

திரு. S.P.பாலசுப்பிரமணியம் B.A.Hons
முன்னாள் அதிபர்

S.P.பாலசுப்பிரமணியம் ஆகிய நான் 1956ம் ஆண்டு தொடக்கம் 1979ம் ஆண்டு வரைக்கும் ஆசிரியராகவும், 1980ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரைக்கும் அதிபராகவும் கடமையாற்றினேன். ஆகவே என் வாழ்நாளில் பெரும்பகுதியை வைத்தீஸ்வராக் கல்லூரியுடன் ஈடுபட்டுள்ளேன். இந்த 37 வருட காலங்களில் நான் பழைய மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வந்துள்ளேன்.

நான் 1956ம் ஆண்டு ஆசிரியராக நியமிக்கப்பட்ட பொழுது விவேகானந்த மண்டபத்தை விட பெரும்பாலும் மற்றைய கட்டடங்களெல்லாம் ஓலைக் கொட்டில்களாகவே இருந்தன. எஞ்சிய கட்டிடங்கள் எல்லாம் கற்கட்டடங்களாக மாற்றியதில் எனக்கு பெரும் பங்கு உண்டு. மேலும் துரையப்பா சோடா பற்றரி கட்டிட வளவும் கிழக்கேயுள்ள பகுதிகளும் சுவீகரிப்பதில் நான் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தேன். 1956ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரைக்கும் கல்வி அதிகாரியுடன் தொடர்புகொண்டு எங்கள் கல்லூரிக்குப் பெருந்தொகையான பணம் அவருடைய சிபார்சின் பேரில் கிடைத்த பணத்தை கட்டிடங்களையும் தளபாடங்களையும் பெற்றுக் கொள்வதில் முக்கிய பங்கினை வகித்தேன்.

ஒரு கல்லூரி வளர வேண்டுமானால் அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பெரும் பங்கினை வகிக்க வேண்டும். எனக்கு முன்பிருந்த அதிபர்கள் அதைப்பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. நான் 1980ம் ஆண்டில் அதிபராக வந்த பொழுது பழைய மாணவர்கள் அனைவரையும் வரவழைத்து பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும், ஈடுபாடுகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினேன். அவர்களும் என்னுடன் ஒத்துழைத்து பெரும் ஈடுபாடு கொண்டனர். ஆனால் நான் சொற்ப காலமே அதிபராக இருந்தபடியினால் நீண்ட காலத்திற்கு அந்த முயற்சியில் ஈடுபட முடியவில்லை. ஆனால் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பை பெற்றால் பெருமளவில் கல்லூரியை விருத்தி செய்ய முடியும். ஆகவே அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் பழைய மாணவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று கல்லூரியை முன்நிலைக்கு கொண்டு வர உதவி செய்ய வேண்டும்.

நாவலர் வீதி, கே.கே.எஸ் வீதி, வடக்கில் சிவன் கோயில் வீதி, மானிப்பாய் வீதி, ஆகிய இடங்களைக் கொண்ட பிரதேசம் ஒரு காலத்தில் வைத்தீஸ்வரா வளாகமாக மாற வேண்டும்.

மேலும் இக்கல்லூரி இன்றைய நிலைக்கு வளர்வதற்கு வித்திட்டவர்கள் காலம் சென்ற நாகமுத்துவும், இராமகிருஷ்ணமிஷனாரும் ஆகும். ஆகவே ஒவ்வொரு வருடமும் இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த தினத்தையும், சுவாமி விவேகானந்தர் பிறந்த தினத்தையும், நாகமுத்து பெரியாரின் பிறந்த தினத்தையும் கொண்டாட வேண்டும்.

எங்கள் கல்லூரி மேலும் முன்னேற வேண்டும், விருத்தியடைய வேண்டும் என்று நான் ஈசனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலம் கண்டு புகழ்பூத்து விளங்குக!



திரு. செ. குணபாலசிங்கம் B.A Dip-in Ed.
முன்னாள் அதிபர்

பொற்காலம் கண்டு புகழ்பூத்து விளங்கும் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இன்று பொன்விழாக் கொண்டாடு கின்றது. இவ்விழாவுக்கும் இது தொடர்பாக, சங்கம் வெளியிடும் மலருக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கல்லூரியிலே நான் பணிபுரிந்த மிகக் குறுகிய காலத்தில் இச்சங்கத்துக்கும் எனக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பும் உறவும் ஏற்பட்டது. அக்குறுகிய காலத்தில் பழைய மாணவர்களுக்கும் எனக்கும் இடையில் இருந்து வந்த அன்னியோன்ய உறவைக் கண்டு மகிழ்ந்தேன்.

நான் இப்பாடசாலையின் மாணவனாக இல்லாதிருந்தபோதும் இப்பாடசாலைக்கும் எனக்கும் இடையே தொடர்பிருந்தது. இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ச.அம்பிகைபாகன், முன்னாள் உபஅதிபர் அமரர் கா.வைரமுத்து ஆகியோருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தமை யால் நான் இங்கு வந்து போவது வழக்கம். அதனால் இக்கல்லூரியைப் பற்றி நன்கு அறிந்திருந்தேன். இப்பெரியார்களின் உழைப்பினாலும் பழைய மாணவர்களின் ஆதரவினாலும் இக்கல்லூரி வளர்ச்சி அடைந்து முன்னேற்றம் கண்டிருந்தது. இவர்களின் காலம் இக்கல்லூரியின் பொற்காலமாகத் திகழ்ந்தது.

இப்பெரியார்களின் வழிகாட்டலில் வளர்ந்துவந்த மாணவர்கள்தான் நான் இங்கு அதிபராகக் கடமை ஏற்ற காலத்தில் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாகவும் நிர்வாகிகளாகவும் இருந்தனர். தாங்கள் கல்வி கற்ற காலத்தில் பல இன்னல்களுக்கிடையில் இப்பாடசாலை எவ்வாறு வளர்ச்சிபெற்றது என்றும் அக்காலத்தில் தாம் பெற்ற அறிவும் அனுபவங்களும் தாம் இன்று உயர்நிலையில் இருப்பதற்கு எவ்வாறு உதவின என்றும் பெருமைப்பட்டனர்.

தாம் பெற்ற அறிவையும் பலன்களையும் வருங்காலச் சந்ததியினரும் பெற்று உயர வேண்டுமெனவும் அதற்குத் தம்மாலான உதவிகளை வழங்கவேண்டுமெனவும் விழைந்து கல்லூரிக்கு உதவி வருகின்றனர்.

இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பல்வேறு துறைகளில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர், உதவி வருகின்றனர். பழைய மாணவர் சங்கம் இதற்கு உந்துகோலாக இருக்கின்றது.

இப்பழைய மாணவர் சங்கம் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கல்லூரிக்கும் பல வழிகளில் உதவி செய்து வருவதைப் பாராட்டுகின்றேன். இச் சங்கம் மேன்மேலும் வளரவேண்டும் எனவும் வருங்காலத்திலும் தொடர்ந்து கல்லூரி அன்னைக்குத் தமது நன்றிக் கடனைச் செலுத்துமுகமாக உதவவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**வாழ்க பழைய மாணவர் சங்கம் !**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வைத்தீஸ்வரா



ஈழத்தின் புகழ்பூத்த மூத்த எழுத்தாளர்
சாகித்திய இரத்தினம், திரு. தி. ச.வரதராசன்
(வரதர்)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் பொன்விழா நடைபெறப்போவதையும், அதற்காக ஒரு சிறப்புமலர் வெளிவர இருப்பதையும் அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மதிப்புக்குரிய பெரியார் த. நாகமுத்து இடைக்காடர் அவர்களால் யாழ். வண்ணார்பண்ணைப் பகுதியில் வாழ்ந்த சான்றோர்கள் சிலரின் உதவியுடனும், உலகப் புகழ்வாய்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் ஆதரவுடனும் 1913ஆம் ஆண்டில் இக்கல்லூரி தாபிக்கப்பெற்றது. அதற்குப் பதினொரு ஆண்டுகள் பின்பு பிறந்த எனக்கு, இக்கல்லூரியில் பயிலக்கூடிய வயது இருந்தபோதிலும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏனெனில் நான் பிறந்து வளர்ந்தது இங்கிருந்து சுமார் பத்துமைல் தூரத்துக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்தில். அந்தக் காலத்தில் பத்துமைல் என்பது ஒரு பாரிய பயண தூரமாக இருந்தது.

ஆயினும் கடந்த பல தசாப்பதங்களாக இக்கல்லூரியின் அருகில் நான் வசித்து வருவதால் இது என்னுடைய கல்லூரி என்ற மாதிரியான உணர்வு என் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது.

எனது இளமைக்காலம் சுமார் 15 வயது தொட்டே, நான் இந்த வித்தியால்ய மண்டபத்துக்கு வந்ததுண்டு. அக்காலந்தொட்டு இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் முக்கியமான தமிழறிஞர்களும், கலை இலக்கிய பிரமுகர்களும் ஆன்மீகப்பெரியார்களும் இக்கல்லூரி மண்டபத்துக்கு வந்து சொற்பொழிவுகள் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. சிறுவயதிலிருந்தே தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த நான் அந்தச் சொற்பொழிவுகளைக் கேட்கவும் பெரியார்களைப் பார்ப்பதற்குமாக இந்தக் கல்லூரிக்கு வந்திருக்கின்றேன்.

1950களில் நான் நடத்திய "ஆனந்தன்" என்ற சஞ்சிகைக்கான விழா ஒன்றுக்கு தமிழகத்திலிருந்து சிலம்புச் செல்வர் என்று புகழ்பெற்ற ம.பொ. சிவஞானம் அவர்களும் இந்தக் கல்லூரி மண்டபத்திற்கு வந்து முதுபெரும் தமிழறிஞர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் தலைமையில் உரையாற்றியதும், நான் தொகுத்து வெளியிட்ட "வரதரின் பலகுறிப்பு" என்னும் புதுமையான நூல் வெளியீட்டு விழாவில் தமிழரசுக்கட்சியின் தளபதியாக விளங்கிய அமரர் அமிர்தலிங்கம், செனட்டர் எஸ். ஆர். கனகநாயகம், பத்திரிகையாளர் இராஜ அரியரத்தினம் முதலியவர்கள் இந்த மண்டபத்திலே உரைகள் ஆற்றியதும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் நடத்திய "அறிவுக்களஞ்சியம்" சஞ்சிகையின் ஒரு பெருவிழா இந்த மண்டபத்தில் நடந்ததும் இப்போது என் நினைவில் வருகின்றன.

இப்படி எத்தனை எத்தனை விழாக்களை இக்கல்லூரி கண்டிருக்கிறது!

எத்தனை எத்தனை தமிழறிஞர்கள், சான்றோர்கள், ஆன்மீகத் தலைவர்களின் காலடிகளெல்லாம் இக்கல்லூரியில் படிந்திருக்கின்றன.

என்னைப் பொறுத்தமட்டில் இக்கல்லூரியில் மிக நீண்ட காலமாக அதிபராக இருந்தவரும், மதிப்புமிக்கவரும் தமிழறிஞர்களிடத்தே மிகுந்த பாசமும் பற்றும் கொண்டவருமான அமரர் ச.அம்பிகைபாகன் அவர்களுடன் ஏற்பட்ட பழக்கமும், இப்போதுள்ளவர்க்கு முன்னைய அதிபராக விளங்கிய அறிவார்ந்த மதிப்புக்குரிய எனது இலக்கிய நண்பர் சிற்பி சிவசரவணபவன் அவர்களுடனான நெருக்கமும் என்னை இக்கல்லூரியின்பால் ஈர்த்துள்ளன.

இவர்களுக்குப் பின்னால் வந்த இன்றைய அதிபர் திரு நா.வன்னியசிங்கம் அவர்களும் அவர்களைப் போலவே நல்ல தமிழபிமானியாக இருப்பது மகிழ்ச்சி தருகிறது. இவருடைய காலத்தில் இக்கல்லூரி நாளொரு மேனியாக வளர்ந்து, உயர்ந்து நிற்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் தமது தாயாரை மறவாதிருப்பது போல, இக்கல்லூரியையும் மறவாது இதன் வளர்ச்சிக்காக உழைத்து வருவதைக் காண மனம் குளிர்ந்து நிறைகிறது.

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இது!**

**எல்லோருக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள்.**



**மரணம் வரும் வரையிலும் வேலை செய். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் இறந்த பிறகும் என் ஆவி உன்னுடன் இருந்து வேலை செய்யும். இந்த வாழ்க்கை வருவதும் போவதுமாக இருக்கிறது. செல்வம், புகழ், இன்பங்கள் இவை எல்லாமே ஏதோ ஒரு சில நாட்களுக்குத்தான் நிலைத்திருக்கப் போகின்றன. உலகப்பற்று நிறைந்த ஒரு புழுவைப்போல இறந்துபோவதைவிட, உண்மையை எடுத்துப் போதித்துக்கொண்டே கடமை என்னும் களத்திலே உயிரை விடுவது மிகமிக மேலானது, முன்னேறிச் செல்!**

**எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.**

**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுகள் என்றும் பசுமையானவை

திரு. து. சந்தோசம் B.A Dip-in Ed.
(பழைய மாணவன்)
அதிபர் - கொழும்பு விவேகானந்தா கல்லூரி

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தினரின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் இம்மலருக்குப் பழைய மாணவர் மன்றத்தின் முன்னாள் இணைச்செயலாளர் தலைவர் (அதிபர்) என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐம்பது ஆண்டுகாலப் பகுதியில் இம்மன்றம் பல்வேறு வகையில் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் பாராட்டப்பட வேண்டியன. கல்லூரியினதும் மன்றத்தினதும் வளர்ச்சிக்காக உழைத்த பழைய மாணவர் மன்றத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள், என்றும் போற்றி நினைவுகூரப்பட வேண்டியவர்கள். காலத்துக்குக் காலம் நாட்டின் அரசியல் நிலைமைகளால் கல்லூரியும், மன்றமும் பல்வேறு சோதனைகளைச் சந்தித்த போதும் இன்று மீண்டும் புத்துயிர் பெற்று லண்டன், கனடா, போன்ற நாடுகளிலும் கிளைகள் பரப்பி வளர்ச்சி கண்டுள்ளதையிட்டுப் பெருமை அடைகின்றேன்.

கால ஓட்டத்திற்கேற்ப தேசிய பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்தபோதும் வைத்தீஸ்வராக் கல்லூரியின் நினைவுகள் என்றும் பசுமையானவை. அதன் கலை கலாச்சார விழுமியங்கள் தனிச் சிறப்புப்பெற்றவை என்பதை மறுக்கமுடியாது. தற்போதைய அதிபர் அவர்களின் முயற்சியில் கல்லூரியும், பழைய மாணவர் மன்றமும் சீரும் சிறப்பும் பெற எனது நல்லாசிகளை உரித்தாக்குகின்றேன்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *



# வளமுடன் வளர்க!

திரு. எம்.எஸ். றஹீம் J.P.

யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் பொன்விழா கொண்டாடுவது என்னைப் போன்ற பழைய மாணவர்களின் மனதில் மிகுந்த மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் உண்டாக்கும் நிகழ்வாகும். பெற்றோருக்கு அடுத்தபடியாக நல்ல ஆசான்களினால் உருவாக்கப்பட்ட பழைய மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கின்றனர். இக்கால கட்டத்தில் இந்த நிகழ்வு உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படப்போவதையிட்டு நான் மிக மகிழ்வதோடு சிறப்பாக இவ்விழாவினை ஏற்பாடு செய்த பழைய மாணவர் மன்றத்திற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறி இன்னும் பல விழாக்களை இம்மன்றம் கொண்டாட வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இம்மன்றத்தின் பொருளாளராகவும், உப தலைவராகவும் பதவி வகித்த எனக்கு இச்சந்தர்ப்பத்தை அளித்ததையிட்டு எனது நன்றியையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க பழைய மாணவர் மன்றம்! வளர்க வைத்தீஸ்வராக்கல்லூரி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வரன் அருளால் பொலிவெய்த நல்லாசிகள்!



**திரு. சி. இராஜதுரை**
முன்னாள் உபஅதிபர்

யா/வைத்தீஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் மன்றம் 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுகிறது. 55 ஆண்டுகள் கல்லூரியில் ஆசிரியனாகக் கடமையாற்றியவன் என்ற வகையிலும் 50 ஆண்டுகளாகப் பழைய மாணவ மன்றத்தின் அங்கத்தவன் என்ற வகையிலும் மன்றத்தின் பொன் விழாவுக்கான ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

1948ல் நான் கல்லூரி ஆசிரியனாகக் கடமை ஏற்றேன். 1952இல் பழைய மாணவ மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை இம்மன்றம் கல்லூரியின் வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றி வருகின்றது. இம்மன்றம் இன்று பொன்விழா காணுகின்றது என்பதில் பேருவகையடைகின்றேன்.

பொன்விழாவின்போது வைத்தீஸ்வராவின் ஆரம்பகால வரலாற்றை மீண்டும் பார்ப்பதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மும்மூர்த்திகள் வலம் வந்த பூமி அது. அமரர்களாகிவிட்ட அம்பிகைபாகன், வைரமுத்து, சீனிவாசகம் போன்ற பெரியார்களால் உருவாக்கப்பட்டதே வைத்தீஸ்வரா வித்தியாலயம். அது ஒரு பொற்காலம். 1948ம் ஆண்டிலேயே 1600 மாணவர்களையும் 69ஆசிரியர்களையும் கொண்டு விளங்கிய கல்லூரி. 1970 வரை மிக உன்னத நிலையில் இருந்து மாறவில்லை. 1973 காலப்பகுதியில் ஆண்டு 1 – 5 பிரிவு மூடப்பட்டமை, போராட்ட சூழல் போன்ற காரணங்களால் கல்லூரி பெரிதும் பாதிப்படைந்தது. இக்காலப் பகுதியிலும் பாடசாலையின் வளர்ச்சி கருதி பழைய மாணவர் மன்றம் அயராது உழைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று இம்மன்றம் பொன்விழா கொண்டாடுவதில் பெருமையடைகின்றேன். எனது நல்லாசிகள் உரித்தாகுக. பொன்விழா தருணத்தில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதோடு வைத்தீஸ்வரன் திருவருளால் இக்கல்லூரி மேலும் சிறந்து விளங்க நல்லாசிகள் உரித்தாகுக.

**நமக்குத் தேவையான கல்வி**

நல்ல பண்புகளை உருவாக்குகின்ற, மனவலிமையை வளர்க்கின்ற, அறிவை வளம்பெறச் செய்கின்ற, தன்னம்பிக்கையை ஊட்டுகின்ற கல்வியே நமக்குத் தேவை.

— சுவாமி விவேகானந்தர் —





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியார் நோக்கத்தையும் பாரம்பரியத்தையும் காப்பாற்றுக!

திரு. த. புத்திரசிங்கம் B.Sc.
ஓய்வுபெற்ற ஆசிரியர்
லண்டன்.

பல காலம் ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இன்று ஐம்பது வருடகாலத்தை எட்டியிருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் 1955ம் ஆண்டு வைத்தீஸ்வராக்கல்லூரியில் சேர்ந்தபோது ப.மா.ச.இற்கு வயது இரண்டு. இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் சிலர் என்னுடன் சக ஆசிரியர்களாக இருந்தார்கள். மேலும் பல பழைய மாணவர்கள் பலர் உயர்துறைகளில் தொழில்புரிவோர். வருடாந்த ஒன்றுகூடல்களில் மிகவும் ஆர்வத்தோடு கலப்பதும் அடிக்கடி வருகை தந்து தங்கள் நெருக்கத்தைக் காட்டுவதுடன் பழைய கால மகிழ்ச்சிக்குரிய அனுபவங்களையும் நினைவுபடுத்தியும் செல்வது வழக்கம். பாடசாலையில் அடிக்கடி நடைபெறும் கலை, கலாச்சார சமய வைபவங்களில் பங்குபற்றி தங்களால் இயன்ற உதவியைச் செய்வதில் பெருமைப்படுவார்கள். அவர்கள் பாடசாலைக் குடும்பத்தின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவது அவர்களுக்கு ஒரு தனித்துவமான உரிமை உணர்வைக் கொடுத்தது.

இதை எழுதும் பொழுது எனது ஆசிரிய காலத்தின் பொற்காலத்தின் எண்ணங்கள் என் மனதுக்கு வருகின்றன. பாடசாலையில் விஞ்ஞானக் கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் பொறுப்பாக இருந்து எனது சக ஆசிரிய நண்பகளுடன் சேர்ந்து பெரும் வெற்றியைக் கண்டோம். சில ஆண்டுகளிலேயே மருத்துவம், பொறியியல், கணக்கியல் ஆகிய துறைகளில் சர்வசாலைக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவதைப் பார்த்துப் பெருமையடைந்த காலம் அது.

அந்த நாட்களின் பாடசாலைகளின் கட்டிட விருத்தியும், கல்வி விருத்தியும பெருமளவிற்கு கல்வி இலாகாவில் தங்கி இருக்கவேண்டியிருந்தது. மேலும் இவ்விடயங்களைத் தொடர்புபடுத்துவதற்கு கல்வி இலாகா, பெற்றோர் ஆசிரிய சங்கங்களுக்குத் தான் அங்கீகாரம் கொடுத்தது. பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலைகளுக்கு அணிகலங்களாகவே இருந்தன.

இன்று அந்நிலை மாறிவிட்டது. ஏறத்தாள இருபது வருடகாலப் போரின் காரணத்தால் கல்வி இலாகா பெருமளவு பலம் குறைந்ததோடு பாடசாலைகளும் சேதமடைந்துவிட்டன. இந்நிலையில் பழைய மாணவரின் பங்கு இன்றியமையாததாக மாறிவிட்டது.

பழைய மாணவர் சங்கங்கள் கூடிய பொறுப்புடையவையாக மாறிக்கொண்டு வரும்பொழுது வெளிநாடுகளில் உண்டாகிக் கொண்டுவரும் கிளைச் சங்கங்கள் வசதியுடையனவாகவும் ஆர்வமுடையனவாகவும் காணப்படுகின்றன. இந்த இரு வகைச் சங்கங்களினதும் சிறப்பு அம்சங்களை மிகவும் கவனமாகவும் சாதுரியமாகவும் பயன்படுத்தினால் எங்கள் பாடசாலையை மீண்டும் கட்டியெழுப்புவதில் வெற்றி காணமுடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

தற்போது லண்டனில் உள்ள வைத்தீஸ்வராக் கிளைச் சங்கம் மிகவும் உற்சாகமாகத் தொழிற்படுகின்றது. சில பழைய மாணவர்களின் அயரா உழைப்பினால் ஓரளவு பணம் சேகரிக்கக் கூடியதாக இருப்பதை நான் அறிவேன். அதேபால் தாய்ச் சங்கமும் மிகவும் ஆர்வத்தோடு தொழிற்படுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

இப்போதைய அதிபர் உத்தியோகத்திற்குப் புதியவரெனினும் பாடசாலைக்குப் புதியரல்லர். எனவே சில பெரியாரின் அயராத உழைப்பினால் கட்டி எழுப்பிய சுவர்களும் கூரைகளும் அழிந்து போனாலும் பாடசாலையின் சிறந்த பாரம்பரியத்தையும் பெரியார்களின் நோக்கங்களையும் பழைய மாணவர் சங்கத்தின் உதவியோடு அவர் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையையும் நல்லாசியையும் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழா காணும் மன்றம் புதுமைகள் படைக்கட்டும்!

திரு. தி. லோகநாதன்
(பழைய மாணவன்)

*வைத்தீஸ்வராக் கல்லூரி வரலாற்று நாயகர்கள் நாம்
பொன்விழா காணும் பழைய மாணவர் மன்ற பிரதிநிதிகள்
பழைய மாணவனின் பணிவான வணக்கத்துடன்
பொன்விழா மலருக்கான பொன்னான வாழ்த்துச் செய்தி.*

*ஐம்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றிய மன்றம்
பொன்விழா காண்பதில் பூரிப்படையும் மன்றம்
பல ஆயிரம் மாணவர்களை உடைய மன்றம்
வைத்தீஸ்வரன் கருணையால் வரலாறு படைத்த மன்றம்*

*அதிரடி நாயகன் அம்பிகைபாகன் (அதிபர்)
மதிமுக நாயகன் வைரமுத்து (உப அதிபர்)
பிரம்படி நாயகன் சுப்பிரமணியன்
குட்டும் நாயகன் குடுமி கோபாலப்பிள்ளை*

*வித்தியா தருமம் தந்த வித்தகர்கள் - இவர்கள்
இம் மன்றத்தின் ஆதார புருஷர்கள்
இவர்கள் மாத்திரமா இன்னும் பலர்
இன்றும் எம் இதயத்தில் வாழ்பவர்கள்*

*கலை விழா கண்டமன்றம் கல்லூரி மண்டபம்
கட்டிய மன்றம்
இசை விழாக்கள் கண்ட மன்றம் கல்லூரி ஏற்றம் பெற
உழைத்த மன்றம்
வெள்ளி விழா கண்டமன்றம் இன்று பொன்விழா
காணும் மன்றம்
வெற்றி நடை போடும் மன்றம் வேங்கை போல்
செயல்படும் மன்றம்*

*பொன்விழா காணும் பழைய மாணவ மன்றம்
புதுமைகள் யாவும் படைக்கட்டும்
வண்டன் கிளையும் கண்டா கிளையும்
நல்லன பல புரியட்டும்*

*பொன்விழா காணும் புதுமன்ற பிரதிநிதிகளே
விழா சிறப்புற விருப்புடன் வாழ்த்துகின்றேன்
நல்வழி நின்று நல்ல பல சாதனைகள் செய்ய
இனிதே வைத்தீஸ்வரன் இறையருள் வேண்டுகிறேன்.*



*நன்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவை காட்டும் நீதியில் செயல்படும் ஔடதமான மன்றம்

அன்புடன் மாணவரை அரவணைத்து
அரிய கருத்துக்களை மனதில்வளர்த்து
ஆசையுடன் அயராது கல்வி புகட்டி
ஆன்றோர் தந்த அறிவுரைகள் உணர்த்தி
இயலிசை நாடகம் மூன்றையும் வளர்த்து
இனிதே விளையாட்டுத் துறையையும் ஊக்கி
ஈசனைத் தினமும் தொழுதிட வைத்து
ஈதலின் மகத்துவம் எடுத்தும் இயம்பி
உள்ளத்தாலும் இதயத்தாலும் வாழ்வில்
உயிரென இனத்தையும் தமிழையும் நேசித்து
ஊன்றுகோலாய் கற்றதைக் கைக் கொண்டு
ஊக்கத்தால் உயர்வும் காணலாமென்ற
ஏற்புடைத்தான தத்துவத்தை உணர்த்தி
ஏராளம் தரும் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு
ஐம்பது ஆண்டாகத் தோள்கொடுத்து
ஐக்கியராச்சியம் கனடாக் கிளைகளையும்
ஒருமுகப்படுத்தி போர்ச்சூழல் மத்தியிலும்
ஒப்பற்ற பணிகளைத் தேவைக்<sub></sub>, ஏற்ப
ஓய்வற்றுப் புரிந்து பொன்விழாக்காணும்
ஓங்குபுகழோடு யாழ்ப்பாணத்தில் தாபித்து
ஓதிய வண்ணம் செயல்பட்டு விளங்கி
ஔவை காட்டும் நீதியில் செயல்படும்
ஔடதமான முன்னைய மாணவர் மன்றத்தை
உயிரெனக் காத்து வாழ்த்துகின்றேன்.




**கவிஞர் திரு. நாகேந்திரன்**
பழைய மாணவன்,
லண்டன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகுபோல் படர்ந்து நேசக்கரம் நீட்டும் பழைய மாணவர்கள்

வீடு, கோயில், கல்விக்கூடம் ஆகிய மூன்றும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை.

அமைதியாக வாழவும், ஆன்மீகத்தை நாடவும், வாழ்க்கையை வளம்படுத்தவும் இம்மூன்றும் முக்கியமானவை.

ஆனால் ஒரு இனத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் மலர்ச்சிக்கும் முக்கியமான ஒன்றாக விளங்குவது கல்விக்கூடங்கள் தான் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இந்தக் கல்விக் கூடங்கள் தான் இன்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றவாறு எமது ஈழ மக்கள் தமது வாழ்க்கையை சீராக்கிக் கொண்டு வாழ்வதற்கு வழிவகுத்திருக்கின்றன.

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோனுயரும்" என்னும் முதுவாக்குக்கமைய கல்வியால் எமது மக்களை உயர வைத்த பெருமை எமது வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு உரியது.

இப்படியான ஒரு புனித கைங்கரியத்துக்கு காலாதிகாலமாக வித்திட்டு வந்த பெருமைக்குரியவர்கள் வைத்தீஸ்வராவின் பழைய மாணவர்கள்.

பொன்விழாக்காணும் பழைய மாணவர் மன்றமும், அதைக் கட்டியும், காத்தும், பேணியும் சேவை நலத்துக்காகப் பல அரிய அர்ப்பணங்களைச் செய்த பழைய மாணவர்கள் சாதாரண பழைய மாணவர்கள் போலல்லாமல் சமுதாய உணர்வோடு தமது கடமைகளைச் செய்து வந்திருக்கின்றார்கள், வருகின்றார்கள் என்று எழுத்தில் பதிக்க ஆசைப்படுகின்றோம்.

வைத்தீஸ்வராவுடன் அதன் பழைய மாணவர்களுக்கிருந்த நெருங்கிய உறவும், அக்கறையும் இன்றும் தொடர்ந்து வருகிறது. எமது குடும்பங்களில் எல்லாம் கல்விச் செல்வத்தின் மூலம் ஒளியேற்ற பல இன்னல்களுக்கிடையில் அவர்கள் ஆற்றும் பணி மேலானது, மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது.

ஒரு கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் பொன்விழாக் காணுகிறதென்பது சாதாரண விஷயமல்ல. அது அரை நூற்றாண்டுக் காலம் ஆல விருட்சத்தின் காலம் அதனால்தான் வைத்தீஸ்வராக் கல்லூரியும் இன்று கல்விக்கூட உலகில் ஒரு ஆலவிருட்சமாக வளர்ந்து வருகிறது.

காலத்தை வென்ற கல்விக்கூடமாக மலர்வு கண்டு வருகிறது. இப்படியான வளர்ச்சியின் பின்னணியில் ஐம்பது ஆண்டுகளாக பழைய மாணவர்கள் தொடர்ந்து அறுகுபோல் படர்ந்து நேசக்கரம் நீட்டி வந்திருக்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது எம் நெஞ்சம் குளிர்கிறது.

அலையலையாக எமது ஈழ மக்கள் எதிர்நோக்கும் துன்பங்களை எல்லாம் தீர்த்து வைத்த எம்பெருமான் வைத்தீஸ்வரனின் கருணைக் கண் பார்வையில் அவர் வீற்றிருக்கும் ஆலயக் கோபுரம் போல தைத்தீஸ்வராக் கல்லூரியும் வளரவேண்டுமென்று ஆசைப்படும் பழைய மாணவர்கள் நாங்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றோம்.

எமது நோக்கமும், எண்ணமும் மட்டும் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது அவை செயலிலும் பிரதிபலிக்க வேண்டும்.

இதை எதிர்காலத்திலும் பழைய மாணவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். கல்லூரி ஒரு உன்னத நிலையை அடையும். ஈழவள நாட்டில் நல்லன எல்லாம் நடக்க நாம் தோள்கொடுப்போமாக. பழைய மாணவர்கள் மன்ற பொன்விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்.

— ப.மா.மன்றம் லண்டன் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியங்கோடி தேடிய புண்ணியர் நாகமுத்து

திருமதி. கு. ஷண்முகடாஸ் B.A.Dip.in.Ed
ஓய்வுபெற்ற ஆசிரியர், பழைய மாணவி,
அதிபர் தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை

"அறம் செய்ய விரும்பு" என்பது தண்தமிழ்ச் செல்வி நம் ஔவை மூதாட்டி அறிவு றுத்திச் சென்றுள்ள அர்த்தமுள்ள அறிவுரை. அவர் உணர்த்தியுள்ள அறம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல எல்லாமாக முப்பத்திரண்டாகும். அகிலாண்ட நாயகியாகிய அன்னையே இந்த முப்பத்திரண்டறங்களையும் காஞ்சியில் இருந்து செய்தார் எனப் புராணங்கள் பகர்கின்றன. இந்த முப்பத்திரண்டு அறங்களுள் தலையாய அறமாக விளங்குவது எழுத்தறிவித்தலாகும். இதையே நம் பாட்டுக்கொரு புலவன் பாரதி சற்று விரிவாக



"இன் நறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''

எனக் கூறுகின்றான். ஏழைக்கு எழுத்தறிவிக்கத் தம்மை அர்ப்பணித்து புண்ணியங் கோடி தேடிய புண்ணியர் நம்மண்ணில் பலர் நல்லை நகர் தந்த நாவலர் இவர்களுக்கெல்லாம் இவ்வரும் பணிக்கு அடியெடுத்துக் கொடுத்தவர். ஏழைக்கு கல்வி இலவசக்கல்வி, தாய்மொழிக் கல்வி, சமயக் கல்வி ஆகியவற்றுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்த முன்னரே அதாவது நூற்றாண்டுகளுக்கு முன்பே நாவலர் பெருமான் இவற்றுக்கு முதன்மை கொடுத்து அவற்றை வளர்த்தவர். நாவலர் பெருமான் வழியை அடியொற்றியே நம் கல்லூரியின் ஸ்தாபகர் திரு.தம்பு நாகமுத்துவும் செயற்பட்டார். அன்னாரின் செயற்கரிய செயற்பாட்டின் பயனே யாழ் நகர மத்தியில் வண்ணை வைத்தீஸ்வரப்பெருமானின் அருளாட்சியில் வளர்ந்தோங்கி நிற்கும் எம் வைத்தீஸ்வராக் கல்லூரியாகும்.

## பிறப்பும் கல்வியும் தொழிலும்

பெரியார் நாகமுத்து இயற்கை வளத்தோடு கல்வி வளமும் செழித்தோங்கும் இடைக்காடு எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1868ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதி பிறந்தார். வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டார். இவரது ஆரம்பக் கல்வி கந்தர்மடம் சைவப்பாடசாலையில் இடம் பெற்றது. அடுத்து யாழ்.பரியோவான் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியைப் பெற்றார். பின்னர் இந்தியா சென்று கல்கத்தாவில் பட்டப் படிப்பை மேற்கொண்டு கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் F.A. பட்டம் - Father of Arts பெற்றார். இவரது தம்பியார் அறிஞர் சரவணமுத்து M.A., M.Sc. பட்டதாரி. பெரியார் நாகமுத்து 1895 இல் கில்னர் கல்லூரியில் ஆசிரியர் பதவி ஏற்றார். இதன் பின்னர் 1910ல் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணி ஏற்று விடுதி ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இந்துக்கல்லூரியில் கடமையாற்றிக் கொண் டிருக்கும் பொழுது மாணவர் உள, உடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நலன்களில் மிகுந்த அக்கறையெடுத்த தோடு ஏழைபங்காளனான இவர் வறிய மாணவர் களுக்கு உதவுவதில் முன்னின்றார். ஏழைச் சிறார்க்கு உதவுதல், அவர்களுக்கு அனுமதி, அவர்கள் பராமரிப்பு ஆகிய விடயங்களில் இந்துக் கல்லூரியின் அன்றைய நிர்வாகத்துக்கும் பெரியார் நாகமுத்துவுக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட் டன. இவ்வாறு கருத்து மோதல்கள் ஏற்படவே இந்துக் கல்லூரியில் தன் சேவையை உதறித் தள்ளிவிட்டு வெளியேறினார். இவரோடு அங்கு ஏழைச் சிறார்களுக்காகப் பாடுபட்ட மேலும் மூன்று ஆசிரியர்களும் தம் பதவி துறந்து வெளியேறினர்.

**நாவலர் வழியில்**

ஆசிரியர் நாகமுத்து நாவலர் பெருமானை நினைத்துப் பார்த்தார். "சைவச் சிறார் தத்தம் சூழலில் கல்விகற்க சைவாபிமானிகள் உதவ முன்வர வேண்டும்" என்ற நாவலர் பெருமானின் அறைகூவலே இவரின் அடிமனதில் இருந்தது. தனது சூழலிலே அங்குள்ள வசதி வாய்ப்புகள் அற்ற ஏழைச்சிறார்களும் எழுத்தறிவு பெற வேண்டும். அதற்குத் தான் ஒரு கல்விக் கூடம் நிறுவவேண்டும் என்று திடசங்கற்பம் செய்து கொண்டார். சில பெரியாருக்குத் தன் எண்ணக் கருத்தை வெளியிட்டார். இதன் பலனாக 1813ம் ஆண்டு முதலில் சிவன் கோவில் காணியில் கொட்டகையமைத்து, பாடசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. வாடகை ஒரு வருடத்திற்கு ஒரு ரூபா என அறியக்கிடக்கிறது. இவரது உளக் கிடக்கை இரண்டு எண்ணங்களைக் கொண்டது. ஒன்று வசதி வாய்ப்புக் குறைந்தவர்களுக்கு அரைக் கட்டணத்தோடு கல்வி. வீட்டில் தளபாட, விளக்கு வசதியற்றோர்க்கு இராப்பள்ளி நடத்தல். இவ்விலட்சியங்களை உளங்கொண்டு அவரின் கல்விச் சேவை தொடர்ந்தது. இதன் பயன் பாடசாலை இரண்டாக அமைந்தது. ஒன்று தமிழ் மற்றது ஆங்கிலம்.

தமிழ் பாடசாலையின் பெயர் விவேகானந்தா வித்தியாலயம். ஆங்கிலப் பாடசாலையின் பெயர் வைத்தீஸ்வர வித்தியாலயம். தமிழ்ப் பாடசாலைக் குத் தனது சகோதரர் வேலுப்பிள்ளையைப் பொறுப்பாக்கினார். ஆங்கிலப் பாடசாலையைத் தான் தலைமை வகித்து நடாத்தினார். காலப் போக்கில் ஒருவாறு விவேகானந்த வித்தியால யத்துக்கு அரச மான்யம் கிடைத்தது. ஆனால் ஆங்கிலப் பாடசாலைக்கு அரச மான்யம் கிடைக்க வில்லை. இதற்கு அரச மான்யம் கிடைக்க அன்றைய இந்துக்கல்லூரி நிர்வாகமும் ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. எத்தனை கஷ்டங் களின் மத்தியிலும் சில பெற்றோரின் உதவி பெற்று இப்பாடசாலையை நாகமுத்துப் பெரியார் நடாத்தி வந்தார்.

இப்பாடசாலைக் கட்டடத்துக்கு இட வசதி பெறுவதிலும் பெரியாருக்குப் பெரும் கஷ்டம் இருந்தது. ஆன்மீகமும் அறிவியலும் ஒன்றிணைந் தால் தான் கல்வி அர்த்தமுள்ளதாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். வைத்தீஸ் வரன் ஆலய தர்மகர்த்தா அமரர் கந்தப்பச் செட்டியாரின் பெரிய தந்தையார் கோபாலசாமிச் செட்டியார் அவர்களை அணுகினார். அவர் இன்றைய கட்டடம் அமைந்திருக்கும் காணியைப் பெறுவதற்கு உதவி செய்தார். விடத்தல்தீவு உடையாருடன் தொடர்பு கொண்டு விடத்தல்தீவு விநாயகருக்கு அவர்கள் உடமையாக்கிய இக் காணியைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் இக்கல்வி நிறுவனம் விஸ்தரிக்கப்பட்டது. அதாவது வைத்தீஸ்வரன் அருளாட்சியில் வித்தியாலயம் வளர்ந்தது.

**நன்கொடை**

எனினும் வித்தியாலயத்தை தொடர்ந்து அரசு நன்கொடையின்றி நடாத்துவது பெரியாருக் குப் பெரும் இடர்பாடாகவே இருந்தது. எனினும் அவரது விடாமுயற்சி பலனளிக்கவே செய்தது.

அப்போது யாழ். நீதவானாக இருந்த அக்பர் நாகமுத்துப் பெரியாரை நன்கு அறிவர். அவர் அரசு நன்கொடையின்றி வித்தியாலயத்தை நடாத்த அவர் படும் இன்னல்களை நேரில் கண்டவர். தனது செல்வாக்கை நீதவான் பயன் படுத்தி அரசு நன்கொடையைப் பெற்றுக்கொடுத் தார். பாடசாலையில் மாணவர் தொகை அதிகரித் தது. இத்தகைய பெரியபள்ளியை வளர்த்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதும் நடாத்துவதும் தனியொருவருக்குக் கஷ்டமே எனினும் பெரியார் தளரவில்லை.

**மிஷன் பொறுப்பில்**

இச்சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ணமிஷன் தொடர்பால் சுவாமி சர்வானந்தாவை யாழ். அழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. றிம்மர் மண்டபத் தில் கூட்டம் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் சுவாமி சர்வானந்தாவுக்கு பள்ளி நிலையை விளக்கினார். 1917ல் விவேகானந்த வித்தியாலய மும் வைத்தீஸ்வரா வித்தியாலயமும் ஒன்றிணைக் கப்பட்டு இராமகிருஷ்ணமிஷனிடம் கையளிக் கப்பட்டது. சாதி, மத பேதமற்ற சமர சன்மார்க்க நெறியே இராமகிருஷ்ணமடத்தின் நெறி. ஏழை பங்காளராக அமைந்த ஒரு உலகளாவிய நிறுவனம். நாகமுத்துப் பெரியாரின் குறிக்கோள் களும் இவையே. எனவே தன் உள்ளக்கிடக் கையை வளர்த்தெடுக்கத் தக்கதொரு புண்ணிய சங்கத்திடம் தன் பள்ளிகளைக் கையளித்ததில் பெருமகிழ்வும் நிம்மதியும் பெற்றார். பெரியார் மிஷன் பொறுப்பேற்றபின் சுவாமி சர்வானந்தா வின் பின் வந்த சுவாமி விபுலாநந்தாவின் நேரடித்தொடர்பால் கல்விச் செயற்பாடுகள் பல்துறையில் பல்கிப் பெருகி யாழ். நகரிலே ஒரு A தரப் பாடசாலையாக வைத்தீஸ்வரா மிளிர்ந்தது.

**ஆன்மீகமும் அறிவியலும்**

வைத்தீஸ்வரா வித்தியாலய வரலாற்றில் ராமகிருஷ்ண மிஷனின் நிர்வாக காலம் ஒரு பொற்காலமேயாகும். ஆன்மீகமும் அறிவியலும் வித்தியாலத்தில் அலைமோதிக் கொண்டிருந்தன. இந்தியாவில் இருந்து இங்கு வந்து போகும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் தந்துபோகும் நற்சிந்தனைகளும் போதனைகளும் மாணவர் களை ஒழுக்க சீலர்களாக்கின. மலையக மாண வர்களுக்கும் இவ்வித்தியாலயம் பெரும் உதவி யாகவிருந்தது. அன்றைய தமிழரசுக்கட்சியின் தலைவர் கோப்பாய் கோமான் வன்னியசிங்கத் தின் வேண்டுகோளை ஏற்று மலையக மாணவர் பலரின் உயர்கல்விக்கு மிஷன் உதவியது. அவர்களுக்கு இலவச விடுதி வசதி, கல்வி வசதிகளை வழங்கியது. இதுமட்டுமல்ல யாழ். நகரின் பிரபல பாடசாலைகளில் ஆரம்பிக்கப் படாத பாடப்பரப்புகள் இங்கு இருந்தன. லண்டன் A/L வகுப்புக்களும் இங்கு நடைபெற்றன. வெளி யிடங்களில் இருந்து வந்த பல ஏழை மாணவர்கள் இங்கு இலவசமாக உயர்கல்வியைப் பெற்றுப் பல்கலைக் கழகங்களுக்கும், வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சென்று கல்வி கற்றனர்.

வித்தியாலய நிறுவுனர் பெரியார் நாக முத்துவின் உளக் கிடக்கைகளான ஏழைக்கு கல்வி, சாதிமத பேதமற்ற நெறி, இலவசக்கல்வி, ஆன்மீகக்கல்வி முதலியன மிஷனால் வித்தி யாலயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. நல்லதை எண்ணினார் பெரியார். அவர் மறைந்த பின்பு அந்த எண்ணங்கள் நன்றாகவே நிறைவடைந்தன.

இத்தகைய ஒரு புகழ்வாய்ந்த கல்லூரியை யாழ். நகரில் ஸ்தாபித்த நாகமுத்துப் பெரியாரின் - அதாவது செயற்கரிய செய்த இச்செம்மலின் குடும்பத்தையும் சற்றுத் தொட்டுப் பார்க்க வேண்டி யது நம் கடமை. 1898ல் பெரியார் திருமணம் செய்தார். 3 பிள்ளைகளுக்குத் தந்தையானார். மூத்தமகள் தையல்நாயகி, இரண்டாவது மாணிக்க இடைக்காடர், மூன்றாவது நமசிவாய இடைக்காடர். பிள்ளைகளும் தந்தைபோன்று கல்வியில் பெரியர். மாணிக்க இடைக்காடர் கொழும்பு மலேஷியப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகத் திகழ்ந்த வர். பின்னர் இவர் யாழ். உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார். நமசிவாய இடைக்காடர் நீண்டகாலமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விப் பணியாற்றியவர்.

எமது ஸ்தாபகர் நாகமுத்துப்பெரியார் சிறந்த எழுத்தாளருமாவார். 1928ல் சித்த குமாரன் எனும் நூலையும் 1929ல் நீலகண்டர் இலகு சாதகம் எனும் நூலையும் எழுதினார்.

தன்னலங்கருதாத சமூகத் தொண்டனாக கல்விமானாக அன்றைய இக்கட்டான சூழலில் ஏழைக்கு எழுத்தறிவிக்க அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டு புண்ணியம் கோடி தேடிய புண்ணியராக இவ்வுலகைவிட்டு 1932ல் சிவபதம் அடைந்தார். பூதவுடல் புகைந்தது. அவர் புகழுடல் நம் மத்தியில் ஒளிவீசி வருகிறது.

(*02.08.2003* அன்று இடம்பெற்ற நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நிகழ்வில் நிகழ்த்தப்பட்ட நிறுவுனர் உரை இது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Glimpses of our Alma Mater

***Mr. W.S.Senthilnathan* - Attorney at Law**



It is indeed a great pleasure and a privilege to have been called upon to write an article for the golden jubilee number of the old student'sAssociation of our Alma Mater, Vaidyeshwara Vidyalaya. As a student for ten years and later as a teacher for another ten years I had been associated with, or rather involved in many of the important activities of the school. When I joined the school in the kindergarten there were classes only up to the J.S.C. When I passed the J.S.C. in 1941,S.S.C. classes were newly formed and in the following year five students, including myself, sat for the S.S.C. examination and all the five were successful and immediately a holiday was declared. I left the school in 1942, joined Jaffna Hindu and entered the University from there.

I joined the staff of the school as a teacher in 1952 and that happened to be a great year, the beginning of the rapid progress in the history of the school. H.S.C. classes were formed and the school was raised to grade I. The old students' Association was also inaugurated and I was elected secretary. From then onwards we had an annual get together with general meeting, a lunch and volleyball match between the old boys and the present.

In the following year a grand carnival and exhibition was held on a grand scale and the O.S.A, played a very important role in making the event a grand success. With the funds realized there from the present hall was constructed demolishing the old hall with thatched roof. A grand dinner was organized by the O.S.A. that year in the new hall with after dinner speeches and all.

Thereafter the school progressed in all spheres by leaps and bounds under the grand "trio" of the school (as they were known) namely, messrs. S.Ambikaipakan, C.Vyramuthu and T.Seenivasagam till the school was taken over by the government in 1962. I had been a student under all of them and also under Mr.V.Vythilingam. And after having been a colleague of theirs for ten years, I retired long before all of them with the take over of the school. While I was in England I wrote an article to the school magazine, in 1968 I believe, on the eve of the retirement of Mr.Ambikaipakan.

Even after I started practice as an Attorney at Law I had been maintaining a cordial relationship with the school and the O.S.A. till I left Jaffna in 1990. The old students of the school are doing very well in various fields all over the world and have formed O.S.A.'s in those countries as well. I am glad that the Jaffna O.S.A. is celebrating the golden jubilee this year and I wish and pray that the O.S.A. will grow from strength to strength and serve our Alma Mater in all its activities.

Get the mercy of God of his greatest children; these are the two chief ways to God. Five minutes in their company will change a whole live, and if you really want it enough; one will come to you. The presence of those who love God makes a place holy, such is the glory of the Lord. They are He and when they speak. their words are scriptures. The place where they have been becomes filled with their vibrations, and going there feel them and have a tendency to become holy also.

***- Swami Vivekananda***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலயத்தைப் பற்றிய சில நினைவுகள்.........

திரு. து. சீனிவாசகம், B.A.,J.P.



விஞ்ஞான பாடங்களாகிய இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய சாஸ்திரங்கள் கற்பிப்பதற்கு வசதியற்ற பாடசாலைகளில் நாட்டுச் சீவன சாஸ்திரம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் படவேண்டுமென்ற நியதியிருந்த காலமாகிய 1927 ஆம் ஆண்டில் ஸ்ரீமத்சுவாமி விபுலாநந்தர் அவர்கள் அப்பாடம் கற்பிப்பதற்கு இராமகிருஷ்ண சங்க - வைத்தீஸ்வர வித்தியாலத்தில் என்னை ஆசிரியராகச் சேரும் வண்ணம் கேட்டார். அக்காலத்தில் அரசாங்கச் சேர்வே கிளரிக்கல் பரீட்சையில் சித்திபெற்ற யான் எனது தகப்பனாரின் விருப்பத்திற்கிணங்க அரசாங்க உத்தியோகத்தில் சேராது லண்டன் இண்டர் மீடியேற் சயன்ஸ் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். சுவாமி அவர்களின் விருப்பதிற்கிணங்க நாட்டுச் சீவன சாஸ்திரம் கற்பிப்பதற்காக ஒரு நேர ஆசிரியராக வித்தியாலயத்தில் சேர்ந்தேன். சிரத்தையுடன் மாணவர்கள் அப்பாடத்தைக் கற்பதற்கு உதவி செய்ததால் அவர்கள் கனிஷ்ட தராதரப் பரீட்சைகளில் திறமையான சித்தி பெற்றனர். அக்காலத்தில் கனிஷ்ட தராதரப் பரீட்சை வகுப்பே வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆக உயர்ந்த வகுப்பாகும். நாட்டுச் சீவன சாஸ்திரம் முறையாகவும் திறமையாகவும் கற்பிக்கப்படும் பாடசாலையென வித்தியாலம் கல்வித் திணைக்களப் பரிசோதகர்களாலும் மற்றைய கல்லூரி ஆசிரியர்களாலும் பெரிதும் மதிக்கப் பட்டது.

நாட்டுச்சீவன சாஸ்திர ஆசிரியராகக் கடமை பார்த்த யான் ஒட்டு மூலமாகத் தாவர விருத்தியினதும் அதன் மூலமாகப் பழ உற்பத்திப் பெருக்கத்தினதும் அத்தியாவசியத்தை மாணவர்கள் உணர்ந்துகொள்ளும் பொருட்டுத் தொண்டாற்றினேன். யாழ்ப்பாணம் ஒரு வரண்ட பிரதேசமென்றும் அப்பிரதேசத்தில் நீர் ஊற்றாது கோடைக் காலத்தில் வளரும் மரங்களில் பழ மரங்களின் முகை, தளிர் ஆகியனவற்றை ஒட்டி நீர் ஊற்றாது பழ உற்பத்தி செய்யும் முயற்சி வேண்டற் பாலதென மாணவர்களுக்கு யான் அறிவுறுத்துவது வழக்கம். அப்பொழுது பாடசாலை வளவுக்கு மேற்குப் பக்கமாக இருந்த வளவில் (இப்பொழுது அந்த நிலத்தில் வித்தியாலய விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் காட்சியளிக்கின்றன.) விளாத்தி மரமொன்றில் தோடையை ஒட்டி அது வளர்ந்து வந்ததை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாகக் காண்பிப்பது வழக்கம்.

அக்காலத்தில் ஒரு பத்து வருட காலமாகக் காலையில் எனது இல்லத்திற்கு வரும் சில மாணவர்களுக்கு யோக ஆசனப் பயிற்சி கொடுப்பது வழக்கம் பள்ளிக் கூடங்களின் போட்டி விழாக்களிலும் மற்றைய விழாக்களிலும் பயிற்சி பெற்ற அம்மாணவர்களிற் சிலர் மேடையேறி யோகாசனங்களைக் காட்டிப் பலரது மதிப்பைப் பெற்றனர்.

### ரொபிசன் பாராட்டு

1937ஆம் ஆண்டு எஸ்.யு.சோமசேகரம் யாழ்ப்பாணத்தில் வட்டாரப் பரிசோதகராகக் கடமை பார்த்தார். அப்போது வித்தியாதிபதியாக விருந்த திரு. மாக்லியட் ரொபிசன் சித்திரை மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்யப் போகிறாரென்றும் திறமையாகப் பயிற்றப்பட்ட பாடசாலைகளை அவருக்குக் காண்பிப்பதற்கும் முற்றவெளியில் பள்ளிக்கூட மாணவர்களின் கூட்டுத் தேகாப்பியாசப் பயிற்சி ஒன்றைக் காண்பிப்பதற்கும், கல்வித்திணைக்களத்தின் யாழ்ப்பாணக்கிளை முயற்சியெடுத்து வந்தது. அதில் திரு. சோமசேகரம் பெரு முயற்சியெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். வித்தியாதிபதி திரு.ரொபிசன் யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்யும் அவ்வாரத்தில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நாட்டுச்சீவன சாஸ்திரப் பொருட்காட்சியொன்றும் முற்ற வெளியில் யோகாசனக் காட்சியொன்றும் ஆயத்தப் படுத்தும் வண்ணம் திரு. சோமசேகரம் எம்மைத் தூண்டினார். அதற்கு உடன்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டு முற்றவெளியில் வித்தியாலய மாணவர்களின் யோகாசனமும், வைத்தீஸ்வர வித்தியாலய நாட்டுச்சீவன சாஸ்திரக் கூடத்தில் பொருட்காட்சியும் காண்பிக்கப்பட்டன. திரு. ரொபிசன் மற்றும் கல்வித் திணைக்கள உத்தி யோகத்தர்களும் மற்றையோரும் வித்தியாலய மாணவர்களின் யோகாசனக் காட்சியையும் வித்தியாலயத்தின் பொருட்காட்சியையும் பார்வை யிட்டு அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் வேலைத்திறனுக்குப் புகழ்மாலை சூட்டினர்.

பொருட்காட்சி தொடங்கிய முதல் நாள் பெருமழை பெய்ததனால் ஓலைக் கொட்டிலாக இருந்த வித்தியாலய மண்டபத்தில் ஒழுக்கு ஏற்பட்டு, பாடசாலை நடாத்த இயலாது வெள்ளக் காடாக இருந்தது. திரு. ரொபிசன் அவ்வெள்ளக் காட்டைப் பார்த்து விடக்கூடாதென அப்பகுதியை ஸ்கிறீன்களால் மறைத்து வைத்தோம். பொருட் காட்சியைப் பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்த திரு.ரொபிசன் மேலும் பாடசாலையைப் பார்ப் பதற்கு ஸ்கிறீனை நீக்கி மண்டபத்துள் செல்ல எத்தனித்த அவர் மண்டபத்தில் ஒழுக்கினால் ஏற்பட்ட வெள்ளத்தைப் பார்வையிட நேர்ந்தது. மிக்க கஷ்டநிலையில் பாடசாலையைத் திறம்பட நடாத்தி வருவதற்காக அதிபர் திரு. அம்பிகை பாகனுக்கு நன்றி கலந்த வாழ்த்துக்களைக் கூறி திரு. ரொபிசன் சென்றார்.

**விஞ்ஞான பாட வளர்ச்சி**

விஞ்ஞான பாடங்களில் நாட்டுச்சீவன சாஸ்த்திரம் மாத்திரமே கற்பித்து வந்த வித்தியாலயத்தில் 1939ம் ஆண்டில் தாவரவியல் கற்பிக்கத் தொடங்கப்பட்டது. அக்காலத்தில் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடம் கற்பிப்பதற்குத் தேவையான ஆய்வுக் கூடமொன்றும் தயார் செய்ப்பட்டது. அப்பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் திறமையாகச் சித்தியெய்தியமையால் 1941ம் ஆண்டில் விலங்கியல் கற்பிக்கத் தொடங்கி அதற்குரிய ஆய்வுகூடமும் நிறுவப்பட்டு உபகர ணங்களும் சேகரிக்கப்பட்டன. காலஞ்சென்ற திரு.வி.தில்லைநடராஜா விலங்கியலும் யான் தாவரவியலும் கற்பித்து வந்தோம். இவ்விரு பாடங்களில் வெற்றியீட்டவே வித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் பழைய மாணவர் களிடமும் நண்பர்களிடமும் பணம் சேகரித்துப் பௌதிகவியல் இரசாயனவியல் ஆகிய பாடங் களையும் கற்பிப்பதற்கு ஆய்வுகூடங்களை அமைத் ததுடன் தேவையான உபகரணங்களையும் சேகரித்தனர்.

தற்பொழுது வைத்தீஸ்வர வித்தியாலயம் விஞ்ஞான பாடங்களெல்லாவற்றையும் கற்பிக்கும் A. தரப் பாடசாலையாகக் காட்சியளிப்பதைப் பழைய மாணவர்களும் நண்பர்களும் கண்டு களிபேருவகை கொள்கின்றனர்.

**"நன்றி வைத்தீஸ்வரன்" 1968**

**(இது அமரர் து.சீனிவாசகம் கல்லூரி சஞ்சிகைக்கு 1968 ம் ஆண்டு எழுதிய கட்டுரை)**

**பஞ்சுமலை ஒன்று சிறு நெருப்புப் பொறியினால் எரிந்து சாம்பலாக மறைந்து போவது போன்று பாவங்கள் இறைவனுடைய அருளால் மறைந்து பட்டுப் போகும். - காந்திஜி -**



## நம்பிக்கை

**நம்பிக்கை என்பது சிறு புயற்காற்றிலும் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல, அது அடிபெயரா இமயத்தைப் போன்றது.**

**சுயநம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. உங்களுக்காக விரிக்கப்படும் எந்தவிதமான வலையிலும் சிக்கிவிடக் கூடாது. மற்றொருவருக்குத் தன்மேல் நம்பிக்கையுண்டாகும்படி செய்வதன் மூலம் இவ்வுலகத்தில் எக்காலத்திலும் எதையுமே இழந்ததில்லை. நம்பிக்கைதான் நம்பிக்கையை உண்டாக்கும். கடைசியில் உண்மைதான் வெல்லும், நன்மைதான் உண்டாகும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குண்டு.**

**- காந்திஜி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swami Vipulananda
# Some Reminiscences

by:
**Mr. A.M.A. Azeez**
*Principal, Zahira College, Colombo & Senator*

To the best of my knowledge and belief, I was the second Muslim to seek admission and be admitted to Vidyalaya, at that time-in strange contrast to it present status and stature – a boys' junior school, not even two hundred strong, with E.S.L.C. as its top –class and striving hard to win recognition among influential parents and public officials, and guided by a Head Master who, in his administration was enthusiastic, methodical and extremely efficient, though in his dress and demeanour he was too unconventional for a typical English school of that era-a place where Western ways and manners held sway unchallenged and were being aped to a degree of precision unknown before and after. Those were the days when English and fee levying were synonymous terms in the sphere of education and schools were not therefore confronted with the problems associated with rising numbers and the consequential shortage of staff, equipment and accommodation. Instead there was even rivalry among some school- heads to increase the numbers on their rolls with a view to gaining for their respective schools increased prestige and enhanced grants.

In such circumstances my admission should have been quite easy. But there was something special in my case which could not have been escaped the discerning eye of the keen Master. Between the admission of the first Muslim and that of myself, the second, a few years had elapsed without any Muslim seeking admission at all in spite of the close proximity of the school to the Muslim area. It was thus evident that partiality was being shown towards a distant school of a different denomination. The Head Master thus had in my admission an unanticipated opportunity to break down the prejudices that had persisted among the school's own neighbours.

To this situation many factors had contributed and some may be cited for their historical significance. In those days Western customs and costumes exacted such a deference as cannot be fully appreciated or understood by the school boys of the present generation, now quite used to witnessing civil servants and University lecturers "vertied" on important occasions. Vidyalaya's Head was an orthodox Brahmin from South India, turbaned and tie-less. There fore it was then possible for the Muslims to argue plausibly that while Vidyalaya was quite satisfactory as a Hindu institution, it was not adequate to fulfil the requirements of a good English School. The prestige of the older institutions and their superior resources weighed heavily against Vidyalaya young in years, weak in numbers and poor in finances. Although there was no Muslim School to impart English education at Vannarponai, the old school tie loyalty of the leading Muslim families of the locality did not



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

favour the Hindu Vidyalaya though quite close. The then prevailing caste–consciousness among the Hindus of Jaffna despite of the teachings of Sri Ramakrishna, made the Muslims somewhat doubtfull of the treatment that would be accorded to their boys. All these and other factors combined to militate against the popularity among the Muslims of the Ramakrishna Mission School near-by.

And yet I was sent to Vidyalaya. My grandfather swam against the current incurring the displeasure of some of our near relations. He made up his mind not on purely educational grounds, Vidyalaya was very near my home. My fond grandmother would not be deprived of the pleasure of personally supervising me during lunch – time. Among the Staff there were many good friends and customers of my grandfather. He was thus confident that I would be cared for affectionately at School. Besides through them he could be in close touch with my behaviour. Probably there was an underlying assumption on his part that one school was as good as another for the intellectual develepment of the pupil, particularly of one who had shown promise in his previous school. Thus the choice in my case was made in favour of Vidyalaya on account of its site rather than its status.

At this distant date and after a lapse of thirtyseven years it is quite clear to me that I was extremely fortunate in my grandfather's choice. I am happy that I did go to Vidyalaya and spend two of my most impressionable years there and not elsewhere. I would say in the words of Zahira's motto, Alhamdu Lillah, praise be to God.

It was at Vidyalaya that I became first acquainted with the devotional hymns of exquisite beauty and piety for which the Tamil Language is so famed through the ages and throughout the world. They were recited not merely on occasions of formal school – assemblies but on every school – day both at its begining and end .... a practice that is now emulated at Zahira with the Opening Chapter of the Holy Quran.

My joyous response to the friendliness that surrounded me at school confounded my grandfather's critics who had boldly prophesied that I would be quite uncomfortable in the alien atmosphere which encompassed Vidyalaya. When the Prize Day came a few months after my admission, I found myself made a star with a recitation-piece which I now recall extolled the Union jack for there was a large sized flag conveniently placed for me to address. This was my first platform appearance and I had been sufficiently trained to avoid a break-down. The function was presided over by the Officer Administering the Government the most important personage in Ceylon. Several of my relations had been invited and they were present in the hall. Probably they loudly applauded my performance and were convinced that even at Vidyalaya English did not lack the special attention wnich ambitious parents avidly clamoured for. They were sure that a muslim boy was not in any way discriminated against. Soon Vidyalaya became popular among Muslims and their numbers increased to such an extent as to warrant a special class in Islam. But there had been no ptecedent in Jaffna or elsewhere in Ceylon for a denominational school to cater for the religious needs of a set of pupils belonging to a different faith. The Ramakrishna Mission, however, followed a policy of tolerance in line with the precepts and practices of its founder and had to its credit many pioneering measures



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

against obscurantist orthodoxy. The school authorities were therefore able to make arrangements with the local leaders among the Muslims to provide the services of a Moulavi-Teacher to impart Islamic instruction to the Muslim boys of Vidyalaya during school hours and within school premises. This example was later followed at Jaffna Hindu.

Of the many events during my days at Vidyalaya, I recall one most vividly, the visitation of the school by Swami Sharvananda. Before he left Jaffna, Pundit Mylvaganam, at that time the principal of Manipay Hindu College and one of the earliest to obtain the Science degree of the London University, had irrevocably decided in favour of a sanyasin's life, thus deliberately forsaking the alluring prospects of a civil list officer's life and thereby rejecting intently the temptations of cash and cudos. In 1939, many years after I had left Vidyalaya, I was present at the reception that was accorded to him on the eve of his departure to Mayavati Ashram on an important assignment entrusted to him by the Mission authorities. By then he had become as known Swami Vipulananda. During the previous years he had been actively engaged in educational work among the Hindus of Eastern and Northern provinces. I became closely acquainted with him in 1942 – 3 when I was A.G.A.(Emergency) Kalmunai. He was for some weeks staying in the village of his birth a few miles distant from Kalmunai. In the year 1944 I had the privilege of his stay for twelve days with me at Mount Avenue, then the official residence of the A.G.A. Kandy.

During these days I came to know swami Vipulananda intimately. We discussed many problems and I derived special encouragement from his words to pursue undaunted the path which led to the incorporation of the Ceylon Muslim Scholarship Fund and the Principalship of Zahira College, Colombo. He spoke to me of the need for an Arabic – Tamil Glossary and the active assistance he was prepared to render in its compilation. With his knowledge and experience of East Ceylon, he felt that the people of this area, irrespective of community, caste or creed needed help urgently in their religious activities, educational development and social betterment. He was convinced that the necessary leadership could come from only those who were not only well educated but also religiously inspired and transformed. He himself had set an inspiring example in this direction by his untiring efforts in the spheres of religion and education which reflected a spirit of tolerance and a sense of service which characterized his Masters' Precepts and practices. It could truly be said of him that in Ceylon "he has helped to raise from the dust the fallen standard of Hinduism, not in words merely but in works also.

***From the Souvenir of Sri Ramakrishna Mission Educational Institutions in Ceylen.***

*Education does not mean teaching people what they do not know, it is a painful. continual and difficult and difficult work to be done by kindness. by watching. by warning. by precept and by praise but above all by example.* ***- Ruskin***

*Knowledge is proud that he has learned so much, Wisdom is humble that he knows not more.* ***- William Cowper***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணைத் தமிழ்ப் பண்ணைக்கு காந்தி அடிகளின் விஜயம்

திரு. இராஜ அரியரத்தினம்
ஈழகேசரி, வீரகேசரி, ஈழநாடு - பத்திராதிபர்

காந்தி அடிகள் முதல் முறையாக இலங்கைக்கு வருகை புரிந்த காலம் 1927ஆம் ஆண்டு அது.

வடபகுதி மக்கள் அடிகளாரின் யாழ்ப்பாண விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த நாட்களில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பெயரும் அடிபட்டது.

காந்தியடிகள் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் தரிசனம் தருவார் என ஊரெல்லாம் ஒரே பேச்சு. மகாத்மா திரு வண்ணைநகருக்கு எழுந்தருளுகின்றார்கள் என்பதைக் கேட்டு நகரமே விழாக்கோலம் பூண்டது. வாழை நாட்டி, தோரணம் கட்டி அடிகளாரை வரவேற்கத் தயாராகிக் கொண்டனர் மக்கள்.



அந்தக் காலத்தில் பள்ளிக்கூட மாணவனாய் இருந்த நானும் வண்ணார்பண்ணையிலுள்ள வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்குள் அடி எடுத்து வைத்தேன். அன்று தொட்டு வித்தியாலயத்தின் நினைவு என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

வித்தியாலயப் பழைய மண்டபத்து மேடையில் சபர்மதி முனிவர் வீற்றிருந்த திருக்கோலக் காட்சி இன்னும் என் மனக்கண்முன் நிற்கின்றது.

பாரதநாடு சுதந்திரம் பெற்று எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. சுதந்திர மாளிகையைக் கட்டி எழுப்பிய அஹிம்சா மூர்த்தியும் தெய்வமாகிவிட்டார். காலவெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டேயிருக்கின்றது. நெஞ்சிஅலைகளும் நினைவுத் திவலைகளைக் கிளர்த்திக் கொண்டேயிருக்கின்றன.

காந்தி அடிகள் போன்ற தியாகமாமலைகளையும், ஆத்மீகத் தலைவர்களையும் அறிஞர் பெருமக்களையும் தன்னகத்தே ஈர்க்கும் ஒரு காந்த சக்தி வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு என்றுமே இருந்து வருகின்றது.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரினதும், அன்னை சாரதா தேவியினதும், சுவாமி விவேகானந்தரினதும், ஆத்மீக அடிப்படையில் கால்கொண்டுள்ள இக்கல்விப் பண்ணைக்கு காந்த சக்தி ஒன்றிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

மகாபுருஷர்களுடைய வாழ்க்கை இரு பகுதிகளைக் கொண்டதாக அமைந்து விடுகின்றது. ஒன்று, அவர்களுடைய தனி ஜீவிதம் மலர்ந்து விரிந்து பரிபூரண வளர்ச்சியை அடைவது. இன்னொன்று, சமூகத்தைத் திருத்தியமைக்கும் வகையில் அவர்களுடைய ஜீவிதம் உலக சிட்சைக்காகவும் உலகின் இதத்திற்காகவும் அமைவது.

வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு இத்தகைய மகாபுருஷர்களுடைய தொடர்பு கிடைத்துள்ளதென்றால், இதற்கு நாடு செய்த தவப் பயனே காரணமெனலாம். இக் கலைக்கோவில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருவதை இன்று பார்க்கின்றோம்.

நாகமுத்துவின் தியாகவாழ்வும், சர்வானந்தரின் தெய்வீகத் தொடர்பும் விபுலானந்த அடிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாரின் இதயபூர்வமான ஆசியும், வைத்தீஸ்வரப் பெருமானின் கருணாகடாட்சமும் தோன்றாத் துணையாக நின்று வித்தியாலயத்துக்கு இலங்கையிலும், இந்தியாவிலும் பெரும் புகழ் ஈட்டிக் கொடுத்து வருகின்றன.

ஆங்கில மோகம் யாழ்ப்பாணத்திலே தலைதூக்கி நின்ற காலத்திலும் வைத்தீஸ்வர வித்தியாலயம் தமிழ்க்கலைகளின் நிலைக்களாக நின்று யாழ்ப்பாணத்தைப் பாதுகாத்து வந்திருக்கின்றது.

பழமையைப் பேணிப் புதுமையை அளவாக வரவேற்கும் பண்பை வித்தியாலயத்திலேதான் இன்றும் பார்க்க முடிகின்றதெனக் கூறின் அது மிகையாகாது.

பிற மதங்களைக் கௌரவித்துச் சைவத்தின் உயர்வை நிலைநாட்டி வரும் சீரிய கொள்கையினின்றும் வித்தியாலயம் ஒரு போதும் பிறழ்ந்ததில்லை. இத்தகைய ஒரு சூழலிற் பயின்று வரும் வித்தியாலய மாணவர்களிடம் சேவைமனப்பான்மை சிறப்புற்று விளங்குமாயின் அது நூதனமாகாது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு யுகம் முடிவடைந்துவிட்டது. பள்ளிக்கூடங்களை அரசினர் கையேற்கத் தொடங்கிவிட்டனர். தனித்தியங்க முற்பட்டுள்ள பாடசாலைகளின் எதிர் காலத்தைப் பற்றி இப்போது ஒன்றும் கூறமுடியாது. ஆனால் அரசாங்கத்தின் முடிவையேற்று மக்கள் பணிக்கெனத் தன்னை மீண்டும் அர்ப்பணம் செய்துள்ள வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் எதிர்காலத்தைப் பற்றி எண்ணும் போது, சென்ற காலத்தின் திறனும் எதிர்காலத்தின் சிறப்பும் உற்சாகம் ஊட்டுகின்றன.

வசந்தமும் இளமையும், அன்பும் அருளும், கனவும் நனவும் இணைபிரியாதவை. இவை யாவும் ஒன்று சேர்ந்து வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு வாழ்வளிப்பதுடன் அதனை வளமாக்கியும் வருமென்பதற்கு ஐயமில்லை.

ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் சேவைகள் அளப்பில. பள்ளிக்கூடங்களையும் மாணவர் இல்லங்களையும் கலாச்சாரக் கழகங்களையும் இலவச வைத்தியசாலைகளையும், உலகனைத்தும் நிறுவி மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றது. அதன் வளர்ச்சியையும் உயர்வையும் எவராலும் தடைசெய்யமுடியாது. ஏனெனில் தெய்வ சக்தி அதனை முன்னின்று நடாத்தி வருகின்றது.

நன்றி – வைத்தீஸ்வரன் 1960



**பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் இப் பிறவியிலேயே இறைவனை அறிய முயற்சிக்காதவன் வீணாகப் பிறந்தவனே.**

— ஸ்ரீ ராம கிருஷ்ணர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We are proud of our Alma mater



*Mr. Mrs. S. Nadeswaran*

It is indeed a paramount importance and inevitable necessity that the old students Association of any educational institution has to play the vital role for the progress and upliftment of such institution for the past and present students to feel proud of their Alma Mater. It is on this basis, we the old students of our cherished college i.e. J/Vnnarponnai Vaitheeswara Vidyalayam situated in the heart of the Jaffna city, are profusely happy to hear that arrangements are afoot to celebrate the Golden Jubilee of our OSA shortly. We being the old students of our prestigious college wish to avail of this opportunity to express our sincere and heartiest wishes for the success of this celebration.

While completing 39 years after accomplishing our studentship at our Alma Mater and holding life membership in the OSA, we proudly recall our pleasent school-days at our college and thereafter while participating in the OSA activities .

We are also very proud to mention at this juncture that while our OSA, which was inaugurated 50 years back, experienced tentative retardation for a short period of time, it managed to raise its head and resume its activities owing to the untiring and relentless efforts of very few faithful and devoted students, including both of us, who dedicatedly came forward to devote their time, energy and even made financial contributions despite their severe financial stringency.

We are also much pleased to recall the meritorious functions of our OSA during the past. In fact while the other OSA of various colleges in the peninsula were engaged in implementation of several remarkable events, our OSA went a step further in a unique manner in entertaining our teachers who had rendered a service period of 25 years and over continuously in this college, in giving them the due respect and recognition in admirable manner on public platform with memorial gifts and awards.

Although we are presently forced to languish out of our own soil in displacement owing to the unstable situation prevailed in the North and the severe damages caused to our residences, we distinctly reserve in our minds the names of Mr.K.V.Jeyalinganathan, Mr&Mrs. Subramaniam and others who had worked with us shoulder to shoulder and still continuing their selfless and dedicated services for the progress of our OSA in such a way for this Association to go ahead with its activities successfully and satisfactorily.

We observe with much appreciation and admiration that our OSA has spread its wings in establishing branches in foreign countries such as Canada, U.K., etc. and made those branches to function efficiently and effectively.

We also wish to express our sincere thanks and gratitude to the committee of Management of the organisation of the Golden Jubilee celebration of our OSA for having come forward in offering us also the opportunity to make our written contribution to be embodied in the souvenir of the jubilee.

On conclusion we pray and beg our Lord Vaitheeswaran coupled with the goddess Valambikai to bestow their blessings to our OSA for its prosperity in such a way to continue its factions in an exemplary and meritorious manner as a model organisation thus bringing name and fame to our cherished Alma Mater.

***Thanking you.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "மும்மூர்த்திகள்"

**திரு. எஸ்.எம்.கோபாலரத்தினம்**
பழைய மாணவர் - மூத்த பத்திரிகையாளர்



யாழ்ப்பாணக் கல்வி வட்டாரத்தில் "மும்மூர்த்திகள்" என்று சொன்னால் அது வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் மூவரையே குறிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதிபர் ச.அம்பிகைபாகன், உப அதிபர் கா.வைரமுத்து தலைமை ஆசிரியர் து.சீனிவாசகம் ஆகிய மூவருமே அந்த மும்மூர்த்திகளாவர்.

மாணவர்களுக்குக் கல்வியூட்டுவதுதான் தங்கள் தொழில் என்று இம்மூவரும் கருதவில்லை. கல்விபோதிக்கும் ஆசிரியர் தொழிலை இவர்கள் ஒரு தொழிலாக மட்டும் கருதவில்லை அதை ஒரு சேவையாகவே போற்றினர். மாணவர்களுக்கு கல்வியூட்டுவதுடன் அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் போதித்து நல்வழி காட்டுவதும் தங்கள் கடமை என்று இவர்கள் கருதினர். இதனால் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு வந்த இதர ஆசிரியர்களும் இவர்களைப் பின்பற்றினர். இதுவே யாழ்ப்பாண ஆசிரியர்களின் பாரம்பரியமாகவும் பரம்பரையாகவும் அமைந்தது.

அதிபர் அம்பிகைபாகன் ஓர் எழுத்தாளருமாவார். ஈழத்துப் பேனா மன்னர்கள் வரிசையில் இவருக்கும் ஓர் இடமிருந்தது. இதனால் இவருக்கு இந்திய எழுத்தாளர்கள் அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பிருந்தது.

இந்தியாவிலிருந்து வரும் எழுத்தாளர்கள், அறிஞர்கள் அதிபர் அம்பிகைபாகன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடத் தவறுவதில்லை. அவர்களை அதிபர் வைத்தீஸ்வராவுக்கு அழைத்து ஆசிரியர்களை அறிமுகம் செய்து வைப்பதுடன் அவர்களை மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து வைப்பார். மாணவர்கள் மத்தியில் அவர்கள் உரைநிகழ்த்தவும் ஏற்பாடு செய்வார்.

தமிழ் நாடு ஆஸ்தான கவிஞராக இருந்தவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை, விடுதலை வீரர் ம. பொ. சிவஞானகிராமணியார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, பெரியசாமித்தூரன், சுத்தானந்தபாரதியார், ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற அறிஞர்கள் வைத்தீஸ்வராவுக்கு வந்துசென்ற அறிஞர்களில் சிலர்.

மும்மூர்த்திகள் மூவரும் தங்கள் வித்தியாலயத்தில் படிக்கும் மாணவர் மாணவியர் ஒவ்வொருவரையும் தங்கள் பிள்ளைகளாகவே கருதினர். ஒவ்வொரு பிள்ளையின் குடும்பத்தைப் பற்றியும் அவர்களின் குடும்பநிலைமைகளையும் கருத்தில் கொண்டு அந்தப் பிள்ளைகளின் கல்வியையும் நடவடிக்கைகளையும் கவனித்தனர். படித்து முடித்து வெளியேறிய பின்னரும் கூட அவர்களின் வாழ்க்கை பற்றி அக்கறை செலுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, சமூகம், அரசியல் சமயம் ஆகிய வைகளில் இந்த மும்மூர்த்திகளும் ஈடுபாடு கொண்டிருந்தனர். சுவாமி விபுலானந்தருடன் இவர்கள் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்தனர்.

## யாழ்.வாலிப காங்கிரஸின் தொடர்பு

இதே சமயம் இந்தியாவில் மகாத்மா காந்தி தலைமையில் இந்திய விடுதலைக்காக நடந்த சாத்விகப் போராட்டத்தினால் உந்தப் பெற்ற யாழ்ப்பாணக் கல்விமான்கள் சிலர் இலங்கையும் அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற நோக்கில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்ற ஒரு அமைப்பை உருவாக்கினர். இவர்கள் காந்திமகாத்மா, நேருஜி ஆகியோரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரவேற்பும் கொடுத்து இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நிதியும் திரட்டிக் கொடுத்தனர். ஹண்டி, பேரின்பநாயகம், சு.நடேசப்பிள்ளை, கலைப்புலவர் நவரத்தினம் ஏ.ஈ.தம்பர், அம்பிகைபாகன், எம்.கதிரவேலு, குமாரவேலு, கே.சி.தங்கராஜா, து.சீனிவாசகம் போன்ற வேறு பலரும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசுடனும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

## தனித்துவமான ஆசிரியர்கள்

மும்மூர்த்திகளின் இந்தக் கல்வி வட்டமும் பிள்ளைகளின் கல்வியிலும் பழக்கவழக்கம் ஒழுக்கம் ஆகியவைகளிலும் இவர்கள் கொண் டிருந்த நாட்டத்தினாலும் வைத்தீஸ்வர வித்தியாலயம் சமூகத்தில் நற்பெயர் பெற்றது. சிவன் கோவில் வடக்குவீதியில் ஓலையால் வேயப்பட்ட கட்டடத்தில் இந்தக் கல்விக்கூடம் அமைந்திருந்தபோதிலும் பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்கள் வசதி படைத்த பெரிய கல்லூரிகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறு களைவிட அதிகம் பெறுபேறுகளை பெற்றனர். வைத்தீஸ்வர வித்தியாலயம் அமைந்திருந்த இடத்தை அண்டி முஸ்லிம்கள் வாழும் குடியிருப்பும் அமைந்தது. மும்மூர்த்திகளின் கல்வி, ஒழுக்கம் அவர்களின் செயல்பாடுகளைக் கவனித்துவந்த முஸ்லிம் பெற்றோர்கள் தங்கள் வயதுவந்த பெண்பிள்ளைகளையும் கூட அச்ச மின்றி வைத்தீஸ்வராவில் கல்வி பயில்வதற்குச் சேர்த்தனர். மும்மூர்த்திகளும் சரி வைத்தீஸ்வ ராவில் கல்வி போதித்த வேறு ஆசிரியர்களும் சரி அவர்கள் எந்த அரசியல் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் கல்விக் கூடத்துக்குள் அதை எட்டிப்பார்க்க அனுமதித்ததில்லை.

வைத்தீஸ்வரா கல்வியில் மட்டுமல்ல கலைகளிலும் மேம்பட்டு விளங்கியது. வைத்தீஸ் வராவில் எந்த நாளும் ஏதாவது நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும். அதிபரும் தலைமை ஆசிரியரும் வைத்தீஸ்வராவின் இந்தத் துறை களில் அதிக நாட்டம் செலுத்தும் போது அதன் நிர்வாக வேலைகளை உபஅதிபர் வைரமுத்து கவனித்துக் கொண்டிருந்தார்.

## சுதந்திர தினத்தில்

1948ஆம் ஆண்டில் இலங்கையின் சதந்திர தினம் பெப்ரவரி நான்காந் திகதி யாழ்ப்பாணத் தில் கொண்டாடப்படவில்லை. மகாத்மா காந்தி மறைவுக்கு யாழ்ப்பாணம் துக்கம் அனுஷ்டித்தது. ஒரு மாதம் கழிந்தே சுதந்திரம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையின் தேசியக் கொடி சர்ச்சைக்குள்ளாயிருந்தது. இலங்கையின் சுதந்திரம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடிய போது யாழ். மாநகர சபைக் கட்டடத்தின் மீது இந்திய தேசியக் காங்கிரசின் மூவர்ணக் கொடியே ஏற்றப்பட்டது. இந்தக் கொடியை கலைப்புலவரிட மிருந்து நான்தான் எடுத்துக் கொண்டு போய் நகர ஆணையாளர் சண்முகம் அவர்களிடம் கொடுத்தேன். சீனிவாசகம் மாஸ்ரர் தான் துண்டு தந்து நான் கொடியை வாங்கிச் சென்றேன்.

## யோகாசனப் பயிற்சி

யாழ் முற்றவெளியில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் பலவும் சுதந்திரக் கொண்டாட் டத்தில் பங்குகொண்டு ஒவ்வொரு நிகழ்ச்சிகள் வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டன.

இப்படித் திடீர் என்று பங்குபற்றுவதென் றால் உடன் தயாரிப்பாக வைத்தீஸ்வராவில் ஒரு நிகழ்ச்சி தயாராக இருக்கும். அது யோகாசன நிகழ்ச்சி!

சீனிவாசக மாஸ்ரர் யோகாசனம் செய்வார். விரும்பும் மாணவர்களுக்கும் பழக்கிக் கொடுப்பார். பெருமாள் கோவிலடியுள்ள மாஸ்ரர் வீட்டுக்கு அயலிலுள்ள வைத்தீஸ்வராவில் படிக்கும் பிள்ளைகள் சிலர் யோகாசனம் பழகினர். நானும் பழகினேன். எனது மெலிந்த தேகம் எல்லா விதமான ஆசனங்களுக்கும் சுலபமாக வளைந்து கொடுக்கும். இதனால் பல ஆசனங்களை நான் சுலபமாகக் கற்றுக் கொண்டேன். வைத்தீஸ் வராவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பலவற்றில எனது யோகாசன நிகழ்ச்சியும் இடம்பெற்றுப் பாராட்டுப் பெற்றதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றவெளியில் நடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்திலும் வைத்தீஸ்வராவின் நிகழ்ச்சியாகப் பத்துப்பேர் பங்குபற்றிய யோகாசனம் இடம் பெற்றுப் பாராட்டுப் பெற்றது.

சீனிவாசகம் மாஸ்ரர் ஆசிரிய சேவையுடன் அயலிலுள்ள மாணவர்களுக்கு யோகசனத்திலும் பயிற்சி அளித்தார். அவர் தோட்டச் செய்கையிலும் நாட்டம் கொண்டவர். மாங்கன்றுகளில் நல்லரக மாங்கன்றுகளை ஒட்டுவதிலும் சுண்டங்காய் மரத்தில் கத்தரிக்கன்றை ஒட்டுவதிலும் கூட தாவரவியல் பாட வகுப்புக்களில் மாணவர்களுக்கும் பயிற்சியளித்தார்.

**ஆசிரியர் சங்கம் உருவாக...**

ஆசிரியர்களுக்கென இலங்கை ஆசிரியர் சங்கம் உருவாகியிருந்ததைத் தொடர்ந்து வடமாகணத்திலும் ஆசிரியர் சங்கம் ஒன்று உருவாவதற்கு சீனிவாசகம், கா. வைரமுத்து ஆகியோர் ஈடுபட்டு வெற்றி கண்டனர். எஸ்.எஸ்.சி. தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தி பெற்றால் வேலைவாய்ப்பும் பெறமுடியும். இந்த வகுப்பு வரை படித்து முன்னேற முடியாத பிள்ளைகள் எட்டாம் வகுப்புச் சித்திபெற்றதும் வேலைவாய்ப்புப் பெறுவதற்குத் தகுதியாக வடமாகாண ஆசிரியர் சங்கம் ஜே.எஸ்.சி. பரீட்சைகளை வடமாகணத்தில் நடத்தி இதில் சித்தி பெறுவோருக்கு தராதரப்பத்திரங்களை வழங்கியது. இத்தராதரப் பத்திரங்களுக்கு மதிப்பிருந்தது. இதனுடன் பலர் வேலை வாய்ப்பைப் பெற முடிந்தது.

வடமாகாண ஆசிரியர்களுக்கென சகாய நிதிச் சங்கமொன்றையும் மற்றும் பலருடன் சேர்ந்து வைரமுத்து சீனிவாசகம் ஆகியோர் நிறுவினர். இன்னும் வடமாகாண ஆசிரியர்கள் இந்த வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தினால் பயன்பெற்று வருகின்றனர்.

**கூட்டுறவு**

இவற்றுடன் நின்றுவிடாது கூட்டுறவு வாழ்க்கையையும் முன்னேற்றுவதில் சீனிவாசகம் அவர்கள் உழைத்தார். யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் யாழ்ப்பாணம், நெசவாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், பெருமாள் கோவிலடி கூட்டுறவுச் சங்கம், பெருமாள் கோவிலடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை சீனிவாசகம் மாஸ்ரர் அவர்களுடைய சேவைகளை இன்றும் நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்வியிலும் கலைகளிலும் கலாச்சாரத்திலும் முன்னணியில் திகழ்ந்து யாழ்ப்பாணத்தின் கலங்கரை விளக்கமாக ஒளிவீசி வழிகாட்டி நின்றதற்கு அதன் "மும்மூர்த்தி"களே காரணமென்பதை எவரும் மறக்கமுடியாது மறைக்கவும் முடியாது.

## எங்கள் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. த. நாகமுத்து (ஸ்தாபகர்) | 1913 – 1918 |
| 2. | திரு. S. சுப்புராவ் | 1918 – |
| 3. | சுவாமி விபுலாநந்த அடிகள் | - |
| 4. | திரு. C. ரகுபதி | - 1935 |
| 5. | திரு. ச. அம்பிகைபாகன் | 1935 – 1968 |
| 6. | திரு. S. சிவபாதசுந்தரம் | 1968 – 1972 |
| 7. | திரு. A. நடராஜா | 01.01.1973 – 09.05.1980 |
| 8. | திரு. S.P. பாலசுப்பிரமணியம் | 09.05.1980 – 16.07.1982 |
| 9. | திரு. C. குணபாலசிங்கம் | 18.10.1982 – 3.10.1984 |
| 10. | திரு. சி. சிவசரவணபவன் | 04.10.1984 – 12.04.1993 |
| 11. | திரு. து. சந்தோசம் | 12.04.1993 – 26.03.1998 |
| 12. | திரு. நா. வன்னியசிங்கம் | 27.03.1998 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மும்மூர்த்திகளில் ஒருவர்"

சி. சிவசரவணபவன் M.A.
முன்னாள் அதிபர்



தன்னுடைய மாணவர்களைத் தனது பிள்ளைகளாகவே நடத்தும் பாசம், வைத்தீஸ்வராவின் வளர்ச்சியே தன்னுடைய உயர்ச்சி எனக் கருதும் காதல், அறிந்தவர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்யும் கருணை, வண்ணை வைத்தீஸ்வரரும் வண்ணை வெங்கடேசப்பெருமாளும் தமிழ் மக்களுக்கு வழிகாட்டி வாழ்வளிப்பாரென்ற நம்பிக்கையில் மலர்ந்த பக்தி, இக்கூட்டுக் கலவையின் கோபுரமாகத் திகழ்ந்தவர் அமரர் து.சீனிவாசகம் அவர்கள்.

வைத்தீஸ்வராக் கல்லூரியை நிறுவி ஐந்து ஆண்டுகள் அதனை நிர்வகித்தவர் அமரர் த.நாகமுத்து 1962ம் ஆண்டு வரை அதன் நிர்வாகிகளாக விளங்கியவர்கள் இராமகிருஷ்ண மடத்தினர். ஆனால் அதன் நாளாந்த உள்ளக நிர்வாகத்தை, கல்விச் செயற்பாடுகளை, கலை கலாச்சார வெளிப்பாடுகளை அணுஅணுவாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்திக் கல்லூரியைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றவர்களுள் திரு.சீனிவாசகமும் ஒருவர். அவருடைய ஆர்வமும் அளவிலா ஆற்றலும் அதிபர் திரு.ச.அம்பிகைபாகன், துணை அதிபர் திரு.கா.வைரமுத்து ஆகியோருடன் இணைந்து உழைத்த பாங்கும் அவரை வைத்தீஸ்வராவின் மும்மூர்த்திகளுள் ஒருவர் ஆக்கின.

வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள்ளே தன்னை முடக்கிக் கொள்ளாமல் வெளியே சென்று சமூகப் பணியிலும் ஈடுபடுபவனே இலட்சிய ஆசிரியனாகத் திகழ முடியும் என்பர். இதற்கிணங்க கூட்டுறவு இயக்கம், வடமாகாண ஆசிரியர் சங்கம் யாழ். ரசிகரஞ்சனசபா, வரதராஜப் பெருமாள் ஆலய நிர்வாகம் ஆகிய நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் திரு.து.சீனிவாசகம் அவர்கள். பாடசாலை வேலைகளைப் பழுதாக்காமல் கல்லூரியின் கடமைகளைப் புறக்கணிக்காமல் தன் ஓய்வு நேரத்திலேயே இப்பொதுப்பணிகளில் ஈடுபட்டார் என்பது இவரின் நேர்மைக்கும் கடமை புணர்ச்சிக்கும் சான்று.

தன் கருத்தையோ விருப்பத்தையோ கல்லூரி நிர்வாகிகளிடம் திணிக்காமல், தன் ஓய்வுக்காலத்திலும் கல்லூரியுடன் நெருங்கிய உறவைப் பேணிவந்த பண்பாளர் அவர்.

(ஈழநாடு பத்திரிகையில் வெளியான யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் அமரர் து.சீனிவாசகம் அவர்களின் 21ம் நாள் (25.12.92) நினைவு மலரில் இருந்து எடுக்கப்பட்ட கட்டுரை இது. இம்மலர் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தினரால் வெளியிடப்பட்டது)



**பிறருக்கு உதவின் .........**

பிறருக்காகச் செய்கின்ற சிறிய செயல்கூட நம்முள் ஆற்றலை வளர்க்கின்றது. நம்மைச் சிங்கத்தை ஒத்த வீரர்களாக்குகின்றது.

— சுவாமி விவேகானந்தர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரு விழாக்கள் கண்ட வைத்தீஸ்வரா

திரு. க. கணேசலிங்கம்
(பழைய மாணவன்)
(ஓய்வுபெற்ற அதிபர், யா/நவாலி அ.மி.த.க.பாடசாலை)

சைவமும் தமிழும் சேர்ந்து மணம் கமழும் வண்ணத் திருக்கோயிலாக வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் திகழவேண்டும், வளரவேண்டும் என்பதே இதனை ஸ்தாபித்த பெருமக்களின் பேரவா.

அந்த அவாவை, நீண்ட பெரும் கனவை நிறைவேற்றுவதில் இதில் ஈடுபட்டு வந்துள்ள அனைவரும் தம்மாலானவற்றைச் செய்தே வந்துள்ளார்கள்.

அழியாத திருக்கோயிலாக யாழ்.நகரின் மத்தியில் இன்றும் அழகுக் கலை மிளிர செழுமையுடன் தலை நிமிர்ந்தே நிற்கிறது வைத்தீஸ்வரா. காலத்தின் கொடுமைகளையும் தாங்கி அது கம்பீரமாகவே நிமிர்ந்து நிற்கிறது.

இன்றுபோல் நறுமணம் பரப்பிய அந்த நல்ல நாள்கள் நினைவில் அலை அலையாக மிதந்து மிதந்து வருகின்றன.

பச்சை வாழை, மாவிலை தோரணங்கள், மல்லிகை, முல்லைப் பூப்பந்தல் கல்யாணத் திருக்கோலத்தில் மண்டபம் கலகலவென ஜொலிக்கும் ஆனந்தத் திருக்கூட்டம் அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருக்கும். நறுமணம் கமழும் சந்தனமும் பன்னீரும் மலர்களின் சுகந்த வாசனையும் அப்பப்பா இன்பக்கனவாகவே இருக்கும். இந்த மனோரம்யமான காட்சிகளைப் பார்த்துப் பார்த்து பரவசமடைந்து மனம் நிலைகொள்ளாது கூத்தாடும்.

அதிபர் திரு.ச.அம்பிகைபாகன் யாரோ ஒரு பெரியவரை அழைத்துக்கொண்டு மேடைக்கு வருவார். உப அதிபர் திரு. கா. வைரமுத்து வழக்கமான புன்முறுவல் பூத்து எதுவித பதட்டமுமில்லாமல் பின்னால் வந்து கொண்டிருப்பார். மும்மணிகளில் ஒருவரான திரு.து. சீனிவாசகம் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருப்பார்.

மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமானதும் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது அப்போதிருந்த ஆசிரியர்கள் குழாத்துக்கு அவ்வளவு இலகுவான காரியமாக இருந்திருக்கவில்லை.

மண்டபத்தின் உள்ளும் புறமும் வெள்ளம் போல் மக்கள் கூட்டம், வெளியில் வாகனங்களின் விதம் விதமான சப்தங்கள் வேறு. திரு. அம்பிகைபாகன் நெஞ்சை ஒருமுறை தடவிக்கொண்டு தலைமை உரை நிகழ்த்த ஆரம்பித்த பின்னர் தான் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும். கண்ணால் பார்த்தே நிலைமைகளைச் சீர் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர் திரு.வைரமுத்தர்.

தமது கல்லூரியில் நடைபெறும் விழா அல்லவா? மாணவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. அந்த ஆனந்தக் காட்சி மனக்கண்முன்னில் திரையாக விரிகிறது.

இயல், இசை நாடகம் இப்படியான சிறப் புக்கலைகளை சீராக சிறப்பாக வளர்த்து வந்த பெருமை வைத்தீஸ்வராவுக்குண்டு.

இசைக்கலையையும், சைவத்தையும் தமிழையும் வளர்த்த விபுலானந்த அடிகளார் ஒரு நாள் முழுவதும் இவற்றைப் பற்றி மண்டபத்தில் உரை நிகழ்த்தியது இப்போதும் ஞாபகத்துக்கு வருகிறது.

இசைமேதை டாக்டர் எம்.எல்.வசந்தகுமாரி அவர்களின் இசைக்கச்சேரி வைத்தீஸ்வரா மண்டபத்தில் நடைபெற்றது. இரசிகப் பெரு மக்கள் காது குளிரப் பரவசமடைந்தார்கள். அவரது கணவர் விகடன் கிருஷ்ணமூர்த்தியும் அப்போது வந்திருந்தார்.

சென்னை மாநிலக்கல்வி அமைச்சராக இருந்த திரு.அவினாசலிங்கம் செட்டியார் அவர் களும் இந்த மண்டபத்துக்கு வந்து சென்ற வர்களுள் ஒருவர்.

கலைமகள் ஆசிரியர் திரு.கி.வா. ஜகந்நாதன், கல்கி ஆசிரியர் திரு.ரா.கிருஷ்ண மூர்த்தி ஆகிய தமிழ் இலக்கிய கர்த்தாக்களும் இன்னும் பல பிரபல்யமான பிரமுகர்களும் அப்போது இந்த மண்டபத்துக்கு வந்து சென்ற பலருள் அடங்குவர்.

வெள்ளிக்கிழமை வைத்தீஸ்வராவில் என்ன நிகழ்ச்சி என ஊரே காத்து நிற்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஏதோ ஒரு நிகழ்ச்சி இந்த மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும். தமிழ் சைவசமய மறுமலர்ச்சிப்பணியில் வைத்தீஸ் வராவுக்கு ஒரு தனி இடமுண்டு என்பதனை மறுக்கவோ, மறைத்துவிடவோ முடியாது.

இந்தத் தனியிடத்தை வைத்தீஸ்வரா என்றுமே காப்பாற்றவேண்டும் என்பதே எல்லோரதும் பேரவா, விருப்பம் எல்லாம். இந்த நீண்ட நம்பிக்கை வீண்போகாது என்றே நம்புவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். முஸ்லிம்களின் வரப்பிரசாதம் வைத்தீஸ்வரா

திரு. எம். எ. ஜிப்றி B.A.
முன்னாள் ஆங்கில ஆசிரியர்

நம் நாட்டுச் சரித்திரத்தில் குறிப்பாகக் கல்வித் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள விரக்திக்கும் சந்தேக உணர்ச்சிகளுக்குமிடையே கடந்த கால நிகழ்ச்சிகளை அசைபோடும் பயணம், உணர்ச்சிளைத் தூண்டி ஒருவரின் ஆரம்பப் பாடசாலையும் அங்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவைகளையும் நினைவுக்குக் கொண்டு வருவது சகஜம். இது அங்கு கற்ற மாணவர்களுக்கு மாத்திரமன்றி அங்கு சேவையாற்றி நற்பணிபுரிந்த ஆசிரியர் களுக்கும் மனதில் ஏற்படும் இன்ப நிகழ்ச்சி யாகும். இக்கட்டுரையின் ஆசிரியர் இவைகளில் இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவராவர்.

மேற்கத்திய உலோகயுதக் கல்வியின் பயன்களை அனுபவித்ததில் யாழ்ப்பாணக் குடாநாடு முன்னணியில் நிற்பதற்குக் காரணம் அங்கு கண்டி இராஜ்யத்தை 1815ம் ஆண்டு கைப்பற்றுவதற்கு முன்னதாகவே வடபகுதியில் கிறிஸ்தவக் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந் தமையாகும். வைத்தீஸ்வர வித்தியாலயம் 'மிஷன்' பாடசாலைகளைப் போன்று தொன்மை வாய்ந் துள்ளது அல்லாவிடினும், கல்வி மூலம் நாகரிகப் பண்புகளை வளர்ப்பதில் அதிகம் பின்தங்கியிருக்க வில்லை.

## சாதி, சமய பேதமற்ற சன்மார்க்க நெறி

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டுப் பகுதியில் அமரர் நாகமுத்து அவர் களால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம் ஓலைக ளால் வேயப்பட்ட கொட்டில்களாகத்தான் அன்று காட்சியளித்தன. வண்ணார்பண்ணையில் சிவன் கோயிலுக்கருகாமையில், சனசந்தடியும், நெருக்க முள்ள கடைத்தெருவுக்கும் முஸ்லிம்கள் வாழும் சோனக தெருவுக்கும் இடையே அமைந்துள்ளது. இக்கலைக்கூடம். தனியார் கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் ராமகிருஷ்ண மிஷனிடம் கையளிக்கப்பட்டு அரசாங்க உதவி பெறும் பாடசாலையாகிற்று. அக்காலக்கட்டத்திலி ருந்தே ராமகிருஷ்ண பரமஹம்சரின் கோட்பாடு களுக்கிணங்க சாதி, சமய பேதங்களை மனதிற் கொள்ளாது கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகளைப் போன்று மதமாற்றம் செய்யும் முயற்சிகளை அறவே ஒதுக்கிய காரணங்களினாலும் அண்மை யில் அமைந்திருந்த காரணத்திலும் முஸ்லீம்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியைத் தொடர வைத்தீஸ்வர வித்தியாலயத்தை நாடினர். நன்மை யும் பெற்றனர்.

## முஸ்லிம்களின் கல்வித்தரம்

ஆரம்பப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாலயம் படிப்படியாகப் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இலவசக் கல்வித்திட்டம், சுய பாஷைக் கல்வி, தனியார் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்றல் போன்ற திட்டங்கள் வைத்தீஸ்வராவிலும் மாற்றங்களோடு தரத்திலும் கல்வி வளர்ச்சியிலும் மெச்சத்தக்க திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. கனிஷ்ட தராதர பரீட்சைக்கு (J.S.C.) மாத்திரம் மாணவர் தோன்றிய காலம் போய், முதன் முதலாக 1942ம் ஆண்டு ஐந்து மாணவர்கள் சிரேஷ்ட தராதரப் பரீட்சைக்கு (S.S.C.) தோற்றினர். இவ்வைவரில் இருவர் முஸ்லிம்கள். இவர்களில் ஒருவர் டாக்டராகவும், மற்றவர் பட்டதாரியாகவும் மேற்கல்வி பெற்று உயர்ந்தமை குறிக்கத்தக்கது. ஆகவே இதர கல்லூரிகளை நாடாது நேரடியாகவே பல்கலைக்கழகம், மருத்து வக் கல்லூரி, சட்டக்கல்லூரிகளை போன்ற உயர்கல்வி ஸ்தானங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்ற மாணவர்கள் இன்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதோடு தமக்கு ஆரம்ப வித்திட்ட வித்தியாலயத்தை நன்றிக்கடனுடனே பெருமையுடன் கருதுகின்றனர். இதற்கு அங்கு கற்ற யாழ்.முஸ்லிம் மாணவர்கள் தென்னகத்தேயிருந்து யாழ்ப்பாணம் வந்து குறிப்பாக நகை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பிரமுகர்களின் பிள்ளைகள் விதிவிலக்கல்ல. யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஆசிரியர்களைத் தவிர்த்து மற்றெல்லா ஆண் பெண் ஆசிரியர்களும், அரசாங்க ஊழியர் களும், கணக்காளர், பொறியிலாளர், மருத்துவர், வியாபாரம் போன்ற சுய தொழிலில் ஈடுபட்டிருப் பவர்களும் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்களே.

## காரண கர்த்தாக்கள்

கல்வித்துறையில் வளர்ச்சி பெற்று ஒரு சிறந்த கல்லூரியாக திகழ்வதற்குக் கார கர்த்தாக்களாக இருந்தவர்கள் பலர். அவர்களில் குறிப்பாக மூவர் எமது ஞாபகக்கண் முன் என்றும் தென்படுகின்றனர். அமரர்களாகிய அம்பிகைபாகன், வைரமுத்துவும் அவர்களுக்கு உதவியும் ஒத்தா சையும் புரிந்து பல அசௌகரியங்களுக்கூடே தன்னலம் கருதாது தியாக சிந்தையோடு உழைத்த சீனிவாசகமும் வைத்தீஸ்வராவின் சரித்திரத்தில் முதலிடம் பெறுகின்றனர். அமரர் களாகிய வைத்திலிங்கம், காாத்திகேசு, மற்றும் இதர ஆசிரியர்களும் ஆற்றிய சேவைகள் பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டியவைகளே.

1950ம் ஆண்டில் பயிற்றப்பட்ட தராதரம் பெற்ற முஸ்லிம் ஒருவரை ஆசிரியராக நியமித்ததோடு மார்க்க பாடங்களைக் கற்பிக்க ஒரு மௌலவி ஆசிரியரையும் நியமித்தமை போற்றத்தக்கது, அன்றியும் முஸ்லிம் மாணவர் கள் தனியாகத் தங்கள் மத அனுஷ்டானத்துடன் காலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தவும் மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தொழுகைக்காக பள்ளிவாசல் செல்ல அனுமதித் தலும் முஸ்லிம்களின் கவனத்தையும் வித்தியா லயத்தின் மேல் காட்டும் அபிமானத்தையும் ஈர்ந்தது ஆச்சரியமன்று.

## பாரிய கலைக் கூடம்

ஆசிரியர், மாணவர் தொகை, கட்டடம், உபகரணங்களைப் பொறுத்தவரையில் வைத்தீஸ் வரா ஒரு சிறிய ஸ்தாபனமே. ஆனால் பண்பாட்டடிப்படையில் மதிப்பிடும்போது சந்தேக மின்றி வைத்தீஸ்வரா ஒரு பாரிய கலைக்கூடமே. இவ்வுண்மை பல துறைகளில் பணிபுரியும் பழைய மாணவரின் பட்டியலை நோக்கில் புலனாகும். இது யாழ் முஸ்லிம்களைப் பொறுத்த வரையிலும் உண்மையே. "ஒரு மரத்தை அதன் கனிகளைக் கொண்டு மதிப்பிடுக" என்ற இயேசு நாதரின் கூற்றுக்கிணங்க வைத்தீஸ்வரா வளர்ச்சி பெற்றுள்ளது.

காலஞ்சென்ற அல்ஹாஜ் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸில் (C.C.S.) தனது ஆரம்பக் கல்வியையும் எம்.எம்.மக்பூல் (S.L.A.S.) தனது உயர்நிலை கல்வி வரையும் இவ்வித்தியால யத்திலே கற்றனர். இங்கு கற்றுப் பல துறை களில் முன்னேறிய முஸ்லிம்கள் பலர் உள்ளனர். அவர்கள் பட்டியல் நீண்டு வருமாகை யால் கூறாது விடுகிறேன். முஸ்லிம்கள் பொதுவாக கல்வியில் பின்தங்கியவர்கள் என்று கூறுவதுண்டு. ஆனால் இலங்கை முஸ்லிம்களின் சரித்திரத்தைப் புரட்டினால் எத்தனையோ துறைகளில் யாழ் முஸ்லிம்கள் முன்னோடிகளாக விளங்கினர் என்பது புலனாகும். இலங்கை முஸ்லிம்களுள் முதன் முதலாகச் சித்தியடைந்த பட்டதாரியும் சட்டத்தரணியும், ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியரும், இலங்கை நிர்வாகச் சேவையில (C.C.S.) சேர்ந்தவரும், முதல் பெண் டாக்டரும் (M.B.B.S.) முஸ்லிம் பெண் பட்டதாரி யும், லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் தேறிய முஸ்லிம் பெண்ணும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்ளென்பது பெருமைக்குரிய விடயமே.

யாழ் முஸ்லிம்கள் மனதில் வைத்தீஸ்வரா ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளதென்பதை மறுக்கவோ மறக்கவோ முடியாது. நம் நாடாகிய சின்னத்தீவில் ஸ்தாபித்த சிறு பாடசாலை இப்பொழுது ஒரு பெரும் இடத்தைப் பிடித்து விட்டது. இக்கல்லூரி மூலம் பயன் பெற்ற முஸ்லிம்கள் எல்லோரும் அதன் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் நல்லெண்ணமுடையவர்களா கவே இருக்கின்றனர். இக்கல்லூரி மேலும் வளர்ந்து எதிர்காலத்தில் வெற்றி நடைபோட இறைவனை வேண்டுவோமாக.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பள்ளி அந்தநாள் ஞாபகம்....

திருமதி செ.பொன்னுச்சாமி B.A.Dip. in. Ed.
பழைய மாணவி, ஓய்வுபெற்ற உப அதிபர்



இன்று கல்வியின் தரம் பல்வேறு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு வயது அளவுக்கு ஏற்ப வும் அறிவு வளர்ச் சிக்கு ஏற்பவும் கற்பிக் கப்பட்டு வருகின்றது. ஒரு குழந்தையின் ஆரம்பக் கல்வி இப்பொழுது முன்பள்ளியாகும். புதிய கல்விய மைப்புக்கு முன்னர் ஆரம்பக்கல்வி ஐந்து வயது முடிய ஆண்டு ஒன்று தொடக்கமாகும். முன்பள்ளி ஆரம்பக்கல்வி கனிஷ்ட இடைநிலை, இடைநிலை உயர்நிலை என்று இன்று வகைப்படுத்தி கற்பிக்கப்படுகின்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து, வெற்றிநடை போட்டு, கல்லூரியின் வளர்ச்சிப் படிகளின் வலக்கையாக நின்று, பல உதவிகளைக் கல்லூரிக்குச் செய்து வருகின்றது. இன்று தன் வாழ்வில் பொன்விழா கண்டுள்ளது. இந்நிலையில் கல்லூரியின் பழைய மாணவி என்ற பெருமிதத்துடன் எனது கல்லூரி வளர்ச்சி யில் நான் அறிந்த, என் கண்ணால் கண்டு களித்த, கல்லூரியின் ஆரம்பக்கல்வியை நினைவு கூருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரி என்று கூறுவதா? வித்தியாலயம் என்று கூறுவதா என்றால் ஆரம்பக்கல்வி என்றால் அது வித்தியாலயம் தான். வைத்தீஸ் வரா வித்தியாலயம் தன் வளர்ச்சிப்படியில் 1994 இல் தான் கல்லூரியானது. அதற்குமுன் யாழ்ப்பாணச் சூழலில் அதுவும் வண்ணார் பண்ணை வாழ் மக்களிடையே வித்தியாலயம் என்றால் அது வைத்தீஸ்வர வித்தியாலயம் தான். வித்தியாலயம் ஆரம்பித்த காலம் சாதி, மத, பேதமற்ற சமரச மார்க்கநெறி நின்று ஆண், பெண் இருபாலார்க்கும் இனம், மதம், மொழி வேறுபாடு இன்றி கல்வித் தானம் வழங்க விளைந்தது.

## ஆரம்பக் கல்வி இல்லாமை

நாகமுத்து பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் ஆரம்பக்கல்வியுடன்தான் ஆரம்பித் தது. இன்று ஆரம்பக்கல்வி கல்லூரியில் இல்லா மையும் அதன் கல்வி வளர்ச்சிக்கு தடைக் கற்களில் ஒன்றாக விளங்குவதை, கல்லூரி அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் யாவராலும் அறியக் கூடியதாக உள்ளது. ஒரு கட்டடம் பலமானதாகவும், நீண்ட காலத்துக்கும் இருக்கவேண்டுமானால் அத்திவாரம் எப்படிப் பலமாக அமையவேண்டுமோ, அதே போன்றது தான் ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆரம்பக் கல்வியும் எனின் மிகையாகாது. இன்று இலங்கை யில் வடபகுதியில் மட்டுமன்றி கல்லூரியின் பழைய மாணவர் உலகு எங்கும் புகழ் பூத்து விளங்குபவர்களில் பெரும்பான்மையினர் ஆரம்பக் கல்வியை இங்கே கற்று படிப்படியாக இடை நிலை, உயர்நிலை பெற்றவர்கள்தான். கல்லூரி யின் வளர்ச்சிக்குப் பாடுபடும் பெரும்பான்மை பழைய மாணவர் ஆரம்பக்கல்வியை இங்கு கற்று தம் கல்வியை முடித்து வெளியேறிவர்கள் தான். பசுமையான அந்த வாசனையுள்ள தந்திரமான சிட்டுக்குருவி வாழ்க்கைதான் பசுமரத்தாணி போல் நினைவு கூரத்தக்கவை.

1970 களில் ஆரம்பக்கல்வியை கல்லூரி யில் இருந்து, மாணவர் தொகை கூடியமையால் இட வசதி போதாமையால் எடுத்தார்கள். அன்று தொட்டு கல்வி வளர்ச்சியின் உச்சக்கட்டம் சற்று வீழ்ச்சியுற்றது எனலாம்.

1913 இல் ஆரம் பித்த வித்தியாலயம் 1918ல் இராமகிருஷ்ணமடத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர் வளர்ச்சியில் ஆரம்பக்கல்வி விவேகானந்த வித்தியால யம் என்ற பெயரில் நடை பெற்றது. 1940களில்



திரு. வே. சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கல்வியைத் தலைமை அதிபர் திரு.சுப்பிரமணியம் நிர்வகித்தார். ஆண் ஆசிரியர்கள் கூடுதலாகவும் இருந்தனர். விஜயதசிமியில் ஏடு தொடக்கப்படும் அரிச்சுவடி வகுப்புக்கு உரியவர் அம்மா ரீச்சர் என்று அழைக்கப்படும் திருமதி. பாக்கியம். உண்மை யிலேயே அவர் தாயின் வடிவம். அழகாகச் சேலை உடுத்து உடைச்சுற்றி பின்புறமாக சேலையின் முந்தானையைச் சொருகி இருப்பார். தலைமை ஆசிரியர் திரு.சுப்பிரமணியம். அவருக்கு உதவியாக மாணவர் வரவுப் புத்தகத்துக்குப் பொறுப்பாக கோபாலபிள்ளை ஆசிரியர், சைவசமயம், கணிதம் கற்பிப்பதற்கு வயது கூடிய திரு.சுப்பிரமணியம் ஆசிரியர். இவர்களுடன் இன்னும் சில ஆண் ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வியை வழங்கினர். கல்லூரியின் சுற்றாடல் மாணவர்கள் வித்தியாலயத்தின் கிழக் குப்பக்கமாக இருக்கும் ஒழுங்கைப் பாதை வழியாக ஆண், பெண் சிறார்கள் கூட்டம் கூட்டமாக கைகோத்து சிட்டுக்குருவிகளாகக் கல்வி கற்பதற்கு வருவர்.

இதேவேளை இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுமுடிந்த காலம் பசிவந்தால் பத்தும் பறந்துவிடும்" என்பர். மதிய உணவு வேளை தலைமை ஆசிரியரின் பின்புறமாக இருக்கும் பெரிய கள்ளிப் பெட்டியிலிருந்து வரும் பாண் வாசனை எப்பொழுது இடைவேளை மணி அடிக்கும் என்று எதிர்பார்த்து இருக்கும் சிறுவர், சிறுமியர் தலைமை ஆசிரியர் வீட்டில் இருந்து தூக்குச் சட்டியில் செக்கச் சிவந்த மிளகாய் சம்பலும், பூவரசம் இலையும், மாணவர் தலைவர் கையில் பாண் பெட்டியும் இன்னும் என் மனக் காட்சியில் இருந்து மறையவில்லை. சிலகாலம் பெரிய சட்டியில் பாலும் காய்ச்சி சிறுவர்களுக்கு வழங்குவர். இவ்வாறு ஆரம்பக்கல்வி வயிற்றுப் பசியைப் போக்கி அறிவுப் பசியை வளர்த்தது.

### ஆசான்கள்

கல்லூரியின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டு வளர்த்த ஆசான்கள் பலர். இவர்களில் காலத்தால் அழியாத ஆசான்களாக விளங்கக் கூடியவர் சிலரை நான் அறிந்தவகையில் இங்கு குறிப்பிடுகின்றேன். ஆரம்பக் கல்விக் கூடத் தலைமை ஆசிரியர் திருவாளர் சுப்பிரமணியம். இவர் வண்ணார்பண்ணைச் சூழலிலேயே வாழ்ந்தார். தலைமை ஆசிரியராக மட்டுமன்றிக் கணிதபாட ஆசிரியராகவும் இருந்து ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். இவரின் இளைய புத்திரிதான் இன்று வைத்தீஸ்வராக் கல்லூரியின் கணித ஆசிரியையாகவும், இந்து மாமன்றப்பொறுப்பாளராகவும் இருந்து கல்லூரி யின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் செல்வி. கமலநாயகி சுப்பிரமணியம். இவர் குடும்ப சந்ததி யாவரும் இக்கல்லூரியிலேயே கல்வி கற்று மேலோங்கி நின்றனர் எனின் மிகையாகாது.


திரு. கோபாலப்பிள்ளை

தலைமை ஆசிரியரின் வலதுகையாக இருந்து தமிழ்மொழியை நன்கு கற்பித்தவர் மட்டு விலைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கோபாலபிள்ளை ஆசிரியர் அவர்கள். தேசிய உடை தலையில் குடுமி மென்மையான சுபாவம், பொறுப்புணர்வு, மாணவர் மேல் பற்றுணர்வுடன் கூடிய கற்பித்தல் செயற்பாடு கொண்டவர் இவர். இவரின் பிள்ளைகளும் இங்கேயே கல்வி கற்று வாழ்வில் முன்னேறினர். வீரகேசரி உப ஆசிரியராக விளங்கும் கேதாரநாதன் இவரின் இரண்டாவது புத்திரர் ஆவர்.

அடுத்து இன்னுமொரு ஆசான் திரு. சுப்பிரமணியம் அவர்கள். இவர் கல்லூரியின் முன்னாள் ஆசானும் பழைய மாணவருமான திரு.செந்தில்நாதன் அவர்களின் உறவினர். சற்று வயோதிபமான, மெலிந்த உடற்கட்டு, தேசிய உடை, மென்மையானதும், இனிமையானதுமான சுபாவம், மாணவரைக் கண்டிக்காது இனிமை யான குரலில் தேவாரங்கள் பாடிக் கதை கூறிக் கற்பிப்பார். இவரின் பிள்ளைகளும் ஆரம்பக் கல்வி தொடக்கம் இக்கல்லூரியிலேயே கற்றுத் தேறியவராவர்.

இன்னுமொருவர் அவர் பெயரும் கோபால பிள்ளை. இவர் சற்று குள்ளமானவர். எனவே கட்டைக் கோபாலபிள்ளை மாஸ்டர் என அழைப்பர். இவர் பள்ளியின் பழைய மாணவர். அன்பும் ஆதரவும் பிள்ளைகள் நலனே தன் நலன் எனக் கடமையாற்றும் பண்பினர். மற்றும் ஆரம்பக்கல்விக்குரிய ஆசிரியர்களில் ஒரே ஒரு பெண் ஆசிரியராக விளங்கியவர் திருமதி. பாக்கியம் ஆசிரியர் ஆவார். இவரை மாணவர் கள் அம்மா ரீச்சர் என்று தான் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்து பெண்களுக்குரிய உடை அலங் காரம், குழந்தைக்கு ஏற்றவாறு கண்டிப்பும், அன்பும், அரவணைப்பும் கொண்ட சுபாவம் உடையவர். குழந்தைப் பாக்கியம் இவருக்கு இல்லாவிட்டாலும் உறவினர் குழந்தைகளை வளர்த்து இக்கல்லூரியிலேயே கற்பித்து ஆளாக்கியவர். வித்தியாலயத்தின் முன்புற மாகவே இவரின் இல்லம் அமைந்து இருந்தது. வித்தியாலயத்துக்குத் தேவையான உதவிகளை அவர் அயலில் இருந்தே கவனித்து வந்தார்.

ஆரம்பக்கல்வி ஆசான்கள் என நான் அறிந்தவரை மேற்குறிப்பிட்டவர்கள் பிரபல்யமான வரானாலும் தொடர்ந்து கற்பித்த ஆசான்களும் எம்மனக்கண்முன் உலாவுகின்றனர். தொடர்ந்து பெண் ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு ஆரம்பக் கல்வி கற்பிக்க வந்து சேர்ந்தனர். அவர்களும் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். நிர்வாகம் முழுக்க அம்பிகைபாகன் அவர்களின் கையேற்றதும் ஆரம்பக்கல்வியும் அவரின் மேற்பார்வையின் கீழ்வந்தது. மாணவர் தொகை காலத்துக்குக் காலம் கூடியது. பல கட்டடங்கள் போடப்பட்டன. கற்றல் கற்பித்தல் செயற்பாடும் பெறுபேறுகளும் யாவரும் போற்றும் வகையில் மேலோங்கியது எனலாம். இக்கால ஆரம்பக் கல்வி ஆசிரியையாக விளங்கிய ராணி ரீச்சர் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திருமதி. மதுரநாயகம் அவர்கள் இன்றும் கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபட்டு லண்டன் கிளையில் அங்கத்தவராக விளங்குகின்றார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் மாணவர் வாழ்ந்த சூழலி லேயே வாழ்ந்தவர் ஆகையால் ஒவ்வொரு மாணவ, மாணவியில் குடும்ப நிலையும் அறிந்து இருந்தனர். இதனை சிறந்த வழிகாட்டிகளாகவும் ஆலோசனை வழங்குபவர்களாகவும் இருந்தனர். ஆரம்பக்கல்வியில் ஐந்தாம் ஆண்டு சித்திய டைந்தவர்கள் உயர்கல்வியை கற்பதற்கு அம்பிகை பாகன் நிர்வாகத்தின் கீழ் இன்றும் வைத்தீஸ்வரா வித்தியாலயம் நோக்கி நகர்த்தப்பட்டனர்.

இந்த வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் கள் சிறந்த வழிகாட்டலில் எழுத வாசிக்க விளையாட்டுத்துறை என்பவற்றில் சிறந்தவர்கள் தொடர்ந்து இங்கு மேற்படிப்பை மேற்கொண்ட மையால் கலவியில் ஆர்வமும், பற்றும் கொண்டு கல்வி கற்று கல்விப் பெறுபேறுகளிலும் விளை யாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்கிய வித்தியாலயத்துக்குச் சிறந்த பெயரைப் பெற்றுக் கொடுத்தனர். இந்த ஆரம்பக்கல்வியின் அத்தி வாரத்தில் வளர்ச்சிபெற்ற மாணவரின் கலை துறை வளர்ச்சிகள் அதிபர் அம்பிகைபாகன் காலத்திலேயே கல்வித்தரம் Cயிலிருந்து A தரத்துக்கு 60க்களில் உயர்த்தப்பட்டது. மருத்துவத் துறை, கணக்கியல்துறை, கலைத்துறை, பொறியியல்துறை, வர்த்தகத்துறை வளர்ச்சியுடன் கால்பந்தாட்டம் போன்ற பல்வேறு இணைப்பாட விதானத்துறையிலும் சிறந்து விளங்கியது.

## ஆரம்பக்கல்வி மீண்டும் தேவை.

கல்லூரியின் மாணவர் தொகையும் A, B, C, D, E என பல்வேறு பிரிவுக்குள்ளும் அடக்க முடியாத நிலையில், இடவசதிப்பற்றாக்குறையில் 70களில் ஆரம்பக்கல்வி இல்லாமல் செய்யப் பட்டது மிகக் கவலைக்குரிய விடயமாகும். இடவசதியினைப் பார்த்து கல்வித்தரத்தை வீழ்ச்சி யடையச் செய்தமை தான் மிச்சம் எனலாம். ஒரே கல்லூரியில் சூழலில் உள்ள மாணவர்கள் அக்கல்லூரியின் ஆரம்ப முடிவே கற்பித்து அவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குக்கு அமைய கற்றல் வழிகாட்டிகளாக உயர்கல்வியை செய்வதால் மாணவர் வளர்ச்சியுடன் கல்லூரியும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

எனவே கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி யளிக்கும் பழைய மாணவரும் பெற்றோரும் நல்விமான்களும் இதை வளர்த்து இல்லாமல் செய்யப்பட்ட ஆரம்பக் கல்வியை மீண்டும் தொடங்கி கல்லூரியை பெற்றோரிடமிருந்து நம்பி வந்து சிறார்கள் நம்பத்தன்மையுடன் மீண்டும் கற்பித்தால் கல்லூரியின் வளர்ச்சி இன்னும பத்து ஆண்டுகளில் முன்னைய நிலைக்கு உயர்த்த முடியும் எனக் கூறி எனது கல்லூரியின் ஆரம்பக்கல்வி பசுமை நினைவுகளை நினைவு கூருவதுடன் ஆசிரியையாக இருந்து இக்கல்லூரி யில் ஆரம்பக்கல்வி கற்காமல் ஆண்டு ஆறில் எழுத, வாசிக்கத் தெரியாத பிள்ளைகளுடன் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு 22 வருடங்கள் பட்ட கஷ்டங்களின் அனுபவத்தைக் கொண்டும், மீண்டும் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தால் கல்லூரியும் வளரும். கற்பிக்கும் ஆசிரியருக்கும் மகிழ்ச்சி. செய்த சேவையும் சிறக்கும் எனக் கூறி இனிதே முடிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வளர்ச்சியில் பழையவரின் பங்கு



திரு. ப.காண்டீபன் *B.A.(Hons.) Phy Spi*
செயலர், ப.மா.மன்றம்.

பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் கற்ற பாடசாலையையும் மறப்பவன் மனிதனல்லன். எம்மைப்பத்து மாதம் சுமந்து நொந்து பெற்று அல்லும் பகலும் கண்விழித்து எமக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் தாயையும், நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாட்டினையும், எமது அறிவுக்கண்ணை திறந்தும் ஓழுக்கத்திலும் நற்பண்புகளிலும் சிறந்து விளங்கக் காரணமான பாடசாலையினையும் நாம் இலகுவில் மறந்து விடமுடியாது. அதிலும் நாம் கற்ற பாடசாலை யினையும் கற்பித்த ஆசிரியர்களையும் மறக்கவே கூடாது. "மாதா, பிதா, குரு, தெய்வம்" இங்கு தெய்வத்திலும் மேலானதாக அறிவூட்டும் ஆசிரி யன் போற்றப்படுகின்றான். சமூகத்தில் ஒருவன் நல்லவனாயினும் கெட்டவனாயினும் முதலில் அவனிடம் கேட்பது நீ எந்தப் பாடசாலையில் கற்றாய்?, யாரிடம் கற்றாய்? என்பதே. எனவே கல்வியிலும், ஒழுக்கத்திலும் ஒருவன் சிறப்படை யும் போது பாடசாலை மேன்மையுறுகின்றது. அவனிற்கு கற்பித்த ஆசிரியர்கள் பெருமை கொள்கின்றனர். எனவே பாடசாலை வாழ்வை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களால் பாடசாலை புகழடைய வேண்டும்.

பதின்மூன்று வருடங்களாக எமக்கு நல்லறி வூட்டி வைத்தியர்களாகவும், பொறியிலாளர்களாக வும், பேராசிரியர்களாகவும் பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாகவும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் எவரும் முதலில் நினைவு கூருவது தாம் கல்வி கற்ற பாடசாலையினையே. ஓர் பாடசாலையின் முன்னேற்றம் என்பது அங்கு கற்று வெளியேறிய பழைய மாணவர்களின் கைகளிலே தான் தங்கியுள்ளது. அதாவது பாடசாலையின் வளர்ச்சி சமூகத்திலே தான் தங்கியுள்ளது. எனவே சமூகமயமாதலிற்கு பாடசாலையே முதலில் காரணமாக அமைகின் றது. சமுதாய மாற்றம் பாடசாலையினாலேயே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. எதிர்கால சந்ததியினை வளமானதாக மாற்றும் பொறுப்பு பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கலாச்சாரம் என்னும் எண்ணக்கரு முக்கியமானதொன்றாகும். தாய், தந்தை, சகோதரர்களுடன் வாழும் குழந்தை தனது வயதினை ஒத்த மாணவர்கள், ஆசிரியர் கள் போன்றவர்களுடன் பழகும்போது நேரடியாக வும் மறைமுகமாகவும் அவர்களிடமிருந்து பலவற் றைக் கற்றுக்கொள்ளுகின்றது. சமூகத்தில் தானும் ஒரு அங்கத்தவர் என்ற உணர்வினைப் பெறுகின் றது. கல்வி அனைவருக்கும் பொதுவானது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கின்ற பாகுபாடு பாடசாலைகளில் கிடையாது. அதேபோல் கற்பவர், கற்பிப்பவர் என்கின்ற பேதமும் இருக்கக்கூடாது. இதனையே மகாத்மா காந்தி தமது நய்தலிம் என்னும் புதிய கல்வி முறையில் கற்றலென்றும் கற்பித்தலென்றும் ஓர் பேதம் இருககக்கூடாது. செயல், அறிவு, மகிழ்ச்சி ஆகிய மூன்றும் இணையும் போதே கல்வி முழுமை பெறும், கல்வி பிள்ளையைச் சுதந்திரமான ஒருவனாகவும் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவனாகவும் ஆக்குவ தாக அமையவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

## பாடசாலைச் சூழலை வளமாக்க......

கல்வி ஒருவரின் வளமான வாழ்விற்கும் எதிர்காலத்திற்கும் அடிப்படையாக அமைய வேண்டும். இதற்காக பாடசாலைகளில் நூற் கல்வியுடன் தொழிற்கல்வியும் போதிக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் சமுதாயத்தில் உள்ள தொழிலற்றவர்களிற்கு முறைசாராக்கல்வி முறை மூலம் இத்தொழிற்கல்வியைப் போதிக்கலாம். சமூக மயமாக்கலிற்கும் உலகமயமாக்கலிற்கும் ஏற்ப கல்வியும் மாறவேண்டும். இதற்கு பாட சாலைகள் முன்னேற்றமடைய வேண்டும்.

கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் முழுமை பெறுவதற்கு பாடசாலைச் சூழல் வளமானதாக அமையவேண்டும். வளமற்ற சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமானதாக மாற்றுவதற்கு கல்லூரியில் கற்று வெளியேறிய அச்சூழலைச் சார்ந்த மாணவர்களே முன்வரல் வேண்டும். ஏனெனில் அப்பாடசாலையில் இனிமேல் கற்கப்போவது அவர்களின் சந்ததியினரேயாகும்.

மாணவர் மையக் கல்வியில் மாணவர்கள் சுயமாக தேடிக் கற்பதற்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இங்கு ஆசிரியன் ஓர் வழிகாட்டியேயாவான். எனவே மாணவர்கள் சுயமாகத் தேடிக் கற்பதற்கு பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் நூலகம், கணனிகள் நவீன இலத்திரனியல் தொழில்நுட்பசாதனங்கள் என்பன கல்லூரியின் சொத்தாக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களைக் கொள்வனவு செய்வது என்பது பாடசாலைகளால் முடியாத காரியம். இத்தகையவற்றை பாடசாலையினைச் சூழ வாழும் சமூகத்தவரும் கற்று வெளியேறிய நல்நிலையில் உள்ள மாணவர்களுமே மனமுவந்து அளிக்கவேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் பழைய மாணவர்கள் தாம் கற்ற கல்லூரிகளை மறக்காது உதவிகளை வழங்க முன்வரல்வேண்டும்.

ஓர் பாடாசலையின் வளர்ச்சி கற்றல் கற்பித்தல் என்பதனால் மட்டும் நிகழாது. மாணவர்களின் செயற்றிறன்களை வெளிக்காட்டும் மெய்வல்லுனர் போட்டிகள் கலாச்சார நிகழ்வுகள் பிற பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் ஒன்றுகூடல் போன்ற நிகழ்வுகள் கண்காட்சிகள் கல்விச் சுற்றுலாக்கள் போன்றனவற்றாலுமாகும். இத்தகைய நிகழ்வுகளில் மாணவர்களின் ஈடுபாடு அதில் அவர்களின் பங்கேற்பு போன்றவை அவர்களிடையே தலைமைத்துவப் பண்புகளையும் ஆளுமை விருத்தியையும் பிறரிற்கு உதவும் மனப்பான்மையினையும் ஒற்றுமையாக செயற்படும் தன்மையினையும் வளர்க்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர்கள் மாணவர், மாணவர் மாணவர்களிற்கிடையிலான தொடர்புகள் நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். நவீன கல்விச் சீர்திருத்தம் மற்றும் மாணவர் மையக் கற்பித்தலில் ஓர் ஆசிரியன் கற்பிக்கும் போது அவன் மாணவனாக மாற வேண்டும். அதாவது தன்நிலையில் இருந்து மாணவனின் நிலைக்கு ஆசிரியர் இறங்கி வரல் வேண்டும். ஆசிரியன் மாணவனின் நிலைக்கு இறங்கி வந்து கற்பிக்கும் போதுதான் மாணவர்களின் மனநிலைகளை உணர்ந்து அவர்களின் தன்மைக்கும் விருப்புக்கும் ஏற்ப கற்பிக்க முடியும். மாணவர்களின் கற்றல் குறைபாடுகளை இனங்கண்டு கற்பிக்கமுடியும். கற்பித்தலில் புதுமையான அம்சங்களைப் புகுத்தமுடியும். மாணவர்களிடமிருந்து நல்ல விடயங்கள் கிடைக்கப் பெறும்போது தயங்காது அவற்றை ஆசிரியர் கற்கவேண்டும்.

பழைய மாணவர் மன்றம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் ஊடாக அதிபர் ஆசிரியர்கள் தமது தேவைகளைக் கேட்டு நிறைவேற்றிக்கொள்ளலாம். இதற்காக இத்தகைய அமைப்புகளைப் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும். அவற்றின் அங்கத்தவர்களை வரவேற்க வேண்டும். ஒரு கல்லூரியின் மீது மதிப்பும் மரியாதையும் தான் கற்ற கல்லூரிக்குத் தன்னால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்ற மனோபாவமும் பழைய மாணவனிற்கே வரும். ஏனெனில் அவனின் ஆயுள் முடியும் வரை அவன் அக்கல்லூரியின் பழைய மாணவனேயாவான். அதிபர்கள், ஆசிரியர்கள் வருவார்கள் போவார்கள் நிலைத்திருக்கமாட்டார்கள். அவர்கள் நிலைத்து நின்று சேவையாற்ற விரும்பினும் கல்வி நிர்வாகம் இடந்தரமாட்டாது. சேவைக்கால ஓய்வு, பதவியுர்வுகள் இடமாற்றங்கள் போன்றவை கல்வி நிர்வாகத் துறையில் சாதாரணமானவை. எனவே ஓர் பாடசாலையின் ஏற்றமும் இறக்கமும் பாடசாலைச் சமூகத்தினையும், பழைய மாணவர்களையுமே பாதிக்கும். இன்றைய கல்லூரி மாணவன் நாளைய பழைய மாணவன். எனவே இன்றைய பழைய மாணவர்கள் நாளைய பண்புமிக்க, தம்மிலும் பார்க்க உயர்ந்த பழைய மாணவர்களை உருவாக்க முன்வருதல் வேண்டும். அதற்குக் கல்லூரி நிர்வாகம் ஒத்தாசைகள் புரியவேண்டும்.

எனவே பாடசாலையின் வளர்ச்சி, முன்னேற்றம் என்பன அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் பாடசாலைச் சூழலில் வாழ்பவர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஊர்கூடித்தான் தேர் இழுக்க வேண்டும். இவர்கள் அனைவரும் இணைந்து செயற்படும் போது தான் ஒரு பாடசாலை உயரும். அதன் பெயரும் வரலாற்றில் தனக்கென ஓர் இடம்பிடித்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையும் கல்வியும்

திரு. இ. கிருஷ்ணகுமார் B.A.(Hons) Hin.Spi.
ப.மா.ம.நிர்வாக சபை அங்கத்தவர்

நாகரிக வளர்ச்சியுடன் சகல நாடுகளும் தம் நாட்டுக் கல்வி வழங்குவதற்கு முன்வந்தனர். அதன் விளைவாகப் பாடசாலை என்ற பெயரில் கல்வி நிறுவனங்கள் தோன்றலாயின. பிளேட்டோ ஆரம்பித்த முதலாவது பாடசாலை அன்று "அக்கடமி" என அழைக்கப்பட்டது. இன்று காணப்படும் பாடசாலை அமைப்பு இந்நிறுவனத் தின் கிரமமான வளர்ச்சியாகும்.

ஒரு நாட்டில் பாடசாலைக்கல்வி பாரிய பங்களிப்புக்களை நிறைவேற்றுகின்றது. சாஸ்திர, கோட்பாட்டு அறிவினை வழங்குவதற்கும் முழுச் சமுதாயத்திற்கும் பொருத்தமான நுட்பவியலாளர் களையும். கற்றவர்களையும் உருவாக்குவதற்கும் பாடசாலை அடிப்படையாக அமைகின்றது. தற்போது செயற்படும் பாடசாலை முறை மேற்குலகைப் பின்பற்றியதாகும் எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆதலால் கீழ்த்திசை நாடு களுக்கு விசேடமாக மூன்றாம் உலக நாடுகளுக் குப் பொறுத்துக்கொள்ளமுடியாத பாரிய சுமை யாகக் காணப்படுகிறது என்ற கருத்தும் உருவாகியிருக்கிறது.

கல்வி என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது பாடசாலையே எங்கள் மனதில் தோன்று கிறது. அத்துடன் வகுப்பறை, பாடநூல், பரீட்சை கள் ஆகியவற்றுடன் ஆசிரியர்களும் ஞாபகத் துக்கு வருகிறார்கள். நீண்ட காலமாகக் கல்வி, பாடசாலை என்ற இரு சொற்களும் இணைந்தே காணப்படுகின்றன. கல்வி வழங்குவது பாடசாலை எனவும் பாடசாலையின் செயல் கல்வியைப் பெற்றுக் கொடுப்பது எனவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. எனினும் ஒருவர் சதாகாலமும் பாடசாலை செல்வதில்லை. ஆதலால் பாடசாலை யில் பெற்றுக்கொள்ளும் கல்வி பாடசாலைக்கு வெளியே பெற்றுக்கொள்ளும் கல்வி எனக் கல்விச் செயல்களை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் பாடசாலை மிக முக்கியமான பங்களிப்புக்களை நிறைவேற்றுவ தால் கல்விக்கான காரணிகளில் சகல காலங் களிலும் பிரதான காரணியாக விளங்குகிறது.

## கல்வி ஒரு வாழ்க்கைச் செயல்

கல்வி என்ற எண்ணக் கருவில் கல்வி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற் கான ஊடகங்களாக அமைபவை யாவை? போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன. கல்வி என்பது ஒரு திட்டத்தின் அடிப்படையில் முறை யாக வழங்கப்படுவது மட்டுமன்று தாயின் வயிற்றிலிருந்து அல்லது பிறந்ததிலிருந்து மரணம் வரை கல்வி பெறுவதாக இருத்தல் ஒருவர் சகல காலங்களிலும் கல்வியை பெற்றுக் கொள்கிறார். ஆதலால் கல்வி ஒரு வாழ்க்கைச் செயலாக அமைகின்றது. அதாவது தற்காலத் தில் கல்வி பாடசாலைகளில் மட்டும் வழங்கப்படு கிறது என்ற கருத்துப் புறக்கணிக்கப்படுகிறது. பாடசாலைகளுக்கு மேலதிகமாக வேறுபல நிறுவனங்கள் கல்வியுடன் தொடர்புறுகின்றன. கல்வி என்பது "மனிதனுக்குத் தானாகுவதற்கும் தனக்காகுவதற்கும் உரிய திறன்களை வழங்குவ தாகும்" என்ற பரந்த கருத்தைக் கவனத்தில் கொள்ளும்போது இதற்கான செயற் பொறுப்புக் களை நிறைவேற்றுவதற்குப் பாடசாலைகள் செயற்படுகின்றனவா? அவை போதுமானவையா? என்ற சந்தேகம் தோன்றுகின்றது. கல்வியைப் பாடசாலைக் காலத்தின் வரையறைக்குட்பட்டதும் நிறுவனத் தொடர்புடையதுமான செயன்முறை யாகத் தொடர்ந்து கணிக்க முடியாது. இதனால் கல்வி என்பது வாழ்க்கைச் செயல்முறை என்ற கருத்து சமர்பிக்கப்பட்டுள்ளது.

## சுருங்கும் உலகுக்கு

20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மனிதர்க ளிலும் பார்க்க 21 ஆம் நூற்றாண்டில் காலடி வைத்துள்ள மனித வர்க்கத்திற்கு அவசியமான அறிவு, திறன், மனப்பாங்குகள் அதிகம் சிக்கல் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இயல் பாகவே உருவாகும் நவீன அறிவும் விஞ்ஞான தொழினுட்ப அறிவும் ஊடகத்துறை போக்குவரத்து அபிவிருத்திகளும் காரணமாகச் சுருங்கிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் உலகத்துக்குப் புதிய மனிதர்கள் தோற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதற்காகத்தான் பாடாசாலைக் கல்வி சார்ந்த முறைசார் கல்வியோடு ஏனைய கல்வியின் பல்வேறு துறைகளான முறையில் கல்வி, முறைசாராக்கல்வி மற்றும் தொடர்கல்வி, புனர்நிர்மாணக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, திறந்தகல்வி என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும் தற்காலத்தில் விஞ்ஞான தொழினுட்பத் துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக சமுதாயத்தின் அறிவுத்துறை பெருமளவு விருத்தியடைந்துள்ளது. இவ்வாறு அறிவு பீறிட்டுப்பாயும் ஒரு யுகத்தில் பாடசாலை கல்வி வழங்குவதற்கான ஏகபோக உரிமையைப் பெற்றிருப்பது போதுமானதா? பொருத்தமானதா? என்பது பற்றிச் சந்தேகம் தோன்றியுள்ளது. இதனால் கல்வி வழங்கும் ஏகபோக உரிமையைப் பெற்றிருக்கும் ஆசிரியர்களைப் பற்றியும் பல விமர்சனங்கள் தோன்றியுள்ளன.

பாடசாலைக் கல்வி முறைசார் கல்வி என்ற துறையில் உள்ளடங்குவதால் இங்கு முறைசார் கல்வி பற்றி நோக்குவது பொருத்தமானதே. அந்த வகையில் முறைசார் கல்வி என்பது குறிப்பிட்ட காலக்கிரம முறையில் திட்டமிடப்பட்டதும் படிமுறையான தரங்களைக் கொண்டதும் ஆரம்பப் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பல்வேறுபட்டதும் விசேட திட்டங்களுடனானதுமான கைத்தொழில், தொழில் சார் துறைகளை உள்ளடக்கிய முழுநேரக்கல்வி முறையாகும்.

பிலிப்ஸ்கம்பஸ் என்பரால் மேற்குறிப்பிட்டவாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ள முறைசார் கல்வியில் பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியன பிரதான கல்வி நிறுவனங்களாகும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் மூலம் பாடசாலைக் கல்வியின் யதார்த்தத்தை அறிந்து கொள்ளமுடியும். அங்கு குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் உண்டு. பாடசாலையில் கிரமமான தரமுறையொன்றும் காணப்படுகின்றது. முதலாம் ஆண்டு தொடக்கம் பதின்மூன்றாம் ஆண்டு வரையும் மேல்மட்டத்தில் பரீட்சைகளுக்காவும் தரமுறையொன்று செயற்படுத்தப்படுகின்றது. பாடசாலையில் அனுமதித்தல் தர உயர்ச்சி வழங்குதல், நீக்குதல் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு முறையொன்று உண்டு. இவைகள் எல்லாவற்றையும் நோக்கும்போது பாடாசாலைக் கல்வி பெறுமதிமிக்கதொன்றாகக் காணப்படுகின்றது.

**நவீனமயத்தின் அவசியம்**

தற்கால உலகம் முன்னரிலும் பார்க்கப் பொருளாதார, சுற்றாடல், ஆசிரியர், சமுதாயப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. மக்களை அந்த காலத்திலிருந்து மீட்டு விஞ்ஞான ரீதியாக ஒளிமயப்படுத்துவதன் மூலம் மட்டுமே இப்பிரச்சினைகளை எதிர் கொள்ளமுடியும் இத்தேவையை மனதிற் கொண்டே கி.பி.2000ஆம் ஆண்டு "சகலருக்கும் கல்வி" என்ற எண்ணக்கரு செயற்படுத்தப்பட்டது. நவீன விஞ்ஞான அறிவுப் பரிமாற்றம் நிகழும் இவ்வுலகில் 10 கோடிக்கு மேற்பட்ட குழந்தைகள் குறைந்தது ஆரம்பக்கல்வியையேனும் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் காணப்படுகிறார்கள். 1990 ஆம் ஆண்டளவில் 9 கோடிக்கு மேற்பட்டவர்கள் எழுத்தறிவு அற்றவர்களாகக் (எழுதும், வாசிக்கும் திறன்) காணப்பட்டார்கள்.

இத்தகைய வேறுபாடுகள் தொடர்ந்தும் அனுமதிக்க கூடியதன்று. எனவே எவ்விதத்திலேனும் சகலருக்கும் கல்வியை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பாடாசலைக் கல்வியினூடாகத் தொடர்ந்தும் கல்வித்துறையின் பிரச்சினைகளைச் சமத்துவப்படுத்தமுடியும் என்பது சந்தேகத்துக்கிடமானது. 1985 யுனெஸ்கோ அறிக்கையின்படி 6 - 11 கிடைப்பட்ட வயதிலுள்ள 10 கோடி 15 இலட்சம் பிள்ளைகள் பாடசாலைக்ச் செல்லவில்லை. இந்நிலை தொடாந்தும் நீடித்தால் கி.பி.2000 ஆம் ஆண்டிருக்கும் போது பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை 20 கோடியாக உயரும் என யுனெஸ்கோ அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இவ்வெண்ணிக்கை அச்ச உணர்வை ஏற்படுத்தினாலும் உண்மையானதொன்று. ஆதலால் கற்றல் - கற்பித்தல் செயலை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோர்களின் பங்களிப்பும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

பாடசாலைக் கல்வியில் குறைநிறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றினை இப்போது நோக்குவோம். பாடசலைக்கல்வி நூறகல்விக்கு முதலிடம் அளிக்கும் நகர கலாசாரத்துக்குப் பயிற்சியளிக்கும் ஒரு சிலருக்கு மேல் மட்டத்திற்குச் செல்வதற்கு வழிவக்குக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையாகும் எனவும் குறிப்பிடுகின்றனர். பாடசாலை என்னும் நிறுவனத்தில் நீண்ட காலத்தைக் கழித்து உயர்மட்டத்திலான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதன் மூலம் "கற்றவர்" ஆகின்றார்கள் இதனால் பாடசாலையில் நீண்ட காலம் இருந்தவர் கற்றவர் எனவும் நீண்டகாலம் பாடசாலைக்குச் சமுகமளிக்காதவர் "கற்காதவர்" எனவும் பாகுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கற்றவர், கற்காதவர் என்ற பாகுபாடு பாடசாலையினால் உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சினை என்ற கருத்தும் நிலவுகின்றது.

## பாடசாலை ஒரு வைத்தியசாலை?

மேலும் பாடசாலை என்பது நோயாளிகள் புறக்கணிக்கப்பட்டுச் சுகதேகிகளுக்குப் பரிகாரம் செய்யும் ஒரு வைத்தியசாலை எனவும் பாடசாலை ஆக்கங்களுக்கும் சுவாதீனத்துக்கும் தண்டனை வழங்கும் ஒரு இடம் எனக் கூறப்படுகின்றது. De Schooling Society, School is dead ஆகிய நூல்கள் பாடசாலையால் நிறைவேற்றப் படவேண்டிய பங்களிப்புக்களுக்குப் பதிலாக அதற்கு மாற்றமான பங்களிப்புக் களையே பாடசாலைக் கல்வி நிறைவேற்றுகின்றது எனக் சுட்டிக்காட்டுகின்றன.

பண்டைக்காலத்தில் சமுதாயத் தேவைகளுக்குப் பாடசாலை போதுமாக இருந்தாலும் நவீன விஞ்ஞான தொழினுட்ப சமுதாயத்துக்குப் பாடசாலை ஒரு காலங்கடந்த நிறுவனமல்லவா? என வினவுகிறார்கள். நவீன உலகத்துக்குப் பொருத்தமான விதத்தில் பாடசாலைக்கல்வி நவீனமயப்படுத்தப்படல் வேண்டும் எனவும் எத்தகைய சவால்கள் எதிர்கொண்டாலும் அவற்றைத் தாங்கிக் கொள்ளக் கூடியதாகப் பாடசாலை நவீனத்துவம் பெறவேண்டும் எனவும் அறிஞர் குறிப்பிடுகின்றனர். ஆரம்ப மதிப்பீட்டு அமைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் திறன்களை நிர்ணயித்துப் படிப் படியாக மேல்நோக்கிச் செல்வதற்குப் பாடசாலைக் கல்விமுறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பாடசாலையை இடைநடுவில் விடுதல் பாடசாலையிலிருந்து நீங்குதல் ஆகிய காரணிகளினால் பாடசாலைக் கல்வி சமுதாயத்தில் சகலருக்கும் சமமான சேவையை வழங்கமுடியாத நிலை காணப்படுகின்றது. கல்வியின் பரந்த வரைவிலக்கணத்துக்கேற்ப கல்வி வழங்குவதற்குப் பதிலாக ஒரு போட்டியான சமுதாயத்துக்குப் பொருத்தமான போட்டியான கல்வியை வழங்கும் குறுகிய நோக்குடன் பாடசாலை அமைப்பு செயற்படுகின்றது என மற்றொரு குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பஒலா பிரயர் (Paluo Frier) என்பவர் பாடாசாலைகளில் செயற்படுத்தப்படும் பிழையான கற்பித்தல் முறை காரணமாகச் சமுதாயத்தின் சிந்தனைத்திறனும் ஆக்கத்திறன்களும் மழுங்கடிக்கப்படுவதால் அவை சமுதாய வீழ்ச்சிக்கு காரணமாகின்றன. எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

இத்தகைய குற்றச்சாட்டுக்ள் தெரிவிக்கப் பட்டாலும் பாடசாலைக்கலவி இன்னும் கல்விச் செயல்களில் முக்கிய இடத்தை பெறுகிறது. அதனால் ஏற்படும் குறைபாடு களைப்போன்று நன்மைகளும் காணப்படுகின்றன. எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் நவீன விஞ்ஞான, தொழினுட்ப உலகத்தில் பாடசாலைக் கல்வி மிகவும் பாரிய பங்களிப்புக்களை நிறைவேற்றுகின்றது. அளவில் அதிகமாக இருத்தல் செலவு அதிகமாக இருத்தல் சமத்துவமற்ற பரம்பல் நூற்கல்விக்கு முதலிடம் வழங்குதல் ஆகிய பிரச்சினைகள் பாடசாலைக் கல்வியமைப்பில் காணப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகளைக் குறைத்துக் கொண்டு மிகவும் பயனுள்ள கற்றல் காரணியாகத் தொடர்ந்தும். சகல காலங்களிலும் பேணிக்கொள்வதற்கு பாடசாலைக் கல்வித்திட்டங் களைத் தயாரித்தல் வேண்டும்.

முடிவாக இதுவரையும் நாம் கூறியதைத் தொகுக்கும்போது பாடசாலை என்ற சொல்லின் வளர்ச்சிபற்றியும் கல்விக்கும் பாடசாலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியும் கல்வியானது பிறப்பில் இருந்து இறப்பு வரை நிகழ வேண்டும். இதற்குப் பாடசாலையின் பங்களிப் புப்பற்றியும் 21 ஆம் நூற்றாண்டில் மனிதர் எதிர்கொள்ளும் பிரச்சினையை நீக்கு வதற்கு ஏற்ற கல்வி முறைபற்றியும் மேலும் பாடசாலைக் கல்வியின் விசேட இலட்சணங் களும் அதன் குறை நிறைகளும் அவற்றினை நீக்குவ தற்கான வழிவகைகள் பற்றியும் சிறப்பாக ஆராயப் பட்டுள்ளது.

### நமக்குத் தேவையான கல்வி

நல்ல பண்புகளை உருவாக்குகின்ற, மனவலிமையை வளர்க்கின்ற, அறிவை வளம்பெறச் செய்கின்ற, தன்னம்பிக்கையை ஊட்டுகின்ற கல்வியே நமக்குத் தேவை. "சுவாமி விவேகானந்தர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலயத்தின் தனிப்பெரும் பாரம்பரியம்

திரு. நா. நமசிவாய இடைக்காடர் B.Sc

உயர்ந்த அழகிய கட்டிடங்கள் மட்டுந்தான் கல்லூரியை ஆக்குகின்றன என்ற கூற்றைப் பிழையென வைத்தீஸ்வர வித்தியாலயம் முப்பது ஆண்டுகட்கு முந்தி நிறுவிக் கொண்டிருந்தது. ஏறக்குறைய 1930ம் ஆண்டு, இக்கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்த எனக்கு இது "சிறிது" ஆகத்தான் தோற்றியது. சிறிய கட்டிடம், பெரிய மண்டபம், எட்டு ஆசிரியர்கள், ஏழு வகுப்புக்கள், நூற்றிருபது மாணவர்கள் கொண்டதுதான் இக்கல்லூரி.

எனினும் மற்றைய கல்லூரிகளிலும் பார்க்க இக்கல்லூரி சமயத்துறையில் கல்வி புகட்டுவதில் ஈடு இணையற்று விளங்கியது. தினசரி காலை மாலை இறைவணக்கம். வெள்ளிக்கிழமைகளில் நீண்ட நேரப் பூசையும், ஆசிரியர் ஒருவரின் நற்போதனையும் இடம் பெறும். நாயன்மார்களின் பூசை, சரஸ்வதி பூசை, சிவன்கோவில் திருவிழாகளிலும் போது மண்ட கப்படி சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி. இப்படிப் பல விழாவிலும் எல்லா மாணவர்களும் பங்கு பெறுவர். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பெரியார்கள் ஒருவராவது எம் கல்லூரிக்கு வராது போகவில்லையென்றால் நாம் செய்த பாக்கியம் சாதாரணமானதா?

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எழுத்து என்ற பதம் எதைக் குறித்த போதிலும் என்னைப் பொறுத்தவரையில் என் கையெழுத்தை ஆக்கி வைத்த ஆசிரியர்கள் அம்பிகைபாகன், வைரமுத்து, சீனிவாசகம் ஆகியோருக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாகின்றேன். நான் J.S.C. இல் படிக்குங் காலத்திற் கூட, என் கையெழுத் துத் திருந்தவில்லை என்ற காரணத்திற்காக எனக்குப் பவுண்டன் பேனா வாங்கிக் கொடுக்க வேண்டாம் என்று என் தமையனாருக்கு உத்தரவு இட்டாராம். "G" பேனைக்கூர் உபயோகித்துப் பேனைத்தடியால் எழுதும்படி எனக்குக் கட்டளை! இதன் பயனாக, இன்று தெளிவாகவும் அழகாகவும் எழுதுபவர்களின் வரிசையில் நானும் ஒருவனாக மதிக்கப்படுகின்றேன்.

## யாழ்ப்பாணத்தில் திறமைப் பெறுபேறு

1935ம் ஆண்டு திருவாளர் அம்பிகைபாகன் தலைமையாசிரியராக வந்து சேர்ந்தார். கதர் உடுப்பும், புன்சிரிப்பும் ஆனால் இடையிடையே வெடு வெடுப்பும் உடையவர். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பதிற்கேற்ப, இவருக்குக் கோபம் வருமுன்பே முகம் காட்டிக் கொடுத்து விடும். எங்களுக்கு ஆங்கில பாடம் எடுக்கத் துவங்கினார். ஒரே பீதி, இவரிடம் படித்து எவ்வாறு சித்தியடைவதென்று! ஆனால் நன்றாக எங்களிடம் வேலை வாங்கினார். படிக்கச் செய்தார். ஈற்றில் ஒன்பது பேருக்கு ஐந்துபேர் ஆங்கிலம் மட்டுமல்ல, J.S.C. சோதனையில் சித்தியடைந்தோம், அதே சோதனையில் யாழ்ப்பா ணத்தில் உள்ள ஒரு "பெரிய" கல்லூரியில் 27 பேருக்கு ஒருவர்தான் சித்தியடைந்தார். அவ்வருடம் எங்கள் கல்லூரி யாழ்ப்பாணத்திலே திறமையான பெறுபேறு எனக் கதைத்துக் கொண்டனர். ஒரு விதத்தில் உண்மையாய் இருக்கலாம். ஏனெனில் நானே "சரித்திரத்தில்" சித்தியடைந்திருந்தேன்.

நான் முன்குறிப்பிட்ட ஆசிரியர்களுக்குக் கல்லூரியில் மட்டுந்தான் அத்தொழில் என எண்ணிவிட வேண்டாம். கல்லூரிக்கு வெளியிலும் எங்களைக் கண்டால், உரிமையோடு கூப்பிட்டு எங்கே போகிறீர்கள், ஏன் போகிறீர்கள் என்று பல கேள்விகளைக் கேட்பர். இதற்காக இவர்களைக் கண்டால் ஒரே ஓட்டம். நாம் காத்திராப்பிரகாரமாக அகப்படுவது அதிபரிடந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். பின்னேரங்களில் பெரிய கடை வீதியில் உல்லாசமாக நடைபழகும் தருணத்தில் எமக்குப் பின்னால் கொண்டு வந்து இவரது சிறிய காரை நிறுத்துவார் கார்ச்சாரதி. ஒன்றும் கதைக்க மாட்டார். கார் போய்விடும். மறுநாள் பாடம் படிக்கவில்லையெனக் கண்டால் ஏசத் துவங்கு வார். ஏச்சில் பெரிய கடைப்பவனி ஒன்றாய்த் திரிதல், எல்லாம் இடம்பெறும், கார்ச்சாரதியிடம் நட்பு பூண்டு கெஞ்சினோம். எம்மிடம் கோபம் இருந்தால் எம்மை நீர் அடிக்கலாம் ஆனால் காரை எம்பின்னால் நிறுத்தி எங்களைக் காட்டிக் கொடுக்க வேண்டாம். நாம் எதைக் கேட்டாலும் அந்த வம்பு வேலை நிகழும். அதிபர் அப்பொழுது பிரமச்சாரி, நாம் இவருக்கு வீட்டில் வேலையில்லாததால் தான் இப்படி அலைந்து திரிகிறார் எனத் திட்டுவோம். ஊர் மக்கள் அவர் பக்கம். நாம் எதைக் கூறினாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். நாம் இவரிடமிருந்த கோபத்திற்கு, கல்கி இலங்கைக்கு வந்து போன பின்னர் "இவரை மருமகனாக ஏற்கப் போகிறவர் ஒரு அதிஸ்டசாலி" எனப் பத்திரிகையில் எழுதி யிருந்தது, ஆத்திரமூட்டியது. கல்கியை வாசியாது விட்டாலே நலம் என்று தோன்றியது. இவர் ஒரு முற்கோபியேயொழிய ஒன்றையும் வைத்துச் சாதிப்பவர் அல்லர்.

### பேச்சில் "முத்து"

அக்காலத்தில் கடைசி வகுப்பாகிய எட்டாம் வகுப்பில் படிக்கும்போது எங்களைப்பற்றி ஏதோ புகார் இவரிடம் போய்விட்டது. துள்ளித் துள்ளி வந்தார். அத்தனை பேரையும் வெளியேறச் சொன்னார். வகுப்பால் மட்டுமல்ல கல்லூரியாலேயே! திகைத்துக் கண்கலங்கி இருக்கும் வேளையில் வைரமுத்து மாஸ்ரர் எங்களைக் கந்தோருக்கு அழைத்துச் சென்று மிகக் கனிவுடன் தம்பிமார் ஒவ்வொருவராய்த் தனியே என்னிடம் என்ன நடந்ததென்று கூறுங்கள். நான் உங்களை மன்னித்து விடு கிறேன் என்றார். நாம் எதைச் சொல்வதென்று தெரியாது மௌனமாய் நின்றோம். எல்லோரை யும் வெளிவிறாந்தையில் தெருவைப் பார்த்துக் கொண்டு நிற்கும்படியும், உண்மை வெளிவரும் வரை உள்ளேவிட முடியாதெனவும் எவ்வளவு ஆறுதலாகக் கூறினார். அவர் மனம் "வைரம்" ஆகவிருந்தபோதிலும் பேச்சு "முத்து" ஆகத்தான் இருந்தது.

ஒருநாள் முழுவதும் நின்றோம் தெருவாற் போகிறவர்கள் எங்களைப் பார்த்தார்கள். வெட்கம் தாங்கவில்லை.மறுநாள் ஒவ்வொருவராக அவரிடம் போய் ஏதோ எல்லாம் கூறினோம். அவர் புன்சிரிப்புக்கு எல்லையே யில்லாது போய்விட்டது. நாம் பிரம்பு வெட்டித் தாழ்த்த இடங்கூடக் கூறினோம். எல்லா விளக்கமும் முடிய அவர் கூறியது எங்களைத் திடுக்கிடச் செய்தது. உங்களில் யாரோ ஒருவர் ஒரு மாணவியைப் பார்த்து "றலி" என்ற பட்டப் பேராற் கூப்பிட்டதாகத்தான் எங்களுக்குப் புகார். ஆனால் நீங்கள் எங்களிடம் சொன்னதோ ஒரு தொகை. நீங்கள் இனி ஒரு விஷயத்திலும், தலையிடுவதில்லையெனச் சத்தியம் செய்துவிட்டு வகுப்புக்குப் போகலாம் என்றார். நாம் சத்தியம் செய்ததோடு, சத்தியத்தை நிறைவேற்றினோம்.

### தனித்துவமான பாரம்பரியம்

இச் "சிறிய" கல்லூரியில் நாம் படித்த கணிதம், அதுவும் நாராயண ஐயரிடம் என்றாற் சொல்லவும் வேண்டுமா. J.S.C. சித்தியின் பின் "பெரிய" பள்ளிக்கூடத்திற்குப் போனபோது நாம் எல்லோரும் அங்கு மிகவும் கெட்டிக்காரராக விளங்கினோம். இப்பொழுது உப அதிபராய் இருப்பவரிடம் நாம் கணிதம் படிக்கும் பாக்கியம் பெறவில்லை. ஆனால் நாம் வெளியேற முன்னரே அவர் கல்லூரியை வந்து சேர்ந்தார். சேர்ந்த சில தினங்களுக்குள்ளேயே அவர் "உலோனி" என அறிந்தோம். "உலோனி" புத்தகத்தில் அவர் செய்யாத கணக்கில்லையாம். அதுமட்டுமன்று: கணக்கைச் சொன்னால் பக்கம் சொல்லுவார். மறுதலையும் அப்படியே உண்மை யாம்.

வித்தியாலயத்திற்கென ஒரு பாரம்பரியம் உண்டு. அதை உருவாக்குவதில் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட திருவாளர்கள் சீனிவாசகம், வைரமுத்து ஆகியோர் இளைப்பாறி விட்டனர். திருவாளர்கள் அம்பிகைபாகன் ஓய்வுபெறுவ தோடு அப்பாரம்பரியம் முடிவடைந்து விடுமா? ஒருபோதும் இல்லை.

நன்றி வைத்தீஸ்வரன் - 1968

(இக்கட்டுரை ஆசிரியர்: அமரர் திரு நா.நமசிவாய இடைக்காடர் கல்லூரி ஸ்தாபகரின் புதல்வராவார். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப்பசி தீர்த்த எங்கள் கல்லூரித் தாய்



**திரு. சோ. ஜீவரத்தினம்**
பழைய மாணவன்
லண்டன் கிளைச் செயலர்

பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறவாதிருப்பது போல் தாம் கல்வி பயின்ற கல்லூரியையும் மறவாது இருப்பதே அறிவொழியூட்டிய கல்லூரிக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும் சைவ மணம் கமழும் சூழலில் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி சிறந்த கல்வி நிலையமாக தமிழ் மக்களுக்கு பெருமை தந்த கல்லூரி. இப்பாடசாலையை ஆரம்பித்து பெரும் கல்லூரியாக வளர்த்த கல்விமான்களை பழைய மாணவ மன்றத்தின் பொன்விழாவில் நினைவுகூர வேண்டியது எமது கடமையாகும். நான் இக்கல்லூரியில் 11 வருடங்களாக கல்விகற்ற பழைய மாணவன் என்ற வகையில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு என்னால் ஆன பங்களிப்பைச் செய்துள்ளேன் என்பதில் மன நிறைவு அடைகின்றேன்.

கல்வி அறிவே எம்மை உயர் நிலைக்கு கொண்டுவருவது. எந்தக் கல்லூரியில் படித்தாய் என்று கேட்கும்போது யாழ்ப்பாண வைத்தீஸ்வராக் கல்லூரி என்கின்றபோது எமக்குப் பெருமையாக இருக்கின்றது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் வெளிநாடுகளிலும் நல்நிலையிலும் உயர்பதவிகளிலும் இருப்பது பாராட்டத்தக்கது. பொன்விழாக் கொண்டாடும் பழைய மாணவர்களின் செயலாளராக மூன்று ஆண்டுகள் பணியாற்றியதை இட்டு நான் பெருமையடைகின்றேன். பாடசாலையை விட்டுச் சென்றாலும் அக்கல்லூரியின் வளர்ச்சிக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் ஈடுபட்டு உழைத்த போது பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. போர்ச் சூழலால் ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்திலும் பாடசாலை ஒழுங்காக நடைபெற வேண்டுமென்பதற்காக எந்த நெருக்கடிகளையும் சமாளித்து பணியாற்றும் துணிவு ஏற்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்த போது கல்லூரி அதிபர் திரு.சி.சரவணபவன் அவர்களுடைய கையொப்பம் ஒன்று வாங்குவதற்கு கந்தரோடைக்கு துவிச்சக்கரவண்டி மூலம் சென்று கொண்டிருந்தபோது இராமநாதன் கல்லூரிக்கு அண்மையில் குண்டு வீழ்ந்து ஐவர் ஸ்தலத்திலேயே மரணமானபோது நான் வைத்தீஸ்வரன் அருளால் உயிர்தப்பினேன். அது எனது நினைவிலிருந்து விட்டகலாத சம்பவமாகும். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக நாம் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் அதன் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும்.

இக்கல்லூரியின் பவளவிழாவை சிறப்புடன் கொண்டாடும் பாக்கியம் எழக்குக் கிடைத்தது.



*ஒழுக்கமில்லாமல் உயர்ந்த அறிவு பெற்றவர்கள்*
*ஒன்றுக்கும் உதவாதவர்கள்.*

\- **காந்திஜி** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்து நீளும் உதவிக்கரங்கள்

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று கூறிச் சென்றுள்ளனர் நம் முன்னோர்கள். இந்த வழியில் பல்துறை விற்பன்னர்களாகிய எங்கள் பழைய மாணவர்கள் தங்கள் கல்வித்திறன்களை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவும் திரவியம் தேடவும் கடல் கடந்து தாயகத்தைவிட்டு உலகின் பல பகுதிகளிலும் பரந்துபட்டு வாழ்கின்றனர். உடல் அங்கிருப்பினும் அவர்தம் உள்ளம் பிறந்த மண்ணைத் தொட்டவண்ணம் உள்ளது. தாங்கள் அந்நிய மண்ணில் அரும்பாடுபட்டு உழைத்தெடுத்த பணத்தின் ஒரு பகுதியைத் தம் மண்ணில் அறக்கொடையாக்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். தங்களை வல்லவர்களாக்கி உலகுக்களித்த கல்லூரி அன்னை, தாங்கள் கல்வி கற்ற காலத்தில் இல்லாத வசதிகளை இன்று பெற்று நவீன உலகின் கற்கை நெறிகளையெல்லாம் இன்றைய அவளின் குழந்தைகள் பெற்று உயர வேண்டும் என உயர்ந்த எண்ணங்களைக் கொண்டுள்ளனர். இந்த நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பாக இந்த நல்லவர்கள் ப.மா.மன்ற கிளைச் சங்கங்களை ஆங்காங்கே நிறுவிச் செயலாற்றுகின்றனர்.

இவற்றில் லண்டன் மாநகரில் அமைந்துள்ள கிளைச் சங்கத்தின் உதவி சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது. இக்கிளை அமைந்த பின்னரே ஏனைய கிளைகள் அண்மையில் அமைக்கப்பட்டதால் தாய்ச் சங்கச் செயல்பாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் இக்கிளையினர் முன்னிற்கிறார்கள். முதல்கட்டமாக லண்டன் கிளை கல்லூரியின் முன்மதிற்சுவரின் ஒரு பகுதியையும், பெயர் வளைவையும் அழகாக அமைக்க உதவியதோடு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் லண்டன் கிளைச்சங்க பொருளாளர் திரு.கார்த்திகேசு சிவநேசன் லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார் இவர் இக்கல்லூரியில் பல ஆண்டுகள் கணித ஆசிரியராக இருந்து, ஆசிரியராக மட்டுமல்ல ஒரு சமய சமூகத் தொண்டராகவும் விளங்கிய அமரர் கார்த்திகேசு அவர்களின் புதல்வராவர். தந்தையின் தொண்டுள்ளம் அப்படியே இவரிடமும் படிந்துள்ளதை அறிய முடிந்தது. இவரது மனைவி திருமதி. சிவசக்தி சிவநேசன் எங்கள் கல்லூரியின் முந்நாள் ஆசிரியர் திரு. சிவபிரகாசபிள்ளையின் புதல்வியாவர். தனது குரு அமரர் வீரமணி ஐயா அவர்களுக்குச் செலுத்தும் கௌரவமாகவும், நன்றிக்கடனாகவும், நினைவாஞ்சலியாகவும் நல்லை ஆதீனத்தில் ஓர் இசைவிருந்தளித்தார். லண்டனில் இத்தம்பதியர் இசைவளர்ச்சிக்கு நிறுவனமமைத்து இசைக்கலையை வளர்த்து வருவது இங்கு குறிப்பிட வேண்டிய தொன்றாகும்.

இவ்வேளையில் திரு.சிவநேசனை நல்லை ஆதினத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என்னுடன் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு.மு.சிவலோக நாதனும் மேலும் இரு பழைய மாணவர்களும் இருந்தனர். அவருடன் தாய்ச்சங்கத்தின் பொன்விழா பற்றியும் மலர் வெளியீடுபற்றியும் கலந்துரையாடினோம். மலரைச் சிறப்பாகச் செய்யுங்கள் மலராக்க செலவை எனக் கூறியவர் தொடர்ந்து அதற்காக "எங்கள் கல்லூரி கணனிக் கல்வியில் முன்னேற வேண்டும் அதற்காக எங்கள் கிளை பத்துக் கணனிகளைக் கையளிக்கவுள்ளது. இதற்கான அமைவிடத்தை ஒழுங்குபண்ணுவதற்கான செலவுக்கும் நிதி ஒதுக்கியுள்ளது. பள்ளிச் சூழலில் உள்ள பிள்ளைகள் கணனிப் பயிற்சி பெறவேண்டும் இது வசதி குறைந்த மாணவர்களுக்கு நவீன கல்வி உத்திகளை உடனுக்குடன் பெற வாய்ப்பளிக்கும் சர்வதேச பரீட்சைகளில் கூட அவர்கள் தோற்றலாம். இதற்கான உதவிகளைத் தாய்சங்கத்தின் ஊடாக நாங்கள் செய்வோம்" எனச் சுருக்கமாகத் தங்கள் கிளைச் சங்கத்தின் திட்டங்களை எடுத்துக் கூறினார்.

கணனிக்கல்வி அபிவிருத்திக்கு இவ்வாறு கூறியவர் சொல்லோடு நில்லாது செயலிலும் இறங்கினார். அடுத்த சில தினங்களின் பின் கல்லூரிக்குச் சென்று தாய்ச்சங்க போஷகர் தலைவர், செயலர், கணனிப் பயிற்சியாளர் மற்றும் ப.மா.ச நிர்வாகசபை உறுப்பினர்களைச் சந்தித்தார். தலைவர் திரு.மு சிவலோகநாதனிடம் மலராக்கத்துக்கான செலவீனங்களுக்கென எழுபதினாயிரம் ரூபாவுக்கான காசோலையைக் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கணனிக் கல்விக்கான ஏடம் ஒழுங்கமைக்க நிதி அனுப்புவதாகக் கூறிச் சென்றவர் அதற்கான பணத்தையும் தாய்ச் சங்க வங்கிக்கணக்குக்கு அனுப்பிவைத்துள்ளார். தற்போது கணனிக்கூட அமைப்பு வேலைகள் நூல்நிலைய மேல்மாடியில் நடைபெறுகின்றன. முதற்கட்டமாக ஐந்து கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த ஐந்து கணனிகளும் விரைவில் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே வேளையில் தற்போது யாழ் நகரில் உள்ள லண்டன் கிளையைச் சேர்ந்த திரு.S.சோமசேகரம் ஒரு கணனி அன்பளிப்புச் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் லண்டன் கிளைச் செயலர் ஜீவரட்ணம் அவர்களைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. இக்கிளையை அமைத்து வளர்த்தெடுத்ததில் அவரின் பங்களிப்பு அளப்பரியது. ஆரம்ப காலத்தில் நிதி திரட்டுவதிலும் அதைக் கல்லூரி அபிவிருத்திக்குச் செலவிடவேண்டுமென்பதிலும் அக்கறையோடு பாடுபட்டவர் என்பதை ஒரு சந்தர்ப்பத்தில் பொருளாளர் சிவநேசன் அவர்கள் குறிப்பிட்டார். மலர் வெளியீடு தொடர்பான தகவல் கிடைத்ததும் "மலரைச் சிறப்பாகச் செய்யுங்கள் அதற்கான பணத்தை நாங்கள் தருவோம்" என உறுதியளித்து ஒரு விளம்பரமும், கிளை உறுப்பினர் ஒருவரின் வாழ்த்துக் கவிதையும் அனுப்பி மலராக்கத்தை ஊக்கு வித்தவரும் அவரே எனக் கூறின் மிகையாகாது.

இத்தகையவர்களைக் கொண்ட லண்டன் கிளைச் சங்கத்தின் உதவிக்கரம் தாய்ச் சங்க நடவடிக்கைகளை உயர்த்திவிடும் என்பதில் ஐயமில்லை.

## அமெரிக்காவிலிருந்து......

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அமெரிக் காவில் வசிக்கும் எங்கள் கல்லூரிப் பழைய மாணவர்களான டாக்டர் ச.தெய்வேந்திரா, அவரது சகோதரர் பொறியியலாளர் ச.செல்வேந்திரா ஆகிய இருவரும் யாழ்நகர் வந்தபோது தங்களுக்குக் கல்வியளித்து வளர்த் தெடுத்த வைத்தீஸ்வராவைப் பார்க்க வந்தனர். ப.மா.சங்க உறுப்பினர்கள் அவர்களை வரவேற்றுபசரித்தனர். இச்சந்தர்ப்பத்தில் கல்லூரியின் அபிவிருத்தி பற்றி உறுப்பினர்களோடு உரையாடினார்கள். டாக்டர் தெங்வேந்திரா பேசும் போது கல்லூரியில் தான் கற்ற நாட்களை நினைவு கூர்ந்து தனது ஆங்கிலக்கல்விக்கு உப அதிபர் அமரர் வைரமுத்து அவர்கள் எடுத்த முயற்சியைக் கூறுகையில் கண்கலங்கி கண்ணீர் மல்கக் கூறி சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தின் அவசி யத்தை வலியுறுத்தி தாங்கள் கஷ்டப்பட்டது போல் இன்றைய மாணவர்கள் கஷ்டப்படக் கூடாது எனவும் கீழ் வகுப்பிலேயே ஆங்கிலம் சிறப்பாகப் போதிக்கப்பட வேண்டும். இவ்வாங்கில போதனைக்கு ஒழுங்கு செய்யும் பட்சத்தில் அதற்கான நிதியுதவியை வழங்கு வதாக உறுதியளித்தார்.

இவ்விரு சகோதரர்களும் ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை ப.மா.சங்கத்துக்கு அன்றைய தினமே வழங்கி அதில் ஐம்பதி னாயிரம் ரூபாவைப் புலமைப்பரிசிலுக்கு ஒதுக்கு மாறும் கூறினர்.

இச்சகோதரர்களின் விருப்பப்படி கடந்த விஜயதசமியன்று ஆண்டு ஆறு மாணவர்களுக்கு மாலைநேர பிரத்தியேக ஆங்கில போதனை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. ஆங்கில போதனை ஆசிரியருக்கான வேதனத்தை டாக்டர் ச.தெய்வேந்திரா, ச.செல்வேந்திரா சகோதரர்கள் பொறுப்பேற்று அமெரிக்காவிலிருந்து நிதியு தவியுள்ளனர்.

இவ்வாறு கடல்கடந்து வாழும் வைத்தீஸ்வராவின் பழைய மாணவர்கள், நன்றி மறவா நல்லவர்களாக அறங்களுக்கெல்லாம் தலையாயதான புண்ணியங் கோடிதரும் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் அறப்பணிக்குத் தம் உழைப்பின் ஒரு பகுதியை அறக்கொடையாக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழுகிறார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வைத்தீஸ்வராவின் இப்புதல்வர்களின் அறப்பணி சிறக்கவும் அவர் தம் வாழ்வு வளம் பெறவும் வைத்தீஸ்வரப் பெருமான் அருள்புரிவாராக!

மலர் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50

ஆண்டுகளில்

பழைய மாணவர் பணியும்

கல்லூரி நிகழ்வுகளில்

அவர்தம்

பங்களிப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது வளர்ச்சிப் பாதையில் ......

**திரு. செ. சுப்பிரமணியம் J.P.**
பழைய மாணவன்
ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்.

பாடசாலைகளின் வளர்ச்சியில் முக்கிய பங்களிக்கும் ஸ்தாபனம் பழைய மாணவ மன்றம். அந்தவகையில் கல்லூரியின் நலம் கருதி பல்வேறு வசதிகள் செய்வதற்கும் ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உறுப்பினரிடையே நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கும் குறிகோள்களுடன் 1952ம் ஆண்டு பழைய மாணவன் திரு.W.S.செந்தில்நாதன் அவர்களால் வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் அவர் தனது ஆசிரியத்தொழிலை இங்கு ஆரம்பித்திருந்தார். இவர் ஒரு B.A.பட்டதாரி. அத்துடன் கணிதம், கர்நாடக சங்கீதம், வான சாஸ்திரம் முதலிய வற்றில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறார். இது மட்டுமின்றி நியாயதுரந்தராகவும் நியாயவாதியாகவும் பிரித்தானியாவில் பட்டம் பெற்று தற்பொழுது இலங்கையில் சட்டதரணியாக பணிபுரிகின்றார்.

## யாப்பு

சங்கத்தின் ஆரம்பகால செயலராக பல வருடங்கள் சேவையாற்றும் பொழுது பத்து அம்சங்களைக் கொண்ட சங்க யாப்பையும் உண்டாக்கினார். வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டப கட்டிட நிதிக்காக பரிசு சீட்டிழுப்பும் களியாட்ட விழாவும் 1953ம் ஆண்டு நடாத்தப்பட்டது. இதில் ப.மா.ச.மாணவர்கள் பாரிய பங்களிப்புகள் செய்தனர். தற்போதைய தண்ணீர் தாங்கியையும் நூல்நிலைய கட்டிடத்தையும் பழைய மாணவரான L.K.S. நகை மாளிகை ஸ்தாபனத்தினர் ஆக்கி கொடுத்தனர்.

1952 தொடக்கம் கீழ்க்கண்ட அதிபர்கள் சங்கத்தின் பதவிவழி தலைவர்களாகவிருந்தனர்.

1. திரு. ச. அம்பிகைபாகன் B.A.
2. திரு. S. சிவபாதசுந்தரம் M.A.(Cantab)
3. திரு. A. நடராசா B.A.,B.Sc.,Econ.(Lond)
4. திரு. S. B.பாலசுப்பிரமணியம் B.A.Econ.
5. திரு. C. குணபாலசிங்கம் B.A.Dip.in.Ed.
6. திரு. S. சிவசரவணபவன் M.A.
7. திரு. T. சந்தோசம் B.A.Dip. in Ed.

திரு. செந்தில்நாதன் அவர்கள் ஓய்வுபெற்ற பின் பல காலம் சங்கத்தில் ஒரு பெரிய தொய்வு ஏற்பட்டது. அப்போதைய அங்கத்தவர்களான ஆசிரியர்கள் திருவாளர்கள் புத்திரசிங்கம், பன்னீர்ச்செல்வம், ராஜதுரை முதலியோரால் மதியபோசன ஒன்றுகூடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிலையில் பழைய மாணவர்களான திருவாளர்கள் சந்தோசம், ஜெகதீசன், நடேஸ்வரன், மயில்வாகனம் முதலியோரால் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்றது. இருந்தும் அதிபர் திரு.நடராசா அவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அது மட்டுமல்லாமல் தூர திருஷ்டியற்ற உறுப்பினரின் துணையுடன் ஆரம்பப் பாடசாலையான விவேகானந்த வித்தியாலயம் முடப்பட்டது.

ஆனால் அப்பொழுது சங்கத்தின் பொருளாளராகவிருந்த திரு.M.S.றகீம் அவர்களது தனி முயற்சியால் யாழ்.பா.உ. திரு.C.X.மாட்டின் அவர்களின் உதவியைப் பெற்று (மாட்டீன் புளக்) வைரமுத்து மண்டபம் மேல்மாடியுடன் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் திரு.S.B. பாலசுப்பிரமணியம் அவர்களது தலைமையில் ஓர் புதிய பரிமாணம் பிறந்தது. இந்த காலகட்டத்தில் திரு.மயில்வாகனம் அவர்கள் பொருளாளராகவும் பின் இணைச் செயலாளராகவும் சேவையாற்றினார். ஆயுட்கால அங்கத்துவத்தை தொடங்கி அந்த வருடம் கணிசமான அங்கத்தவர்களை சேர்த்தனர். ஒலிபெருக்கிச் சாதனங்கள், அலுமாரி, மற்றும் உபகரணங்கள், மேசைவிரிப்புகள், தண்ணீர் குவளைகள் (E.Silva) விளையாட்டு உபகரணங் கள் உடமையாக்கப்பட்டன. பழைய மாணவ முஸ்லிம் சகோதரர்கள் ஆயுட்கால அங்கத் தவராக சேர்ந்ததுடன் பலர் பண அன்பளிப்பு களும் செய்தனர். இச்சேகரிப்புகளும் மிக முக்கிய பங்களித்த இந்த இருவரையும் என்றும ப.மா.ம. நினைவுகூரும். தொடர்ந்து திரு.C. குணபாலசிங்கம் அவர்களின் தலைமையில் மேற் கூறப்பட்ட விடயங்களுக்கு சிகரம் வைத்தாற் போல் ஆண்டு மதியபோசன விருந்தில் இக்கல்லூரி யில் 15 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவை யாற்றிய ஆசிரியர்கள் மாலையணிவித்து கேடயங் கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதே காலத்தில் 32 அம்சங்களைக் கொண்டதும், முன்னைய யாப்பை உள் அடக்கியதுமான ப.மா. மன்ற புதிய யாப்பு செயலாளர் திரு.செ. சுப்பிரமணியம் அவர்களால் உண்டாக்கப்பட்டு பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த யாப்பு விதிமுறைகளையும், ஆயுள் அங்கத்துவ முறையையும் வேறு பல பாடசாலைகளின் ப.மா.மன்றங்களால் பின்பற்றப்படுகின்றன.

இவ்வேளையில் கல்லூரி அதிபர் திரு.குணபாலசிங்கம் அவர்கள் திடீர் சுகவீன முற்றார். அதனோடு நிர்வாகப் பிரச்சினைகள் தலைதூக்கின. இக்காலகட்டத்தில் பள்ளியின் விஞ்ஞானபீடமும் மூடப்பட்டது. இந்த நிலையில் ப.மா.மன்றத்தினால் திரு.S.சிவசரவணபவன் அவர் கள் தலைவராகக் கொண்டுவரப்பட்டார். இவரது நிர்வாகத்திற்கு வேண்டிய ஒத்துழைப்புகள் அளிக் கப்பட்டும், அரசியல் சூழ்நிலைகள் மாற்றத்தி னாலும் கல்லூரிக்கு வள இழப்புக்கள் ஏற்பட்டன. அப்படியிருந்தும் கல்லூரி நிகழ்ச்சிகளை தடங் கல்களுடனும் அதிபர் நிறைவேற்றினார். இது வரை தொடர்ந்து எமது பழைய மாணவனும் ஆசிரியருமான திரு.சந்தோசம் அதிபராகவும் மன்றத்தின் பதவிவழி தலைவராகவும் வந்தார். இந்த காலகட்டத்தில் அவரது தலைமையில் மன்றத்தின் யாப்பில் பாரிய மாற்றங்கள் நடை பெற்றன. இதன்படி பதவிவழித் தலைவர், ஆயுட்கால அங்கத்தவரில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் கல்லூரியின் ஆசிரியர், அங்கத்த வரின் வாழ்க்கைத் துணைவர் ஆகியோர் அவர்களது மன்ற உறுப்புரிமையை இழந்தனர். இந்த பாரியமாற்றம் மன்றத்தை வீழ்ச்சியுறச் செய்ததோடு கல்லூரி நிர்வாகத்திற்கும் மன்றத் திற்கும் உறவை விரிசலடையச் செய்துவிட்டது என்பது வேதனையளிக்கின்றது.

இந்த யாப்பு மாற்றத்தின் பின் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் பெயர் கீழ்வருமாறு

திரு. T. லோகநாதன்

திரு. V. சிறிசக்திவேல்

திரு. S. சுப்பிரமணியம்

திரு. M. சிவலோகநாதன்.

1. காலம்சென்ற ப.மா. திரு. திருநாவுக்கரசு அவர்கள் மன்ற காரியாலய அறைக்கு சுவர்கட்டி வர்ணம் பூசிமெருகூட்டி உதவி செய்தவராவார்.
2. ப.மாணவர் திருவாளர்கள் T.கனகராசா, L.பக்கீர்சாமி இருவரும் மன்றத்திற்கு அவ்வப் போது பண உதவியும் கல்லூரிக்கு பரிசளிப் புப் பொருட்கள் வெற்றிக்கிண்ணம், கேடயங் கள் வழங்கியுள்ளனர்.
3. ப.மா.திரு.க.ஜெயம் அவர்கள் மாணவர் குடிநீர் வசதிக்காக விசை மோட்டார் ஒன்றையும் நீர்க்குழாய் வசதிகளையும் செய்து கொடுத் துள்ளார்.
4. தற்போது பாவனையிலுள்ள கல்லூரியின் ஒலிபெருக்கிச் சாதனங்கள் ப.மாணவன் திரு. T.லோகநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.
5. ப.மாணவர்கள் திரு.M.ஜெகதீசன், திருமதி புஷ்பராணி ஜெயதீசன் ஆகிய இருவரும் பண உதவி, பொருளுதவி, சரீர உதவி, வாகன உதவி முதலியவற்றை அன்று முதல் இன்றுவரை கல்லூரிக்கும் மன்றத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை மனத்துடன் செய்து வருகின்றனர். உபதலைவர்களாகவும், இணைக் காரியதரிசிகளாகவும், பொருளாளராகவும் உபபொருளாளராகவும், மன்றத்தின் நலனுக்கு பணி செய்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| திரு. S. செந்தில்நாதன் | திரு. S. பன்னீர்ச்செல்வம் | காலஞ்சென்ற திரு.V. ரட்ணவேற்பிள்ளை |
| திரு. T. புத்திரசிங்கம் | திரு. S. ராஜதுரை | திரு. T. சந்தோசம் |
| திரு. M. ஜெகதீசன் | திரு. T. லோகநாதன் | திரு. S. நடேஸ்வரன் |
| திரு. S. சுப்பிரமணியம் | திரு. M. மயில்வாகனம் | திரு. L. பக்கீர்சாமி |
| திரு. விநாயகமூர்த்தி | திரு. வேல்சாமி | திரு. S. தியாகராசா |
| திரு. பசுபதி | திருமதி S. பொன்னுச்சாமி | திரு. C. அருணாசலம் |
| திரு. T. கனகராசா | திரு. K.V. ஜெயலிங்கநாதன் | திரு. S. ஜெகதீஸ்வரராசா |
| திரு. C.S. ஜீவரெத்தினம் | திரு. M. சுரேந்திரா | திரு. K. சிவாநந்தம் |
| திரு. K. ஜெயம் | திரு. S. இந்திரகுமார் | திரு. வெங்கடசாமி |
| திரு. P. காண்டீபன் | திரு. R. நாகேந்திரன் | திரு. கேதீஸ்வரன் |
| திரு. T. விஸ்வகுமார். | | |

(எல்லா ஆவணங்களும் கிடைக்காததால் சிலரின் பெயர் தவறியிருக்கலாம்)

இப்பொழுது கொழும்பில் இருக்கும் மிக மூத்த அங்கத்தவர்கள்

1. திரு.S.செந்தில்நாதன்
2. திரு.C.அருணாசலம்
3. திரு.Sதியாராசா
4. திரு.C.ராஜதுரை

இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கும் மூத்த அங்கத்தவர்கள்

1. திரு.M. மயில்வாகனம்
2. திரு.K.V. ஜெயலிங்கநாதன்

**கொடைவள்ளல்கள்:-**

கீழ்கூறப்பட்ட கொடைவள்ளல்கள் அன்பளிப்பு செய்த பணத்தை மன்றத்தின் நிலையான வைப்பிலிட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டியில் அவர்கள் விரும்பிய சிறப்பு சித்திபெற்றவர்களுக்கு வருடாவருடம் யாப்புக்கமைய வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. திருமதி கமலாசனி சிவபாதம் | ஆண்டு 6 திறமைச்சித்தி |
| 2. திரு. செல்லத்துரை சுப்பிரமணியம் | க.பொ.த.சா/த.கணிதம் சிறப்பு |
| 3. திருமதி. பாக்கியலஷ்மி சுப்பிரமணியம் | க.பொ.த.சா/த.விஞ்ஞானம் சிறப்பு |
| 4. திருமதி. குணமணிதேவி ஷண்முகடாஸ் | க.பொ.த.உ/த. சிறப்பு சித்தி |
| 5. திருமதி. செல்வராஜேஸ்வரி பொன்னுச்சாமி | க.பொ.த.சா/த. சிறப்பு சித்தி |
| 6. டாக்டர் S. தேவேந்திரா | ஆண்டு 6, 7, 8, 9 ஆங்கிலம் சிறப்பு சித்தி |
| 7. திரு. S. செல்வேந்திரா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ப.மா.ம. வருடாவருடம் நடாத்த வேண்டிய, கல்லூரிக்கு செய்யவேண்டிய தொழிற்பாடு அனைத்தையும் தவறாது வருடாவருடம் ஒழுங்காக செய்து கொண்டிருக்கின்றது.

தற்போதைய அதிபர் திரு.N.வன்னியசிங்கம் B.Sc.Dip.in.Ed. அவர்கள் 1980களில் ஒரு சிறந்த கணக்கியல் ஆசிரியராக திகழ்ந்தவர். அப்பொழுது இவரது திறமையை எமது கல்லூரி பெறுவதற்கு ப.மா.ம. முயற்சியெடுத்து 1989ல் அவரை இங்கு வரவழைத்தது. அன்று முதல் சிறந்த ஆசிரியராக கடமையாற்றி பின் உப அதிபராக கடமைசெய்தவர். திரு. சந்தோசம் அதிபர் மாற்றலாகிய பின் அதிபராக கடமையாற்றுகின்றார். இடப்பெயர்விற்கு பின் அதிபராக வந்த இவர் கல்லூரியை கட்டிட ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் முன்னேற்ற பல முயற்சிகள் எடுத்தார். ப.மா.மன்றத்திற்கு 10'x 20' கொண்ட ஓர் அறையையும் மேசை விரிப்புக்களையும் தந்துதவியதை மன்றம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும்.

இரு வருடத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய கிளையிடம் முன் சுவர் கட்டவும் பெயர் வளைவு வைக்கவும் பல்கலைக்கழகம் புகுந்தவர்களுக்கு பரிசில் கொடுப்பதற்கும் ரூபா 170,000/= அதிபர் அவர்கள் காசாக பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிக்கு ஓர் விளையாட்டு மைதானம் இல்லையென்பது ப.மா.மன்றத்தின் ஆதங்கம். கல்லூரியின் கிழக்கு பக்க காணிகளை சுவீகரிக்கவோ அல்லது விலைக்கு வேண்டும் சந்தர்ப்பத்தில் வெளியிலுள்ள பல பழைய மாணவர்கள் பண உதவிசெய்வதாக கொள்கையளவில் கூறியுள்ளனர்.

மன்ற நிர்வாகத்தர் சிலரின் கூட்டு முயற்சியால் தத்தமது சொந்தப்பணத்தில் கல்லூரி முன்பக்கம் இரு தடவைகளும் அதிபர், உப அதிபர் செயலகங்களும், வாசிகசாலை மேல்வீடு முதலியன வர்ணம் பூசப்பட்டும், ப.மா.மன்ற செயலகத்திற்கு வேண்டிய கதிரைகளும் பெறப்பட்டுள்ளது. இவ் வேலைகள் பூர்த்தியடையச் செய்ததில் செயலர் திரு.காண்டீபன் அவர்களும் உபபொருளாளர் M.சுரேந்திரா, பொருளாளர் திரு.S.சிவக்குமார் அவர்களும் மிக முக்கியமாக உழைத்தவர்களாவர்.

மேலும் விவேகானந்த மண்டபம் முழுவதற்கும், வாசிகசாலைக்கும் புதிய மின்சார இணைப்புகள், மின் விளக்குகள், மின்விசிறிகள் பொருத்தப்படுவதற்கு பழைய மாணவர்கள் சிலர் முன்வந்துள்ளனர். அவர்களில் கூடிய நிதிப் பங்களிப்பு செய்பவர்கள் மூவர். திருமதி குணமணிதேவி ஷண்முகடாஸ், திரு.ப.ஜெயலிங்க நாதன், திரு.T. லோகநாதன் ஆவர்.

பழைய மாணவர்களான அமெரிக்காவில் வசித்து வரும் டாக்டர். S.தெய்வேந்திரா, செல்வேந்திரா சகோதரர்கள் அனுசரணையில் கல்லூரியின் ஆறாம் ஆண்டு மாணவர்க்கு சென்ற விஜயதசமியன்று (2003.10.05) இலவசமாக ஆங்கிலம் கற்பித்தல் ப.மா.மன்றத்தால் ஆரம்பித்து நடாத்தப்படுகின்றது.

ப.மா.மன்றம் வளரவும் அதன் சேவையால் கல்லூரியும் அங்கத்தவரும் மேம்பட உலகெங்குமுள்ள பழைய மாணவரின் அறிவுரைகளும், உதவிகளும், வாழ்த்துக்களும் இம்மன்ற செயற்பாடுகளை மேலும் ஒளிரச் செய்யும்.

**வாழ்க வைத்தீஸ்வரா ப.மா.ம.!**

**கல்வியின் சாரம்**

**கல்வியின் சாரம் மன ஒருமைப்பாட்டிலேயே உள்ளது**
**வெறுமனே பல விஷயங்களைப் படிப்பதில் அல்ல.**
**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களைச் சந்தித்த வேளையில்..........

தம் உடல் உள உழைப்பால் செயற்கரிய செயல்களைச் செய்து சங்கத்தையும் கல்லூரியையும் வளரச் செய்த ப. மா.சங்க அங்கத்தவர்கள் பலர். அவர்கள் எல்லோரையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காவிடினும் ஒரு சிலரை யாழ். மண்ணில் சந்தித்த போது அவர்கள் பணிபற்றிக் கண்டதையும் அறிந்ததையும் தருகிறேன்.



தற்போது குடாநாட்டில் உள்ள ப.மா.சங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் திரு.N. மயில்வாகனம் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர். அடக்கமும் அமைதியும் அவரிடம் குடிகொண்டிருந்தன. ப. மா. ச பற்றிக் கேட்ட போது இங்கு ஏனையோர் குறிப்பிடாத சில விடயங்களைக் குறிப்பிட்டார். "ப. மா. ச ஆரம்பித்தபோது நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன், எனினும் சங்க நடவடிக்கைகளை என்னால் அவதானிக்க முடிந்தது. அப்போது மன்றச் செயற்பாடுகளில் திரு. ந. ஆறுமுகம் பிரபல நகை வர்த்தகர் (யப்பான்), திரு. ரி. நாகலிங்கம் அவரது மகன் ரகுநாதன், திரு. எ. நல்லதம்பி, டாக்டர் ஷண்முகரட்ணம் போன்ற பல பெரியவர்கள் உற்சாகமாக ஈடுபட்டுள்ளதை என்னால் காண முடிந்தது.

1953ல் ப.மா.ச நடாத்திய களியாட்ட விழா கல்லூரிப் பழைய மாணவர் செனட்டர் அஸீனால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு மேற்கூறிய பழைய மாணவர்களோடு இன்னும் பலரும் உற்சாகமாக உழைத்தனர். இதில் திரட்டிய பணம் இன்றைய விவேகானந்தா மண்டபமாக உருவெடுத்துள்ளது என்றவரிடம் அவரது காலத்தில் அவரது பங்களிப்பு பற்றிக் கேட்ட போது "சுருக்கமாகச் சொல்லப் போனால் அமரர் N.பொன்னுத்துரையுடன் இணைந்து ஆயுட் கால அங்கத்துவத்தை ஆரம்பித்து வைத்தோம். புலமைப்பரிசில் திட்டமும் ஒரு சிலரால் அப்போதே ஆரம்பிக்கப்பட்டது. நான் பொருளாளராகக் கடமையாற்றியபோது 1983ல் வங்கியில் முதல் முதல் நிரந்தர வைப்புக் கணக்கு ஆரம்பித்தேன். அப்போது ரூபா 50,000/= வைப்பிலிடப்பட்டது. அவ்வாண்டு சங்கம் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வுபெற்ற 15 ஆசிரியர்களுக்கு பாராட்டி விழாவெடுத்துக் கௌரவித்தது. அதை வெகுசிறப்பாகச் செய்துமுடித்தோம். மேலும் பவளவிழா மற்றும் சங்க நடவடிக்கைகளுக்கு என்னாலான பங்களிப்பைச் செய்யமுடிந்தது. இச்சந்தர்ப்பத்தில் அதிபர் S.P.பாலசுப்பிரமணியம் அவர்களைக் குறிப்பிடாதிருக்க முடியாது. மன்ற வளர்ச்சிக்கு அவர் அளித்த ஊக்கமும் உதவியும் வேறு எவராலும் வழங்கப்படவில்லை என்றே கூறலாம்" – என்றார்.

திரு. மயில்வாகனம் தனது உடல் உழைப்புப் பற்றிக் கூறவில்லையெனினும் அவரை அறிந்தவர்கள் ப.மா. சங்கத்துக்கு அவரின் உழைப்பு மகத்தானது எனத் தெரிவித்தனர். மதியபோசன விருந்து, கல்லூரிக்கு வர்ணம் பூசியது, சில கட்டிட திருத்தவேலைகள் ஆகியவற்றில் தானும் ஒருவராக நின்று சிரமதானம் செய்தமை குறிப்பிடத்தக்க சிலவாகும்.



அடுத்து குடாநாட்டில் உள்ள மற்றுமொரு சங்க மூத்த உறுப்பினர் திரு. மு.ஜெயலிங்கநாதன் ஆவர். இவர் தனித்துவமான ஒருவர் தோற்றம், தொனி, செயற்பாடுகள் யாவும் இவரது தனித்துவத்தை வெளிப்படுத்தும். மது, மாமிசம் புசிக்காதவர். ஆலயத் தொண்டு அவரது மூச்சு. யாழ் மாநகர சபைப் பதிவேட்டுக் காப்பாளராக இருந்து ஓய்வுபெற்றவர். எதையும் வெளிப்படையாகவே பேசும் சுபாவம். பட்டதைப் பட்டென்றும் கொஞ்சம் காரமாகவும் சொல்வதால் இவரைப் புரிந்து கொள்ளாதவர்கள் அவரைச் சிலவேளைகளில் தவறாகப் புரிந்து கொள்வதுமுண்டு. ஆனால் அவர் நல்லதொரு செயல்வீரர். கல்லூரியில் மிகுந்த பற்றுக்கொண்டவர். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் சிவன் உற்சவச் சப்பரத் திருவிழாவைக் கல்லூரிப் பழைய மாணவர்களுக்காக்கி வைத்தீஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் திருவிழா - எனத் தானே முன்னின்று செய்து வருவது தன் கல்லூரியின் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் பொலிவெய்த வேண்டும் என்ற அவரது தன்னலமற்ற சுபாவத்தை வெளிக் கொணர்கிறது.

திரு. ஜெயலிங்கநாதன் தொட்ட வேலைகள் துலங்கும். எந்தக் காரியத்தையும் முன்னின்று செய்யத் தயங்குவதில்லை. தட்டிக் கழிப்பதுமில்லை. சுலபமாகச் செய்வதற்கும் மற்றவர்களுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் சாதுர்யமும் அவரிடம் உண்டென்பதைப் பல தடவைகளில் கண்கூடாக நான் கண்டதுண்டு.

ப.மா.ச மதியபோசன விருந்து ஆயத்தங்கள் அவர் பொறுப்பே. திட்டம் போட்டுச் சிறப்பாக தனக்கு அனுசரணையானவர்களோடு செய்து முடிப்பார்.

பொன்விழாவையொட்டி கல்லூரி விவேகானந்த மண்டபம், நூல் நிலையம், ப.மா. சங்க காரியாலயம் இவைகளுக்கு வர்ணம் பூசப்பட்டு மின் இணைப்பு வேலைகள் ப.மா. சங்கத்தால் செய்யப்பட்டுள்ளன. இவ் வேலைகளில் மேற்படி கட்டடங்களின் மின் இணைப்பு வேலைகளைப் பூரணமாகச் செய்ய வேண்டும் என முடிவெடுத்து அவ்வேலையைப் பொறுப்பேற்று அதற்கு வேண்டிய காற்றாடிகள், மின்குமிழ்கள், பைப், வயர்கள் சகலவற்றையும் தானே முன்னின்று கொள்வனவு செய்து மண்டபங்களை ஒளியேற்றியமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.





அடுத்து வருபவர் திருமதி. ராணி ஜெகதீசன். இவரது கணவர் திரு. ஜெகதீசனும் ப. மா. ச உறுப்பினர். இருவரும் கல்லூரிக்குச் செய்த சேவை மகத்தானது. வண்ணார்பண்ணையில் திசா ரோய்ஸ் நிறுவனம் என்றால் அன்று யாரும் அறியாதிருக்க முடியாது. பட்டதாரியான ஜெகதீசன் இத்தொழிலகத்தை ஆரம்பித்துத் தன் பாரியாருடன் சிறப்பாக நடாத்தியவர். கல்லூரிக்குத் தங்கள் நிறுவனத்தால் என்ன உதவிகள் செய்ய முடியுமோ அத்தனை உதவிகளையும் செய்யத் தயங்கமாட்டார்கள். திருமதி. ராணி ஜெகதீசன் சங்க நிர்வாகக் கூட்டத்துக்குத் தவறாது சமூகமளிப்பவர். எந்நேரமும் சிரித்த முகம் பரந்த உள்ளம், காரியாலயத்துக்கு மணிக்கூடு தேவை என உறுப்பினர் ஒருவர் கூற 'அதை நான் வாங்கித் தருகிறேன்'. மின்குமிழ்கள் வேண்டும் என்றவுடன் 'நானும் வாங்கித் தருகிறேன்' இப்படியாக கேட்டதற்கெல்லாம் தானும் பங்களிப்புச் செய்ய முன்வரும் இவர் எல்லாருக்கும் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய ஒரு நல்லவர். எல்லாவற்றுக்கும் மேலாக வருடா வருடம் இடம்பெறும் மதியபோசன விருந்துகளின் தயாரிப்பில் அவரது கைங்கரியம் சொல்லத் தேவையில்லை. சிலவேளைகளில் அவர் வீட்டிலிருந்தே தயாரிக்கப்பட்டு கல்லூரிக்கு எடுத்து வரப்படும். விருந்தின்போது எல்லோருடனும் இருந்து அவர் பங்குபற்றியதை நான் ஒருபோதும் காணவில்லை. இவரும் இன்னும் சில உறுப்பினர்களும் கடைசியாகவே உண்பர். இவரின் விருந்தோம்பும் பண்பு பாராட்டுதற்குரியது.



அடுத்து என்கண் முன் தோன்றுபவர் திரு. சுரேந்திரன். அவர்களின் குடும்பமே வித்தியாலய மாணவர்கள். தனது தாயார் இங்கு சுவாமி விபுலானந்தரிடம் கற்றவர் என்பதைப் பெருமையாகக் கூறிக் கொள்வார். அவரது வர்த்தக நிலையம் கல்லூரிக்கு முன்னால் அமைந்துள்ளது. ப.மா.சங்கம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலும் தன் பங்களிப்பை சிறப்பாகச் செய்பவர். இவரது வர்த்தக நிலையம் ப.மா.ச உறுப்பினரின் தகவல் நிலையம் என்றால் மிகையாகாது. சகல விடயங்களையும் உறுப்பினர்கள் நாங்கள் அவரிடம் கூறிவிட்டுச் செல்வோம். அவர் சேரவேண்டியவர்களுக்குச் சேர்ப்பிப்பார். முக்கியமான விடயங்களை சேகரித்து வைத்து கூட்டங்களின்போது தெரிவிப்பார். ப.மா. சங்கம் முக்கிய இடம் வகித்துச் செயல்பட்ட கல்லூரிப் பவளவிழாவின் போது இவரது வீடே ப.மா.ச காரியாலயம் போல் இயங்கியது என திரு.ஜெயலிங்கநாதன் குறிப்பிட்டார். அந்தளவுக்கு இவரது ஒத்துழைப்புச் சிறப்பிடம் பெற்றது. தற்போதய அதிபர் திரு. ந. வன்னியசிங்கம் ப.மா. சங்கத்துக்கு காரியாலயம் வழங்கி ப.மா.சங்க நடவடிக்கைகள சிறப்புறத் திட்டமிடப்பட உதவி செய்துள்ளார். இச்சந்தர்ப்பத்தில் அவரின் இந்த உதவி பாராட்டப்பட வேண்டியது. திரு. சுரேந்திரன், திரு. மயில்வாகனம் அவர்களுடன் இணைந்து அவர் மேற்கொண்ட சிரமதான வேலைகளிலெல்லாம் உடன் நின்று உழைத்தவர் என்பதை திரு. மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியவற்றில் இருந்து அறிய முடிந்தது. எல்லா வற்றுக்கும் மேலாக பாடசாலை நிர்வாகம் - ப.மா. சங்கம் - மற்றும் வெளிநாடுகளிலுள்ள ப.மா. சங்கக் கிளைகள் யாவற்றுக்கும் ஒரு இணைப்புப்பாலமாக உள்ளார் என்பதை அவரது நடவடிக்கைகள் மூலம் அறிந்து கொள்ளளலாம்.



அடுத்து தயா அச்சக இயக்குனர் திரு. தயாபரன் ப.மா. சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் இளம் தொழில் அதிபரான இவரின் உதவியும் குறிப்பிடத்தக்கது. சங்கத்துக்குத் தேவையான அச்சு வேலைகள் யாவும் இவரது ஆக்கப்படைப்புகளே. சில வேலைகளை இலவசமாகவே செய்து கொடுப்பார். இன்று உங்கள் கையில் தவழும் பொன்விழா மலரை அழகுறத் தந்தவர் இவரே. சலிக்காது எப்படி எப்படியெல்லாம் மலர் அமைய வேண்டுமென்று நாம் விரும்பினோமே அப்படி அப்படியெல்லாம் அமைத்துத் தந்தமை பாராட்டிற் குரியது. நல்லூர் அரிமாக்கழகம் - பொருளாளர், சைவபரிபாலனசபை - பொருளாளர், கோம்பயன் மணல் மயானம் - உபதலைவர், நாவலர் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் - செயலாளர், ஸ்ரீகற்பக விநாயகர் சைவ அபிவிருத்திக்கழகம் நிர்வாக உறுப்பினர் போன்ற பல அமைப்புக்களிலும் இத்தகைய பொறுப்பான பதவிகளில் இருக்கும் திரு. தயாபரன் சங்க வளர்ச்சிக்கு அவ்வப்போது கூறும் ஆலோசனைகள் பயன்மிக்கவை.





மேலும் கடந்த காலங்களில் ப. மா. ச செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவர்களில் தற்போது குடாநாட்டில் உள்ளவர்களை இங்கு குறிப்பிடும் வேளையில் உமா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு.S.இந்திரன் அவரது சகோதரர் திரு.S.ஜெகதீஸ்வரராஜாவும் கட்டாயம் குறிப்பிடப் பட வேண்டியவர்களாவர். இவர்கள் பற்றி தற்போதைய ப.மா.ச தலைவர் குறிப்பிடுகையில் இவர்கள் தற்போதைய சூழ்நிலையில் அவகாசம் கிடைக்காத காரணத்தால் இவர்களின செயற் பாடு சற்றுக் குறைவாக இருப்பினும் ப.மா. சங்கத்தை பொறுப்பான பதவிகளில் இருந்து பல வழிகளாலும் வளர்த்தெடுத்த பெருமை கல்லூரி வளர்ச்சிக்கு மேற்கொண்ட சங்கச் செயற்பாடு களில் எல்லாம் முன்னின்று உழைத்தமை குறிப்பிடத்தக்கது எனக் குறிப்பிட்டார்.

திரு. இந்திரன் அவர்கள் இன்றைய கால கட்டத்திலும் சங்கம் மேற்கொள்ளும் பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்குத் தன் பங்களிப்பைச் செலுத்துவதில் இருந்து பின்வாங்குவதில்லை. சிவன் ஆலய உற்சவம், ப.மா.ச ஒன்றுகூடல் போன்றவற்றில் இவரது செயல்பாடுகளை எவரும் வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருக்கும்.

இவர்களைப் போல் 50 ஆண்டு காலப் பகுதியில் ப.மா.சங்க வளர்ச்சிக்கும் அது மேற்கொண்ட கல்லூரித்தாயின் முன்னேற்றச் செயற்பாடுகளுக்கும் பங்காளிகளாகி உழைத்த பலர் தலைநகரிலும் உலகின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு ப.மா.சங்கம் மேற்கொண்ட செயற்பாடுகளில் எல்லாம் அயராது உழைத்த உழைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் பணி மேன்மேலும், சிறக்க இறையருள் துணை நிற்கும். இவர்களைப் போல் உழைத்தவர் பலர் தலைநகரிலும் கடல்கடந்தும் உள்ளனர். அவர்கள் பணிகளைத் தொட்டால் கட்டுரை விரியும். எனவே எம்முன் நாளாந்தம் கண்டவர்தம் பணியையே இங்கு குறிப்பிடக் கூடியதாகவுள்ளது.

**~ மலர் ஆசிரியர் ~**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



High Quality
Ornate Styling
Modern Technology
Expert Handling
Prompt Action
Reasonable Cost
Improved Imposing
Natural Colouring
Task Worthy

# "HOME PRINT"

All Type of Computer Printing Work
Computer Assembling & Repairing
(தமிழும் ஆங்கிலமும்)
Tamil & English - Typing & Setting



6, School Lane,
Kokkuvil East,
Kokkuvil.
Tel: 0777 049728

தூயா அச்சகம்
கொம்பியூட்டர்
ஓவ்(f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவேகானந்த மண்டபத்துள் சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரரோடு தேவார முதலிகளும் இராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகிய ஞானிகளும் அமர்ந்திருக்கும் தெய்வீக அரங்கு.



பழைய மாணவர் மன்ற இராப்போசன விருந்தில் (1960ஆம் ஆண்டு) பிரதம விருந்தினர் திரு. மாணிக்க இடைக்காடர் உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்க விருந்து – 1960

வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்துபசார வைபவம் 19.10.60 சனிக்கிழமை இரவு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்தில் திரு. மாணிக்க இடைக்காடர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கல்லூரிக்கு வாழ்த்துக்கூறிய திரு. இடைக்காடர் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

இலங்கையில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கு வாழும் தமிழர்களிடத்தில் ஒருவித விரக்திமனப்பான்மை நிலவுவதைக் காணலாம்.

தமிழர்கள் இன்று நம்பிக்கையிழந்தவர்களாயும் ஒருவித விரக்தியுடனும் வாழ்கின்றார்கள். இவர்கள் இந்தியாவில் வாழும் பிராமணர்களின் வாழ்க்கையைச் சற்று நோக்க வேண்டும். இந்தியாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. காலத்துக்குக்காலம் ஏற்பட்ட மாறுதல்களுக்கேற்பத் தங்களைத் தயார் செய்துகொண்டார்கள். அவர்கள் சிந்தித்துச் செயலாற்றினார்கள். இதனால் இன்று நிர்வாகத் துறையில் அவர்கள் மேம்பட்டு விளங்குகிறார்கள். இந்தியர்கள் வர்த்தகத்துறையில் ஈடுபடமுன்னரே இந்திய பிராமணர்கள் வர்த்தகத்திலீடுபட்டார்கள். இன்று அதில் முன்னணியில் நிற்கின்றனர். போக்குவரத்து சேவையிலீடுபட்டார்கள். இன்று சிறந்த பஸ் போக்குவரத்து சேவையை அவர்கள் தாம் நடத்துகிறார்கள்.

யூதர்கள் மற்றொரு உதாரணம். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக தங்களுக்கென ஒரு நாடு இல்லாமல் உலகம் முழுவதும் அலைந்து திரிந்த யூதர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்துவிடாமல் இன்று பாலைவனத்தில் தங்களுக்கென ஒரு நாடு அமைத்து தங்கள் அயல்நாடுகளைவிட சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். ஒரு சமுதாயம் தங்கள் தனித்துவத்தை இழந்துவிடாமல் பாதுகாப்பதென உறுதிபூண்டுவிட்டால் அது கஷ்டமான காரியமல்ல. தமிழர்களும் தங்களைத் தயார் செய்துகொண்டு அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும்.

திரு. அம்பிகைபாகன் பதிலளிக்கையில் வித்தியாலயத்தின் வளர்ச்சியைச் சுருக்கமாகக் கூறினார். "கல்வித் திட்டமாற்றம் என்னவிதமான நிலையைக் கொண்டு வருமென்று இப்பொழுது கூறமுடியாதிருப்பினும் என்னென்ன நடைபெறுமென்றும் எதிர்பார்க்க முடியாது. என்றாலும் நாம் அவசரப்பட்டு எதையும் செய்து விடக்கூடாது" என்று திரு.அம்பிகைபாகன் கூறினார்.

**மாற்றத்தில் அபாயமில்லை**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு.ஸி.சுப்பிரமணியம் பழைய மாணவர் சங்கத்திற்கு வாழ்த்துக்கூறிப் பேசுகையில் பாடசாலைச் சட்டம் சம்பந்தமாக அபாயம் எதுவுமிருப்பதாகத் தமக்குத் தெரியவில்லையென்றார். நிர்வாகம் மட்டும்தான் மாறும். இராமகிருஷ்ண மடத்தை விட்டு வித்தியாலய நிர்வாகம் திரு.சோமசேகரம் கைக்குப்போகும். மற்றப்படி எல்லாம் பழையவை தான்" என்று கூறினார்.

திரு.செந்தில்நாதன் பதிலளித்தார்.

திரு.ச.வயிரமுத்து சகோதரக் கல்லூரிகளுக்கு வாழ்த்துக் கூறிப்பேசுகையில் கிறிஸ்தவக் கல்லூரிகள் சைவ சமயத்திற்கு அதிக சேவை புரிந்துள்ளனவென்றார்.

திரு.வி.எம்.ஆசைப்பிள்ளை பதிலளித்துப் பேசினார்.

விருந்தினர்களுக்கு வாழ்த்துக் கூறி திரு.ஸி.குமாரசாமி பேசினார்.

திரு.ஏ.ஈ.தம்பர் பேசுகையில், "ஆதி காலத்தில் கல்வி சந்நியாசிகளிடமிருந்து கிடைத்தது. மத்திய காலத்தில் திருச்சபைகள் கல்வியை அளித்தன. இன்றைய நவீன காலத்தில், கல்வியின் பொறுப்பை அரசாங்கமே பல நாடுகளிலும் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே அனாவசியமாக நாம் கலக்கமடையக் கூடாது" என்றார்.

ஈழநாடு 23 – 11 – 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைய மாணவர் சங்க இராப்போசன விருந்து - 1960



1960இல் இடம்பெற்ற அதிபர் அம்பிகைபாகனின் சேவைக்கால வெள்ளிவிழா நிகழ்வில் பழைய மாணவர் மன்ற செயலர் திரு. என். இராசநாயகம் வாழ்த்து மடல் வழங்கி கௌரவிக்கிறார். இவ் வைபவத்திற்கு தலைமை தாங்கிய சதாசிவம் அவர்களும் சௌற்றர் கனகநாயகம் அவர்களும் படத்தில் காணப் படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பிகைபாகன் அரங்கு உப அதிபர் சி. வைரமுத்து அவர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்படுகின்றது.



அரங்கு திறப்பு வைபவத்தில் உப அதிபர் வைரமுத்து அவர்கள் உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ப.மா.மன்ற ஆண்டு விழாவில் கல்லூரி அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் உரையாற்றுகிறார்.




நீண்டகாலம் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி. கு. ஷண்முகதாஸ் கௌரவிக்கும் முகமாக 1999இல் நடைபெற்ற ஆண்டுவிழாவில் ப.மா.மன்றத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் அவர்கள் கேடயம் வழங்கிக் கௌரவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப.மா.மன்ற வருடாந்த மதியபோசன விருந்து - 1998



1999ம் ஆண்டு மன்ற ஆண்டு விழாவை மங்கள விளக்கேற்றி மன்றத் தலைவர் ஆரம்பித்து வைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2002ஆம் ஆண்டு உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடலுக்கு பிரதம விருந்தினராக ப.மா.மன்ற தலைவர் திரு. செ. சுப்பிரமணியமும் பாரியாரும் கௌரவிக்கப்பட்டனர். திருமதி. பாக்கியலெட்சுமி சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைக்கின்றார்.



கல்லூரிக்கு வருகை தந்த இராமகிருஷ்ணமிஷன் துறவிகளை வண்ணை சிவன் கோவிலில் இருந்து பழைய மாணவர் வரவேற்று கல்லூரிச் சமூகத்தோடு ஊர்வலமாக கல்லூரிக்கு அழைத்து வரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப.மா.ம காரியாலய திறப்பு வைபவம் அதிபர் நா. வன்னியசிங்கம் அவர்கள் திறந்து வைக்கின்றார்.



யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் அவர்களை ப.மா.மன்றத்தினர் கல்லூரிக்கு அழைத்து வரவேற்ற போது தலைவர் திரு. மு. சிவலோகநாதன் மாலையணிவித்து அவரைக் கௌரவிக்கின்றார். மன்றச் செயலர் ப. காண்டீபன் அவர்களும், கல்லூரி அதிபரும் இங்கு காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் அவர்களுடன் ப.மா.ம நிர்வாக சபையினர்.




**2002ம் ஆண்டு ஆண்டு விழாவில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி. செ. பொன்னுச்சாமி தலைவரின் பாரியார் திருமதி பா. சுப்பிரமணியத்தால் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**2003ம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டியில் பழைய மாணவர்களான தீவக உதவிக் கல்விப் பணிப்பாளர் S. தில்லைநாதன் அவர்களும், கௌரவ விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் S. நடராஜலிங்கம் அவர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள்.**




**2003ம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அவர்கள் உரையாற்றுகின்றார். இவ்விழாவின் நிறுவுனர் உரையை பழையமாணவி திருமதி. கு. சண்முகதாஸ் நிகழ்த்துகிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்லூரி குடிநீர் விநியோகம் - பழைய மாணவர் பணியின் ஓர் அம்சம்



GTZ ஸ்தாபனம் நிறுவிய இருமாடிக் கட்டடத்தின் ஒரு பகுதியையும் அதனை GTZ அதிகாரிகள் திறந்து வைப்பதையும் காணலாம். இந்நிகழ்வில் ப.மா.ம செயலர் திரு.ப.காண்டீபன், பொருளாளர் திரு. சி. சிவகுமாரன் ஆகியோரும் மற்றும் மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2003ம் ஆண்டு விஜயதசமி அன்று ப.மா.ம ஆல் மாலை நேர பிரத்தியேக ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.




ஆங்கிலப் போதனா ஆசிரியை திருமதி. நி. குணபாலசிங்கத்துடன் ப.மா.ம உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப.மா.சங்க நிர்வாக சபை உறுப்பினர் 1989 - 1990



இருப்பவர்கள்: இடமிருந்து வலம்

திருமதி. ஜலிசா றவீக், திரு. S. நடேஸ்வரன், திரு. T. லோகநாதன் (செயலர்) திரு. W.S. செந்தில்நாதன், திரு. சி. சிவசரவணபவன் (தலைவர்), திரு. L. பக்கரிசாமி, திரு.M. ஜெகதீசன், திரு.R. சிவானந்தன் (பொருளாளர்), திருமதி. கு. ஷண்முகடாஸ்.

நிற்பவர்கள்: இடமிருந்து வலம்

திரு. T. கனகராஜா, திரு. S. பசுபதிப்பிள்ளை, திரு. K.V. ஜெயலிங்கநாதன், திரு. M. முக்தார், திரு. S. சக்திவேல், திரு. M. சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா பழைய மாணவர் சங்க நிர்வாகசபை

இடமிருந்து வலம் இருப்பவர்கள்

திரு. S. சீவரட்ணம் (செயலர்), திரு. L. பக்கீர்சாமி (தலைவர்), திரு. P. கனகராஜா (போஷகர்), திரு. S. வேலாயுதபிள்ளை (பொருளாளர்)

இடமிருந்து வலம் நிற்பவர்கள்

திரு. I. ஹரிகரன், திரு. V. ஸ்ரீரங்கநாதன், திரு. R. பிரதீப், திரு. S. இருதயகாந்தன், திரு. K. குமாரசூரியர்.

குடாநாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு இக்கட்டான அரசியல் சூழ்நிலை காரணமாக எங்கள் பழைய மாணவர் மன்றத்தின் 50 ஆண்டு கால ஆரம்ப கால நிகழ்வுகள், பணிகளின் செயற்பாடுகள் சம்பந்தமான படங்கள், தகவல்கள் பல தவறிப்போனமை வருத்தத்திற்குரியது. எங்களுக்குக் கிடைத்த சமீப காலத்திய பணிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை இங்கு தந்துள்ளோம்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு

# தயா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்டேர்ஸ்

# DAYA PRINTERS

*Computer Offset Printers*

**138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்ஞ்ஞானியாய் விஞ்ஞானியாய்
கவிஞராய்க் கலைஞராய்
மேதினியில் மேலவராய்
பண்பாடு ஆன்மீகமும் அறிவியலும் எமக்களித்த
கவின்மிகு கல்லூரித்தாயின் கவின்கழலதனை
பொன்விழா நாளதனில் பணிந்து அவளுக்கு
சிந்தையில் சிலையெழுப்பி என்றென்றும்
வணங்கிடுவோம் !
வாழ்த்திடுவோம் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org